YARL OSAI
# யாழ் ஓசை

ஓசை : 01 | இதழ்: 01 | வெள்ளிக்கிழமை 05.11.2010 | வார இதழ் | விலை : ரூபா 15.00




(படப்பிடிப்பு: எஸ்.எம். சுரேந்திரன்)

# நாட்டில் எங்கு வெற்றுக்காணி உள்ளதோ அங்கெல்லாம் குடியேற்றம்

## பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் கூற்றுக்கு அமைச்சர் விளக்கம்

நாட்டில் எப்பிரதேசத்தில் வெற்றுக்காணிகள் உள்ளனவோ அங்கு மக்கள் குடியேற்றப்படுவார்கள்.அதனையே டி.எஸ். சேனநாயக்கவும் மேற்கொண்டார். இதன்போது சிங்களவர்கள் தமிழர்கள் முஸ்லிம்கள் என இனப்பாகுபாடு பார்க்கமுடியாது. இந்த நாட்டின் ஒவ்வொரு அங்குலமும் அனைத்து இனங்களுக்கும் சொந்தமாகும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. இலங்கையில் எந்தவொரு பிரதேசமும் தனியொரு இனத்திற்குச் சொந்தமானதல்ல. இதுவே அரசாங்கத்தின் கொள்கையாகும். எனவே இன விகிதாசார

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.ரயில் நிலையத்தில் தங்கியுள்ள சிங்கள மக்களது விடயத்தில் அரச அதிபரிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்தில் தம்மைக் குடியேற்றக்கோரி யாழ். ரயில் நிலையத்தில் தங்கியுள்ள சிங்கள மக்களின் நிலைமை தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபரிடம் அறிக்கை ஒன்றைக் கோரியுள்ளோம் என்று மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ

(6ஆம் பக்கம் பார்க்க)

Express Newspapers (Cey.)Ltd. P.O.Box: 160, Colombo, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர்களின் விடுதலை தொடர்பில் அவதானம் செலுத்தப்படவேண்டும்

**நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் மட்டு. - திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை சாட்சியம்**



கடந்தகாலங்களில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலை தொடர்பில் அவதானம் செலுத்தப்படவேண்டும். மேலும் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புபடாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விரைவாக விடுதலை செய்யுமாறு கோருகின்றோம் என்று மட்டு. -32திருமலை மறைமாவட்ட ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வில் கலந்துகொண்டு சாட்சியமளிக்கையிலேயே ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வில் நேற்று முன்தினம் கத்தோலிக்க திருச் சபையின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு சாட்சியமளித்தனர்.

ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அங்கு மேலும் கூறுகையில்,

கடந்த காலங்களில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் எதிர்காலம் உறுதிப்படுத்தப்படாமல் இருக்கின்றது. எனவே பயங்கரவாத நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புபடாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விரைவாக விடுதலை செய்யுமாறு கோருகின்றோம்.

அத்துடன் மலையகப் பகுதிகளிலும் சந்தேகத்தின் பேரில் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். எனவே இவர்கள் தங்கள் அப்பாவித்தன்மையை நி'ரூபிக்க சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் குடும்ப உறவினர்கள் படுகின்ற கஷ்டமானது வார்த்தைகளினால் விபரிக்க முடியாத விடயமாகும். தாய் தந்தை அல்லது உறவினர்கள் தங்கள் அன்புக்குரியவர் தடுத்து வைக்கப்பட்டதாக அறிந்ததும் அவர்களை கண்டு கதைப்பதற்கு விரும்புவார்கள். எனவே பெற்றோர்களுக்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை பார்வையிடுவதற்கான உரிமை உறுதிப்படுத்தப்படவேண்டும். அவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பெற்றோர் அறியவேண்டும்.

**பேராயர் மல்கம் ரஞ்சித்**

பேராயர் மல்கம் ரஞ்சித் சாட்சியமளிக்கையில்,

இனப்பிரச்சினை விடயத்துக்கு தீர்வாக அரசியல் தீர்வுத்திட்டம் 'ஒன்று அவசரமாக முன்வைக்கப்படவேண்டும் என்று நாங்கள் நம்புகின்றோம். அதன் மூலமே வன்முறைகளுக்கான காரணங்களை நீக்கிவிட முடியும். அத்துடன் சமூகங்களுக்கு இடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்பவும் சந்தேகங்களையும் நம்பிக்கையின்மையையும் போக்கவும் முடியும் என்பது எமது நம்பிக்கையாகவுள்ளது.

நாட்டின் அனைத்து பிரஜைகளும் மும்மொழிகளையும் கற்கவேண்டியது அவசியமாக்கப்படவேண்டும். பாடசாலைகளில் சிறுவர்கள் மத்தியிலிருந்தே இந்த நடைமுறையை கொண்டுவரவேண்டும். இதன்மூலம் சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை சிறந்த முறையில் ஏற்படுத்த முடியும் என்று நம்புகின்றோம். தேசிய ஒற்றுமையையும் ஏற்படுத்தலாம்.

மேலும் அரச நிர்வாக சேவை சிங்கள மொழி பேசும் உத்தியோகத்தர்களினாலேயே நிரப்பப்பட்டுள்ளது என்று தெரிகின்றது. இந்த நிலைமை மாற்றமடைந்து தமிழ் பேசும் அதிகாரிகள் அரச நிர்வாக சேவையில் அதிகளவில் உள்ளீர்க்கப்படவேண்டும்.

இதேவேளை வடக்கு கிழக்கு மாகாணங்களின் மக்கள் தொகையியலை மாற்றக்கூடிய வகையில் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு முயற்சிக்கப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அதாவது இது மறைகமுகமான ஆதரவுடனான புதுவிதமான அபாயகரமான விடயமாக இருக்கின்றது என்றார்.

பாதிரியார் ஜோர்ஜ் சிகாமணி சாட்சியமளிக்கையில்,

வடக்கு கிழக்கில் இயல்பு நிலைமை முன்னேற்றமடையவேண்டும். அதியுயர் பாதுகாப்பு விடயம் தொடர்பில் ஆராய வேண்டியுள்ளது. வடக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்காக மக்களின் காணிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் பயிர்ச் செய்கை நிலங்களும் பெறப்பட்டுள்ளன. எனவே இவற்றை படிப்படியாக விடுவிப்பது தொடர்பில் விரிவாக ஆராயப்படுவது அவசியமாகும்.

வடக்கில் இடம்பெயர்ந்த நிலையில் வவுனியா முகாம்களில் தங்கியுள்ள மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படவேண்டும். அதாவது மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படுவதே மீள்குடியேற்றமாகும். எனினும் இன்னும் பல இடங்கள் பாதுகாப்பு தரப்பின் கீழ் உள்ளன. மீள்குடியேறும் பலர் தங்கள் காணிகள் எடுக்கப்பட்டுள்ளதை அறிந்துள்ளனர். எனவே இவ்வாறான மக்களுக்கு அரச காணிகளையாவது வழங்குவது அரசாங்கத்தின் கடமையாகும் என்றார்.

கத்தோலிக்க திருச் சபையின் சட்ட ஆலோசகர் சமல் பெரேரா சாட்சியமளிக்கையில்

நாடு நீண்டகாலம் அவசரகால சட்டத்துக்குள் இருக்கின்றது. எனவே யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் அவசரகால சட்டத்தை நீக்குவதுடன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் விதிகளை அகற்றுவது தொடர்பில் ஆராய முடியும் என்று நம்புகின்றோம்.

நாட்டில் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு இயல்பு நிலை தோன்றியிருக்குமாயின் அவசரகால சட்டம் எதற்கு? பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் நாட்டின் நிலைமைகளுக்கு ஏற்ப ஆராய்ந்து முடிவெடுக்கலாம். இதேவேளை யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் யுத்தம் நடைபெற்ற பிரதேசங்களில் சிவில் நிர்



வாகத்தை ஏற்படுத்துவது அவசியமாகும் என்றார்.

# அரசாங்க தரப்பும் தமிழ் கூட்டமைப்பும் சில தினங்களில் சந்திக்கும் சாத்தியம்

## பல விடயங்கள் குறித்து ஆராயப்படும்

(நமது நிருபர்)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்க தரப்பினருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று சில தினங்களில் நடைபெறவுள்ளதாக தெரியவருகின்றது.

இரண்டு தரப்பினருக்கும் இடையிலான சந்திப்புக்கான திகதி தொடர்பில் ஆராயப்பட்டுவருவதாக அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவர் அண்மையில் குறிப்பிட்டிருந்தார். சந்திப்புக்கான திகதி விரைவில் தீர்மானிக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

இரு தரப்பினருக்குமிடையிலான சந்திப்பின்போது பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. விசேடமாக இடம்பெயர்ந்துள்ள மக்களின் மீள்குடி யேற்ற விடயம் மற்றும் மீள்குடியேற்றப்பட்டுள்ளவர்களுக்கான வசதிகள் தொடர் பில் கலந்துரையாடப்படும் என்று தெரிகின்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச்சு நடத்த அரசாங்கம் தயார் என்று அரசாங்க தரப்பும் அரசாங்கம் அழைப்பு விடுத்தால் பேசுவோம் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் அண்மைக்காலங்களில் தெரிவித்து வந்தன. இந்த நிலையிலேயே இரண்டு தரப்பினருக்கும் இடையிலான சந்திப்பு விரைவில் நடைபெறலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அண்மையில் இலங்கைக்கான இந்தியாவின் உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்தாவை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தனர்.

இந்த சந்திப்பின்போது அரசியல் தீர்வு விடயம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பில் விரிவாக இந்திய உயர்ஸ்தானிகரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் பேச்சு நடத்தியிருந்தனர். அரசாங் கம் பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றிய அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ் த்தேசிய கூட்டமைப்பு எதிர்த்திருந்தது.

மேலும் 18 ஆவது திருத்தத்தின் கீழ் வருகின்ற பாராளுமன்ற பேரவையின் அங்கத்தவராக தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பி. சுமந்திரனை எதிர்க்கட்சி தலைவர் நியமித்தபோது அதனையும் கூட்டமைப்பு நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தின் இறுதிக்காலப்பகுதியில் பொது மக்களை புலிகள் மனிதக் கேடயங்களாகவே பயன்படுத்தினர்

## யாழ். அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார்

புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து புலிகளின் அனுமதியின்றி அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு வர முயன்ற மக்கள் மீது புலிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஆனால் வெள்ளைக் கொடியுடன் இராணுவத்திடம் சரணடைய வந்த பொது மக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை என்றே எனக்கு தகவல்கள் கிடைத்தன என்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தில் நேற்று நடைபெற்ற கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வில் கலந்து கொண்டு சாட்சியமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வு அதன் தலைவர் முன்னாள் சட்டமா அதிபர் சி.ஆர்.டி. சில்வா தலைமையில் நேற்று பிற்பகல் நடைபெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் :-

யுத்தம் நடைபெற்ற காலத்தில் நான் முல்லைத்தீவில் மக்களுடன் இருந்தேன். பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் நான் மக்களுக்கு சேவை செய்து வந்தேன். அதாவது 2002 ஆம் ஆண்டு நான் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபராக சென்றேன். பின்னர் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபோதும் அதற்கு பின்னர் யுத்தம் நடைபெற்றபோதும் நான் முல்லைத்தீவு மக்களுக்கு சேவைகளை ஆற்றிவந்தேன். அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அங்கு முன்னெடுத்தோம்.

யுத்தகாலத்தில் புலிகள் பொது மக்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். நானும் பொது மக்களுடன் இருந்தேன். பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் அம்மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்களை பெற்றுக்கொடுத்துவந்தோம். அரச பாதுகாப்பு படையினரின் உதவி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மக்களின் தேவைகளை நிறைவேற்றி வந்தோம். ஐக்கிய நாடுகள் சபையும் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வந்தது.

யுத்தகாலத்தில் அங்கு பாதுகாப்பு அதிகாரியாக இருந்த ஜகத் ஜயசூரிய எமக்கு ஒத்துழைப்பு வழங்கினார். யுத்த பிரதேசத்துக்கு உணவும் மருந்துப் பொருட்களும் அனுப்பப்பட்டுவந்தன. அப்போதைய அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திவாரட்ண உணவு மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்பிக்கொண்டிருந்தார்.



அதாவது மூன்று மாதங்களுக்கு தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருட்களை கையிருப்பில் இருக்கும் வகையில் பேணுமாறு எனக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. அதனை நான் பேணி வந்தேன். மூன்று மாதங்களுக்கு தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருட்களை கையிருப்பில் இருப்பதை உறுதிப் படுத்தியபடிவந்தேன். யுத்தகாலத்தில் வன்னிப் பகுதியில் சுமார் மூன்று லட்சத்து 50 ஆயிரம் மக்கள் இருந்தனர். அவர்களில் பலர் பல வழிகளில் அரச கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் வந்தனர். அதாவது மன்னார் கிளிநொச்சி, நெடுங்கேணி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களின் மக்கள் அனைவரும் வன்னியில் இருந்தனர். இந்நிலையில் பாதுகாப்பு வலயம் தொடர்பில் மக்களை அறிவுறுத்துமாறு பாதுகாப்பு தரப்பு எனக்கு அறிவித்தது. நான் அதனை பொது மக்களுக்கு பிரகடனம் செய்தேன். ஜனவரி 22 ஆம் திகதி நான் வவுனியாவுக்கு வந்தேன். எனினும் எனது அலுவலக அதிகாரிகளான பலர் யுத்தம் நடைபெற்ற பகுதியில் இருந்தனர். முக்கியமாக எனது அலுவலர்கள் அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு வருவதற்கு புலிகள் அனுமதிக்கவில்லை. என்னையும் செல்வதற்கு அனுமதிக்க முடியாது என்று கூறினர். ஆனால் நான் சுகயீனம் அடைந்துள்ளதால் கொழும்பிலும் வவுனியாவிலும் மருத்துவ சோதனைகளை செய்யவுள்ளதாக கூறி வந்தேன். எனினும் பின்னர் வவுனியாவில் தற்காலிக அலுவலகம் ஒன்றை அமைத்து நான் அரசாங்க அதிபர் பணிகளை மேற்கொண்டுவந்தேன். எனது அலுவலக அதிகாரிகள் யுத்தம் நடந்த பிரதேசத்தில் இருந்த நிலையில் அவர்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தேன் என்றார்.

## யாழ். ஓசைக்கு எனது நல்லாசிகள்

வீரகேசரி பத்திரிகை நிறுவனத்தின் யாழ் ஓசை என்னும் புதிய வாரப் பத்திரிகை வெளிவருவது யாழ். மக்களுக்கு மட்டுமன்றி இலங்கை வாழ் வாசகர்களுக்கும் மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். வீரகேசரிப் பத்திரிகை ஏற்கனவே பல்வேறு சிறப்பம்சங்களுடன் தமிழ் வாசகர்களின் மனதில் தனி இடம் பெற்ற பத்திரிகையாகும். யாழ் ஓசை வாரப்பத்திரிகை நடுநிலைமையையும் உண்மைத்தன்மையையும் மேற்கொண்டு பல்வேறு வாசகர் பிரிவினருக்கும் பயனளிக்கக்கூடிய நல்ல விடயங்களை தாங்கி வெளிவர வேண்டுமென என்னுடைய நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜி. ஏ. சந்திரசிறி
ஆளுநர், வடமாகாணம்

# 10 வயது சிறுமியது குழந்தையின் தந்தை 13 வயது சிறுவன்


தாயுடன் சிறுமி

10 வயதில் குழந்தையொன்றை பிரசவித்து சர்வதேச ரீதியில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள சிறுமியின் குழந்தையின் தந்தை 13 வயது சிறுவன் என்ற இரகசியம் அம்பலமாகியுள்ளது. ரோமானிய கிப்ஸி வம்சாவளியான எலியனோர் (எல்னா) என்ற மேற்படி சிறுமி, ரோமானியாவில் இருக்கும்போது குறிப்பிட்ட சிறுவனுடன் காதல் கொண்டு கர்ப்பம் தரித்ததாகவும் தற்போது அச்சிறுவன் சிறுமியிடமிருந்து பிரிந்து ரோமானியாவில் வசிப்பதாகவும் சிறுமியின் தாயாரான ஒலிம்பியா தெரிவித்தார். தனது சின்னச் சிறு மகள் குழந்தையொன்றை பிரசவித்து இருப்பது தனக்கு மகிழ்ச்சியைத் தருவதாக ஒலிம்பியா கூறினார். தனது மகளும் அவளது காதலனான சிறுவனும் ஒன்றாக ஒரே வீட்டில் வசிப்பதாக ஆரம்பத்தில் சர்வதேச ஊடகங்களில் வெளியான செய்திகளுக்கு அவர் மறுப்புத் தெரிவித்தார். பிறந்த குழந்தைக்கு நிகொலெட்டா என பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் சிறுமி எலியனோரையும் பிறந்த குழந்தையையும் சிறுமியின் குடும்பத்தினர் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர்.இச்சிறுமி ஸ்பெயினின் லெப்றிஜா நகரிலுள்ள 3 மாடிக்கட்டிடக் குடியிருப்பில் வசிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

13 வயதுக்கு கீழ்பட்ட ஒருவருடன் பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுவது சிறுவர் துஷ்பிரயோக குற்றச் செயலாக கருதப்படுகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் 9 வயதான சீன பாடசாலைச் சிறுமியொருவர் ஆண் குழந்தையொன்றை பிரசவித்தார்.

# 9000 ஸ்ரேலிங் பவுணை கட்டணமாக பெற்று இத்தாலிய பிரதமருடன் இரு இரவுகளை கழித்தேன்

## விலைமாதான நடியா மக்ரியின் குற்றச்சாட்டால் பரபரப்பு

தனது பாலியல் உல்லாச வாழ்க்கையின் மூலம் பெரும் சர்ச்சைக்குள்ளாகியுள்ள இத்தாலிய பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கொனி மீது உயர்மட்ட விலைமாது ஒருவர் புதிதாக பாலியல் குற்றச்சாட்டொன்றை சுமத்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

9000 ஸ்ரேலிங் பவுணை கட்டணமாக பெற்று பெர்லுஸ்கொனியுடன் (74 வயது) இரு இரவுகளைக் கழித்ததாக நடியா மக்ரி (28 வயது) என்ற இந்த விலைமாது உரிமை கோரியுள்ளார். அத்துடன் இதன்போது தனக்கு ஆபரணங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டதாக அவர் கூறினார்.


பெர்லுஸ்கொனி

பெர்லுஸ்கொனி விடுமுறை வாசஸ்தலத்தில் பல பெண்களுடன் பாலியல் உறவில் ஈடுபட்டது தொடர்பில் தனக்குத் தெரியும் எனவும் நடியா மக்ரி தெரிவித்தார்.

தனது விடுமுறை வாசஸ்தலத்தில் நடைபெறும் கேளிக்கை விருந்துபசாரங்களில் கலந்து கொள்ள பெண்களுக்கும் விலைமாதுகளுக்கும் அழைப்பு விடுத்து, அவர்களுக்கு மரிஜுவானா போதைப்பொருளை வழங்கி அவர்களுடன் பெர்லுஸ்கொனி பாலியல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக நடியா மக்ரி கூறினார். மேற்படி மரிஜுவானா போதைப் பொருள் பெர்லுஸ் கொனியின் உத்தியோகபூர்வ விமானமொன்றில் வைக்கப்பட்டிருந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.


நடியா மக்ரி

ஏற்கனவே திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ரூபி ருபாகோரி என்ற நடனமாதை பொலிஸ் தடுப்புக் காவலிலிருந்து மீட்டு தனது மாளிகையில் அவருடன் பொழுதைக் கழித்ததாக குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள பெர்லுஸ்கொனிக்கு நடியா மக்ரியின் இந்த அதிரடி அறிவிப்பு பெரும் அரசியல் நெருக்கடியை தோற்றுவிப்பதாக உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

பணத்தை செலுத்தி விலைமாதுடன் பாலியலில் ஈடுபட்டமை மரிஜுவானா போதைப் பொருளை வழங்கியமை போன்ற பெர்லுஸ்கொனிக்கு எதிரான இந்த புதிய குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில், அவர் பதவி விலக வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாக நேரிடும் என கூறப்படுகிறது.

இந்நிலையில் பெர்லுஸ் கொனியின் சட்டத்தரணி நிக்கொலோ கெடினி இந்த குற்றச்சாட்டுகளுக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yarl Osai
யாழ் ஓசை
*2010 நவம்பர் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை*
**இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

# உங்கள் கரங்களில் 'யாழ் ஓசை'

வட பகுதி வாசகர்களின் மிகுந்த அபிமானத்தைப் பெற்ற 'வீரகேசரி' பத்திரிகை தனது மற்றுமொரு பிரசுரமான 'யாழ் ஓசை'யை இன்று முதல் வாசகர்களுக்கு வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கின்றது.

இலங்கையின் பத்திரிகை வரலாற்றில் எண்பது ஆண்டு காலத்தை மிகவும் வெற்றிகரமான முறையில் பூர்த்திசெய்துள்ள வீரகேசரி தமிழ்த் தேசிய நாளிதழ், அன்று தொட்டு இன்று வரை தமிழ் பேசும் மக்களின் நெஞ்சம் நிறைந்த பத்திரிகையாக வெளிவருவது மாத்திரமன்றி, அவர்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் உலக அரங்குக்குக் கொண்டுசென்று அதற்கு நிவாரணம் தேடுவதில் தன்னிகரற்ற பணியை ஆற்றிவருகிறது.

அந்த வகையில், வாசகர்களின் தளராத ஒத்துழைப்புக் காரணமாக மிகவும் துல்லியமான செய்திகளை தரமான வழியில் வழங்குவது மாத்திரமன்றி, நவீன இயந்திர சாதனங்களின் வசதியுடன் அவற்றைத் தெளிவாகப் பிரசுரித்து வாசகர்களை திருப்திப்படுத்துவதிலும் வீகேசரி பத்திரிகை முன்னணியில் திகழ்கின்றது.

அத்துடன், இலங்கையில் மிகவும் பழைமை வாய்ந்த தமிழ்த் தேசிய நாளிதழும் முதற்தர பத்திரிகையுமான வீரகேசரி அனைத்து மட்ட வாசகர்களையும் திருப்திப்படுத்தும் வகையில் பதின்நான்கு பிரசுரங்களை வெளியிட்டு சாதனைபடைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

விசேடமாக, பிராந்திய ரீதியான வாசகர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம், என பிராந்தியப் பதிப்புக்களை வெளியிட்டு வந்த வீரகேசரி வட பகுதி மக்களின் தனித்துவம், பாரம்பரியம், பண்பாடு, கலை - இலக்கிய இரசனை, அரசியல் சார்ந்த பின்னணி என்பவற்றை பூரணமாக வெளிக்கொணரும் நோக்குடன் 'யாழ் ஓசை' என்ற இந்த புதிய பிரசுரத்தை வாசகர்கள் முன் அங்குரார்ப்பணம் செய்துவைப்பதில் பெருமிதம் கொள்கின்றது.

இதன்மூலம் 'யாழ் ஓசை' முற்றிலும் மாறுபட்ட மண்வாசனை மிக்கதோர் பத்திரிகையாக வெளிவருவது மாத்திரமன்றி, வட பகுதியின் பட்டிதொட்டி தோறும் உள்ள பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து, அதற்கு நிவாரணம் தேடும் ஒன்றாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பத்திரிகை உலகில் கடந்த 80 வருடகால வரலாற்றைக் கொண்டு தமிழ் பேசும் மக்கள் அனைவரும் பெருமைகொள்ளக் கூடிய வகையில் தலைநிமிர்ந்து நிற்கும் தமிழ்த் தேசிய நாளிதழான 'வீரகேசரி' வாசகர்களுக்கு தொடர்ந்தும் பல்வேறு சேவைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற நன்றியுணர்வுடன் புதிய புதிய பிரசுரங்களை வெளியிட்டு வருகின்றது. அந்தவகையில், உதயமாகியுள்ள 'யாழ் ஓசை' க்கு வாசக பெருமக்கள் தங்கள் ஆதரவைப் நல்குவர் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

வட பகுதி தமிழ் மக்களின் சிறந்த பாரம்பரியங்கள் இன்றும் சர்வதேச ரீதியில் போற்றப்பட்டுவரும் நிலையில், நமது இளம் சந்ததியினர் அது குறித்து அறியாதவர்களாகவே இருந்துவருகின்றனர். அவ்வாறான நிலையில், உலகெங்கும் பரந்து வாழும் எமது இளம் சந்ததியினருக்கு வட பகுதியின் பாரம்பரியங்களை எடுத்துச் செல்வதிலும் 'யாழ் ஓசை' தனது பணியை செவ்வனே முன்னெடுக்கும்.


இன்றைய நவீன உலகில் செய்திகள் எங்கும் பரந்து விரிந்து நொடிப்பொழுதில் மக்களின் செவிகளை வந்தடையும் ஒன்றாக மாறிவிட்டதோர் சூழலில் 'யாழ்ஓசை' முற்றிலும் மாறுபட்ட யாழ் .மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் தனித்துவமான செய்திகளை தன்னகத்தே கொண்டு மக்கள் கரங்களில் வலம்வருவதே அதன் அடிப்படை நோக்கமாக இருக்கும் என்பதை இக்கட்டத்தில் கூறி வைப்பது அவசியமாகும்.

அது மாத்திரமன்றி, வடக்கிலுள்ள இளம் வயதினரின் தேவையறிந்து அதற்கென விசேடமானபகுதிகளையும்பிரசுரங்களையும் 'யாழ் ஓசை' கொண்டிருக்கும். வட பகுதி மக்களைப் பொறுத்தமட்டில் நிறைந்த வாசிப்புப் பழக்கமும், சிறந்த அறிவுத் தேடலும், ஆழமான சிந்தனை நோக்கும் கொண்டவர்களாக இருப்பதால் அதற்கேற்ப சிறந்த பிரசுரங்களை உருவாக்கவேண்டியதும் காலத்தின் கட்டாயமாகும். அவர்களின் அறிவுத்தேடலுக்கு விருந்தாக 'யாழ் ஓசை' தனது தனித்துவத்தைப் பேணும் என்பதில் சந்தேகமில்லை.

வீரகேசரி பிரசுரங்களுக்கு வட பகுதி வாசகர்கள் கொடுத்துவந்த சளைக்காத ஆதரவும் இன்று 'வீரகேசரி' நிறுவனம் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி இருப்பதற்கு பிரதான காரணமாகும். அதேபோன்று, 'யாழ் ஓசை'க்கும் வட பகுதி வாசகர்கள் தங்கள் ஆதரவைத் தந்து அது தழைத்தோங்க உதவ வேண்டும் என்பதே எமது தாழ்மையான வேண்டுகோளாகும்.

இன்று தொடக்கம் உங்கள் கையில் தவழப்போகும் 'யாழ் ஓசை'யை அரவணைத்து, அதனை சரியான முறையில் தட்டி வளர்க்கவேண்டிய பொறுப்பு வாசகப் பெரு மக்களான உங்கள் ஒவ்வொருவரையும் சார்ந்தது என்பதை கூறிக்கொள்வதில் பெருமிதம் அடைகின்றோம். அந்தவகையில், 'யாழ் ஓசை'யின் வளர்ச்சிக்கு நீங்கள் சாத்தியமான ஒத்துழைப்பை நல்குவீர்கள் என்பது எமது அசையாத உறுதியாகும்.

# அறியாமையிருள் அகன்றநாள் தீபாவளி



இந்துக்கள் இறைவனை ஒளிவடிவில் பண்டு தொட்டு இன்று வரை வழிபட்டு வருகின்றார்கள். சூரிய வெளிச்சம் நிறைந்த பகலில் கூட திருவிளக்கேற்றி வழிபாடு செய்வதைக் காணலாம். மங்கல வைபவங்களில் மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பிப்பதை பார்க்கின்றோம். ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதி என்றும் தோற்றச் சுடரொளியாய் என்றும் கற்பனை கடந்த சோதி என்றும் திருமுறை பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளதை நோக்குவோம்.

தீபாவளித் தினத்தில் தீபங்கள் ஏற்றி வழிபாடு செய்யப்படும். தீபம் தருவது ஒளி. இருள் நிறைந்த போது ஒளியேற்றி இருளை நீக்குகின்றோம். அதுபோல அறியாமையாகிய இருளை அறிவொளி கொண்டு நீக்க வேண்டும் என்பதை இதன் மூலம் தெரிந்து கொள்ள முடிகின்றது.

ஐப்பசி மாதத்து அமாவாசை தினத்திற்கு முதல் நாளான சதுர்த்தசியில் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படும். இந்துக்கள் இந் நாளில் எண்ணெய் தேய்த்து நீராடி புத்தாடையணிந்து இறைவழிபாடு செய்வார்கள். தேய்க்கும் எண்ணெயில் லஷ்மி கடாட்சமும், நீரில் கங்கையின் புனிதமும் கலந்திருக்கும் என்பது நம்பிக்கை. இல்லங்களில் தீபங்கள் ஏற்றி வழிபடுவதால் இப்பண்டிகைக்கு தீபாவளி என்று பெயர் வந்ததை அறிவோம்.

தீபம் எப்பொழுதும் மேல் நோக்கி எரிந்து பிரகாசத்தைக் கொடுக்கும் தன்மையுடையது. அது போல நாமும் உயர் சிந்தனைகள் செயல்கள் மூலம் அன்பு வழி நின்று உயர் நிலையடைய வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கொடுமைகள் செய்த நரகாசுரன் அழிக்கப்பட்டான். அதர்மத்தைத் தர்மம் வென்றது. பகவத் கீதையிலே கிருஷ்ண பகவான், எப்பொழுதெல்லாம் தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்குகின்றதோ அப்பொழுதெல்லாம் தான் தோன்றி தீயவற்றை அழித்து நல்லவர்களைக் காப்பாற்றுவதாகக் கூறியுள்ளார்.

நரகாசுரன் கதையூடாகத் தெளிவாகும் விடயங்கள் பலவுள. அதர்மம் என்றும் நிலைத்திருக்க முடியாது என்பதும் தர்மம் வெல்லும் என்பதும் தெளிவாகின்றன.

மனிதனுக்குள்ளேயே அசுரக் குணங்கள், நற்குணங்களும் உள்ளன. அசுரக் குணங்களின் வெளிப்பாடாக வன் சொல், வன் செயல், துன்பம், அமைதியின்மை என்பன உருவாவதைக் காணலாம்.

ஆடி மாதத்திலிருந்து மார்கழி மாதம் வரையான காலப் பகுதியை தட்சிணாயனம் என்றும் இது தேவர்களுக்கு இராப்பொழுதென்றும் கூறுவர். இவ்விருள் காலப்பகுதியிலேயே மகிஷாசுர வதம் நரகாசுர வதம், சூரசங்காரம் போன்றவை நடை பெற்றதை அறியலாம். இருள் சூழ்ந்த வேளை உருவான அறியாமை இருள் இறையருளால் நீக்கப்பட்டு அமைதியொளி நிறைந்ததை இவை எடுத்துக் காட்டுகின்றன.

உள்ளம் எனும் கோயிலிலே உறைகின்றான் இறைவன் என்று கூறுவார்கள். மனிதனுக்குள்ளே இருக்கின்ற பேரொளியே இருளாகிய பேராசை, பொறாமை, ஆணவம்,வெகுளி என்பன மறைக்கின்றன. ஐம்புலன்களை அடக்கி மனதை வழிப்படுத்தினால் அறியாமையாகிய இருளை நீக்க முடியும். அறியாமையாகிய இருளகன்றாலல்லாது அகத்திலுள்ள ஒளியைக் காண முடியாதென்று யோகிகள், ஞானிகள் கூறுகின்றார்கள்.

தீபாவளியின் புனிதத்தை, கருத்தை, உட்பொருளைத் தெளிவாக அறிந்தவர்கள் இத்தினத்தில் மது, மாமிசம் போன்றவற்றை உட் கொண்டு தீபாவளியின் புனிதத்திற்கு களங்கம் ஏற்படுத்த மாட்டார்கள்.

நிறைவாகச் சோகத்தைச் சுமந்து துன்பத்தில் மிதந்து இல்லங்களை இழந்து இருக்க இடமின்றி இன்னலுறும் மக்கள் நிம்மதியுடன் தங்கள் சொந்த ஊர்களில் வாழ வழிகாட்ட வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்

**-குளப்பிட்டி . க. அருமைநாயகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளித்திருநாளில் வெளிவரும் 'யாழ்ஓசை' வாரப்பத்திரிகைக்கு எனது வாழ்த்துக்கள்

**யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர்**

இனிய தீபாவளித்திருநாளில் இருந்து வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் வெளிவரவுள்ள வீரகேசரி நிறுவனத்தின் யாழ்ப்பாண வெளியீடான 'யாழ் ஓசை ' எனும் புதிய வாரப் பத்திரிகை வெளியீட்டிற்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அச்சமற்ற அமைதியான சூழல் பூத்திருக்கும் இவ்வேளையில் அனைத்து மக்களுக்கும் தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆன்மீக வாழ்விலும் உலகியல் வாழ்விலும் வரலாற்றில் என்றுமில்லாத சவால்களைச் சந்தித்த பின்னர் நிலைமாறும் காலம் உதயமாகியுள்ளது. இவ்வரிய வாய்ப்பை முதலீடாகக் கொண்டு இம் மாவட்டத்தின் மீள் கட்டுமாணப் பணிகளையும் அபிவிருத்தியையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதர்மம் அழிந்து தர்மம் நிலைபெற்ற இத்தீபத்திருநாள் அனைத்து மக்களுக்கும் ஆன்ம ஒளியைக் காட்டுவதாகவும் உற்சாகம் ஊட்டி ஒளியேற்றுவதாகவும் விளங்குகிறது.

தெய்வீகத் திருநாளான தீபாவளித் திருநாளானது தீமைகளுக்கு எதிரான சாத்விக சமிக்ஞை பொதிந்ததாக அமைய வேண்டும் எனவும் சட்டம் ஒழுங்கு நீதி நியாயம் உண்மை சகிப்புத்தன்மை விடாமுயற்சி முதலானவற்றின் பிரதிமையாக அமைய வேண்டும் எனவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து இம்மாவட்ட மற்றும் அனைத்து மக்களுக்கும் சுபீட்சமான எதிர்காலம் அமையவும் இனிய தீபாவளித்திருநாளில் இருந்து வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் வெளிவரவுள்ள வீரகேசரி நிறுவனத்தின் யாழ்ப்பாண வெளியீடான 'யாழ் ஓசை' எனும் புதிய வாரப் பத்திரிகை வெளியீட்டிற்கும் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப் பத்திரிகையானது வாசகர்களின் எதிர்பார்ப்புகளுக்கமைய உண்மையுடனும் நடுநிலைமையுடனும் திகழ்ந்து சமூகத்தை நல்வழிப்படுத்தும் ஓர் ஊடகமாக விளங்கவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இனித்திடும் இன்பத் தீபாவளிப்பண்டிகைக்கும் 'யாழ் ஓசை' க்கும் எனது வாழ்த்துக்கள்

**ஆதீன குருமுதல்வர்**

இன்று தீபாவளித் திருநாளுடன் 'யாழ். ஓசை' வெளிவரும் இந்தத் திருமிகு நன்னாளில் இலங்கையில் வாழ்கின்ற அனைத்து தமிழ் மக்களும் இன்புற்று நலமுடன் வாழ எல்லாம் வல்ல தொல்லை வினை தீர்க்கும் நல்லைக்கந்தன் பேரருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றேன் என தனது வாழ்த்துச் செய்தியில் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாசார்ய சுவாமிகள் தெரிவித்திருக்கிறார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

தீபங்களை வரிசையாக ஏற்றிவைத்து அதிலே இறைவனின் ஒளியைக் கண்டு வணங்கியும் புத்தாடைகளை அணிந்து மகிழ்வுற்றும் தித்திப்பு உணவுப் பண்டங்களைக் கூடியிருந்து மகிழ்ச்சியுடன் உண்டும் இன்புற்றிருக்கும் இனிய நன்னாள் இன்றைய தீபத்திருநாள்

ஆதலால் நரகாசுரன் கேட்டுக் கொண்டபடி தான் இறக்கும் நாளில் எல்லோரும் இற்றை நாள்வரை பட்ட துன்பம் தொலைந்து என்றும் மகிழ்வுடன் குதூகலித்திருக்க வேண்டும் என்ற ரீதியில் ஈழம் வாழ் மக்கள் இன்புற்று மகிழ்ந்திருக்க எமது நல்லாசிகளை நல்கி அனைவருக்கும் இறையாசி கிடைக்கப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

ஆண்டிலோர் தீபாவளிப் பண்டிகை யாம் அதை ஆண்டியும் கொண்டாட வேண்டுமாம் என்றபடி எல்லோரும் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு' என அனுப்பி வைத்துள்ள ஆசி செய்தியில் அவர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

# தீபாவளித் திருநாளில் யாழ்.ஓசை வெளிவருவது மட்டற்ற மகிழ்ச்சி

**கல்வியமைச்சின் வடமாகாண செயலாளர்**

வீரகேசரி நிறுவனத்தின் யாழ்.வாசகர்களுக்கென 'யாழ்ஓசை' எனும் வார இதழ் தமிழர் திருநாளாம் தீபாவளித் திருநாளில் வெளிவருவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. என வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.வாசிகருக்கான விசேட செய்திகளையும் வரலாறு, கல்வி, கலை, பண்பாடு, அரசியல் தொடர்பான கட்டுரைகளையும் தனக்கேயுரிய பாணியில் வெளிப்படுத்தும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

இன்றை சூழலில் மக்களின் தேடலைப் பூர்த்தி செய்யும் வகையிலும் காலத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையிலும் அமைந்துள்ள இந்த வாரப் பத்திரிகை எமது மக்களின் அபிலாசைகளை எண்ணங்களை நடுநிலையாக வெளிப்படுத்தும் சஞ்சிகையாக என்றும் வெளிவந்து பிரகாசிக்க வாழ்த்துவதோடு தீபாவளி நன்னாளில் மனம் நிறைந்த வாழ்த்துக்கூறி தீபமாய் என்றும் யாழோசை பிரகாசிக்க வேண்டும் என்பதுடன் தொடர்ந்து நடுநாயகமாக மிளிர வேண்டுமென்றும் இறைவனை வேண்டுகின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

# ஒளிபாய்ச்சும் வண்ணம் 'யாழ் ஓசை'யெனும் புதிய வாரஇதழின் வரவுச் செய்தி மகிழ்ச்சிதருகிறது

**துணைவேந்தர் நா.சண்முகலிங்கன்**

ஒளிவளர் திருநாள் அகமும் புறமும் தீபங்களின் ஒளிவீச்சிலே அழகுக் கோலமிடுகின்ற தீபாவளிப் பெருநாள். இந்நாளின் அழகுக்கு அர்த்தம் சேர்க்கும் வகையில் எங்கள் அறிவுக்கு ஒளிபாய்ச்சும் வண்ணம் 'யாழ் ஓசை'யெனும் புதிய வார இதழின் வரவு பற்றிய செய்தி மகிழ்ச்சி தருகின்றது என யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

ஊடக அறிவின் உட்பொருள் அறிந்து சமூக உணர்திறனுடன் 'யாழ்ஓசை'யின் ஊடகப்பணி சிறந்திடவும் இந்நாளின் அழகும் ஆனந்தமும் எல்லா இல்லங்களிலும் உள்ளங்களிலும் பரவிடவும் எல்லையிலா என் அன்பு வாழ்த்துக்கள் என அவர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



இலங்கை வங்கி யாழ்.மேற்தர வங்கிக்கிளையில் நடைபெற்ற நவராத்திரி விழாவின்போது சுந்தரமூர்த்தி பாலமுருகன் குழுவினரின் நாதஸ்வர கச்சேரியையும் முகாமையாளர் அ.மகாதேவா உரையாற்றுவதையும் உதவி முகாமையாளர் எஸ்.ஸ்ரீநிஸ்கந்தராஜா அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் - நல்லூர் நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளித் திருநாள் அறியாமை இருளகற்றி மகிழ்ச்சிக்கு வழிவகுக்கட்டும்

## ஜனாதிபதி மஹிந்த வாழ்த்து

தீபாவளித் திருநாள் கொண்டு வரும் சமாதானம் மற்றும் நல்லெண்ண ஒளி எமது மக்களின் வாழ்வில் அறியாமை இருளகற்றி மகிழ்ச்சிக்கும் சந்தோஷத்திற்கும் வழிவகுக்க வேண்டும் என பிரார்த்திக்கிறேன். இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தீபத்திருநாளாம் தீபாவளித் திருநாளை முன்னிட்டு இலங்கை வாழ் அனைத்து இந்து மக்களுக்கும் இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தீபாவளிப் பண்டிகை தீயவற்றை நீக்கி நன்மையையும் அறியாமையை நீக்கி அறிவுடைமையையும் இருளை நீக்கி ஒளியையும் வெற்றி கொள்வதை குறித்து நிற்கின்றது.

உலகெங்கிலுமுள்ள இந்துக்களால் கொண்டாடப்படும் தீபாவளிப் பண்டிகை இந்து சமயத்தின் உயர்ந்த ஆன்மீகப் பெறுமானங்களுக்கேற்ப ஒரு சிறந்த வாழ்க்கைக்காக மனிதர்கள் மேற்கொண்ட ஒரு உறுதியான போராட்டத்தின் முன்னேற்றத்தை அடையாளப்படுத்தி நிற்கின்றது என்ற வகையில் மக்களின் ஆன்மீக சுபீட்சத்திற்கான ஒரு கொண்டாட்டமே தீபாவளிப் பண்டிகையாகும்.



நாட்டில் சமாதானம் மீளக் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் இச்சூழ்நிலையில் இந்து மக்கள் இத்திருநாளை சுதந்திரமாகவும் இனம், மதம் மற்றும் ஏனைய எல்லா வேறுபாடுகளையும் மறந்து சமூகங்கள் மத்தியில் அன்பையும் பரஸ்பர புரிந்துணர்வையும் வளர்க்கும் ஐக்கிய உணர்வுடனும் கொண்டாடுவதற்கான சூழல் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ளது.

இந்து மக்கள் தற்போது உலகெங்கிலுமுள்ள தங்களது சகோதர இந்து மக்களுடன் சேர்ந்து இத்தீபாவளித் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கும் அந்த மகிழ்ச்சியுணர்வை ஏனைய சமூகங்களுடன் பகிர்ந்து கொண்டு நாட்டில் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கேற்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

இத் தீபாவளித் திருநாள் கொண்டு வரும் சமாதான மற்றும் நல்லெண்ண ஒளி எமது மக்கள் வாழ்வில் அறியாமை இருளகற்றி மகிழ்ச்சிக்கும் சந்தோஷத்திற்கும் வழிவகுக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

இலங்கை வாழ் இந்துக்களுக்கு எனது மகிழ்ச்சியான தீபாவளி வாழ்த்துக்கள்.

# இன்றைய தீபாவளித் திருநாள் பொன்னான யுகத்தின் ஆரம்பம்

## வாழ்த்துச் செய்தியில் பிரதமர் ஜயரட்ன

(நமது நிருபர்)

முன்னரைப் போலன்றி இந்து மக்கள் மிகவும் ஆர்வமாக தீபாவளி திருநாளை கொண்டாட முயற்சிப்பதன் மூலம் அவர்களிடம் புதிய எதிர்பார்ப்புகள் தென்படுகின்றன. தெற்கு மட்டுமின்றி வடக்கு கிழக்கு இந்துக்களும் இன்று விழாக்கோலமாக தீபாவளியை கொண்டாடுகின்றனர். இது பொன்னான யுகம் ஒன்றின் ஆரம்பம் என்று பிரதமர் டி.எம். ஜயரட்ன வெளியிட்டுள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

உலக இந்து மக்களின் விசேட சமய தினமாக கருதப்படும் தீபாவளி விழாவுக்கு வாழ்த்து செய்தி விடுப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்து நம்பிக்கைகளின் பிரகாரம் அதர்மத்தை தோற்கடித்து தர்மத்தை உருவாக்கிய நாளாக இந்த தினம் காணப்படுகின்றது. நரகாசுரனிடமிருந்து மக்களை கிருஷ்ண கடவுள் பாதுகாத்தார். எனவே அந்த தினத்தை உலக இந்து மக்கள் கொண்டாடுகின்றனர். தற்போதைய நிலைமையில் இலங்கையில் இந்து பக்தர்கள் மிகவும் பக்தியுடன் தீபாவளியை கொண்டாடுகின்றனர்.

இந்த இடத்தில் இந்து மக்களுக்கு பாரிய பொறுப்பு உள்ளது. முன்னரைப் போலன்றி இந்து மக்கள் மிகவும் ஆர்வமாக தீபாவளி விழாவை கொண்டாட முயற்சிப்பதன் மூலம் அவர்களிடம் புதிய எதிர்பார்ப்புகள் தென்படுகின்றன. தெற்கு மட்டுமின்றி வடக்கு கிழக்கு இந்து பக்தர்களும் இன்று விழாக்கோலமாக தீபாவளியை கொண்டாடுகின்றர்.

# அதியுயர் பாதுகாப்பு வலயங்களால் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு மாற்றுக்காணிகள்

## முடியுமானவற்றை விடுவிக்கின்றோம் என்கிறார் அமைச்சர் மில்ரோய்

(நமது நிருபர்)

அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் விடயத்தில் விடுவிக்க முடியுமான பகுதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.

ஆனால் கட்டாயமாக இருக்கவேண்டிய சில அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் உள்ளன. இதனால் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு மாற்றுக்காணிகளையும் நட்டஈட்டையும் வழங்குவோம். சில இடங்களில் தற்போதைக்கு அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குவது சாத்தியமில்லை என்று மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களின் விவகாரம் தொடர்பில் விபரிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை கூறினார். அமைச்சர் இவ்விடயங்கள் குறித்து மேலும் கூறியதாவது

அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் விடுவிக்க முடியுமான காணிகளை விடுவித்துவருகின்றோம். அதாவது பாதுகாப்பு தரப்பினர் வேறு இடங்களுக்கு செல்ல முடியுமான நிலைமை காணப்படின் அவர்களை வேறு இடங்களுக்கு மாற்ற முடியும்.

குறிப்பிட்ட காணிகளை உரிய மக்களுக்கு வழங்க முடியும். ஆனால் உடனடியாக அனைத்தையும் செய்துவிட முடியாது. காரணம் சில இடங்களில் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் இருக்க வேண்டியது அவசியம் என்று கருதப்படுகின்றது.

முக்கியமாக பலாலியில் அமைந்துள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்தை நீக்குவது சாத்தியமற்றது. காரணம் நாட்டின் பாதுகாப்பு என்பது மிக முக்கியமான விடயமாகும்.

எனினும் இதன் காரணமாக பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்குவது தொடர்பில் நடவடிக்கை எடுத்துவருகின்றோம். நட்டஈடும் வழங்கப்படும்.

# வாகன விபத்தில் விவசாயி உயிரிழப்பு

பதுளை,

லொறியொன்றுடன் மோதுண்ட விவசாயியொருவர் ஸ்தலத்திலேயே பலியான சம்பவம் மகியங்கனைப் பகுதியில் ரிதிமாலியத்த என்ற இடத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் ரிதிமாலியத்த என்ற இடத்தைச் சேர்ந்த ஆர்.எம்.கருணாசேன என்ற 52 வயது நிரம்பிய விவசாயியே பலியானவராவார்.

இவ்விபத்து தொடர்பான மகியங்கனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.சி.டி.,இலங்கக்கோன் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

விவசாயிகள் மரணத்திற்கு காரணமான லொறிச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட மகியங்கனை மஜிஸ்திரேட் நீதிபதி, லொறிச் சாரதியை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## யாழ்... (தொடர்ச்சி)

மில்ரோய் பெர்னாண்டோ தெரிவித்தார்.

யாழ். ரயில் நிலையத்தில் தங்கியுள்ள சிங்கள மக்களின் நிலைமை குறித்து விபரிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை கூறினார்.

அமைச்சர் இவ்விடயம் குறித்து மேலும் கூறுகையில்

யாழ்ப்பாணத்தில் தம்மை குடியேற்றக்கோரி யாழ். ரயில் நிலையத்தில் தங்கியுள்ள சிங்கள மக்களின் நிலைமை தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சு என்ற வகையில் தீர்வு ஒன்றை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

முதலில் இந்த மக்கள் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் என்ன அடிப்படையில் வசித்தனர் என்பது குறித்தும் ஆராயவேண்டியுள்ளது. எனவே குறிப்பிட்ட மக்கள் யாழ்ப்பாணத்தில் அக்காலகட்டத்தில் எவ்வாறு வசித்தனர் என்பது தொடர்பான முழுமையான அறிக்கை ஒன்றை மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளோம்.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் அறிக்கை கிடைத்ததும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய முடியும். இந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு ஒன்றை வழங்குவது குறித்தே கவனம் செலுத்துகின்றோம்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதுடன் ஜனாதிபதியுடனும் கலந்துரையாடவுள்ளோம். இவ்வாறு முயற்சிகளை மேற்கொண்டு விவகாரத்துக்கு தீர்வு காண முயற்சிப்போம் என்றார்.

இதேவேளை யாழ். ரயில் நிலையத்தில் தங்கியுள்ள சிங்கள மக்களை அண்மையில் மீள்குடியேற்ற அமைச்சர் சென்று பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டில்... (தொடர்ச்சி)

கொள்கையாகும். எனவே இன விகிதாசார பிரதேசங்கள் என்பது நிராகரிக்கப்படுவகின்றது

காணிகள் இருக்குமிடத்திலேயே மக்களைக் குடியேற்ற முடியும். இதன்போது சிங்களம், தமிழ், முஸ்லிம் என வேறுபாடு பார்க்க முடியாது என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றபோதே தகவல் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மக்கள் இன விகிதாசாரத்தை மாற்றக் கூடிய குடியேற்றங்களை மேற்கொள்ள முயற்சிப்பதாக கொழும்பு மாவட்ட கத்தோலிக்க பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நல்லிணக்க ஆணைக்குழுவில் வழங்கிய சாட்சியம் தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறுகையில்,

நல்லிணக்க ஆணைக்குழுவில் பேராயர் சாட்சியம் அளித்திருப்பதை நாம் வரவேற்கிறோம்.அவரை மதிக்கிறோம்.ஆனால் ஒரு பிரதேசத்தில் வாழும் மக்கள் தொகையில் மாற்றத்தை மேற்கொள்ள முயற்சி நடக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இலங்கையில் எந்தவொரு பிரதேசமும் தனியொரு இனத்திற்கு சொந்தமான பூர்வீகப் பிரதேசம் அல்ல என்பதே அரசாங்கத்தின் கொள்கையாகும்.

சிங்களவர்கட்கும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எந்தவொரு பிரதேசத்திலும் வாழும் உரிமையுண்டு.

எனவே தனிப் பிரதேசங்கள் என்ற கோட்பாடுகளின் காரணமாகவே நாட்டில் பேரழிவுகள் ஏற்படக் காரணமாகின. இங்கு வாழும் 20 மில்லியன் மக்களும் எங்கும் வாழலாம். அதற்கு தடை விதிக்க முடியாது

கொத்மலை நீர் மின் உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்ட போது மலையக மக்களின் இனவிகிதாசாரம் குறையும் என தர்க்கங்கள் முன்வைக்கப்பட்டன.

ஆனால் நாட்டின் அபிவிருத்திக்கு பிரதேசங்கள் தேவையென்னும் போது இனவிகிதாசாரம் பார்க்க முடியாது.

அக்கருத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாட்டில் பயங்கரவாதம் அழிக்கப்பட்டுவிட்டது.ஆனால் அந்த பயங்கரத்தின் தேவைகளை நிறைவேற்றும் சூழ்ச்சிகரமான சில முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதை அரசாங்கம் நன்கறியும் என்றார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களே அழகான அம்சமான உடல் அழகைப் பெற வேண்டுமா ?



அழகாகவும் இளமையாகவும் இருக்க வேண்டும் என்ற ஆசை எல்லாப் பெண்களுக்குமே உண்டு. அந்த அழகு மட்டும் போதாது. உடலும் அம்சமாக இருந்தால் தான் அழகாக ஜொலிக்க முடியும்.

சத்தான உணவு இல்லாததால் ஒல்லியான தேகத்துடன் காணப்படுவோரையும், அளவுக்கு அதிகமாக சத்தான உணவுகளை சாப்பிட்டு குண்டாக இருப்போரையும் அழகானவர்கள் என்று சொல்லி விட முடியாது.

நீங்களும் அழகான, அம்சமான உடல் அமைப்பைப் பெற வேண்டுமா?

பொறுமையாக தொடர்ந்து படியுங்கள், பொறுமையைக் கடைப்பிடிப்பதும் அழகுக்கும் இளமைக்கும் உதவும் என்கிறது ஆய்வுகள்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை வளர் இளம்பெண்கள் அதிக அளவில் சத்துக் குறைபாட்டுக்கு ஆளாகிறார்கள். இரும்பு மற்றும் கல்சிய சத்துக் குறைபாடு இவர்களிடம் அதிக அளவில் காணப்படுகிறது. விட்டமின் ஏ மற்றும் விட்டமின் பி என்று கருதப்படும் விட்டமின்களின் குறைபாடும் ஓரளவுக்கு இருக்கிறது.

வளர் இளம் பெண்கள் எடையைக் குறைப்பதைப் பற்றியே கவலைப்படுவதால் இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. எடையைக் குறைக்க வேண்டிய தேவை ஏற்படுகிறதோ இல்லையோ, இவர்கள் அதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள்.

வளர் இளம் பருவம் என்பது 13 முதல் 17 வயது வரையுள்ள பெண்களை குறிக்கும். இவர்கள் உடலில் வேகமான வளர்ச்சி 9 வயதில் தொடங்கி 13 வயதுகள் வரை தொடர்கிறது.

பொதுவாக ஒரு பெண் சராசரியாக 12 அல்லது 13 வயதில் பூப்பெய்துகிறாள். அவளது உடலில் பெரிய அளவிலான வளர்ச்சி 19 வயதுக்குள் முடிந்து விடுகிறது.

இவர்களுக்கான சத்தான உணவுப் பரிந்துரைகளின் பட்டியல் 10 முதல் 12 வயது, 13-15 வயது, 16-18 வயது என்ற 3 பிரிவுகளாக உள்ளது.


வளர் இளம் பருவம் ஆரம்பிக்கும் சமயத்தில், சாதாரண உயரத்தில் 80 முதல் 85 சதவீதத்தையும், பொதுவான எடையில் 53 சதவீதத்தைம், உடல் அமைப்பின் வளர்ச்சியில் 52 சதவீதத்தையும் எட்டியிருப்பார்கள்.

அந்த வளர் இளம்பருவத்தின் நிறைவில் இவர்களின் எடை இரு மடங்காக உயரக் கூடும். உயரம் 15 முதல் 20 சதவீதம் வரை அதிகரிக்கும். கொழுப்பற்ற எடையில் 22 முதல் 42 கிலோ வரையும், கொழுப்பு 5 முதல் 14 கிலோ வரையும் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. உடலில் இருக்கும் கொழுப்பு கருத்தரிப்பு நேரத்தில் முக்கிய பங்காற்றுகிறது. கல்சிய அளவை 300 கிராம் முதல் 750 கிராம் வரையிலும் பராமரிப்பதற்கு உடலின் எடையில் 22 சதவீதம் கொழுப்பு இருப்பது நல்லது.

(தொடரும்)

## யாழ்ப்பாண சமையல்

### பொரித்த மிளகாய் சம்பல்



**தேவையான பொருட்கள்.**

தேங்காய்ப்பூ - 2 கப்
செத்தல் மிளகாய் - 12
சின்ன வெங்காயம் - சிறிதளவு
தாளிப்பதற்கு - வெங்காயம், செத்தல் மிளகாய், கடுகு, பெருஞ் சீரகம், கறிவேப்பிலை ஆகியன சிறிதளவு
உப்பு - எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை**

1. காம்பு கிள்ளிய செத்தல் மிளகாய்களை எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.
2. பொரித்த மிளகாய் மற்றும் உப்பு ஆகியவற்றை மட்டும் சேர்த்து இடிக்கவும்.
3. பின்னர் தேங்காய்ப்பூவைச் சேர்த்து இடிக்கவும்.
4. இறுதியாக சின்ன வெங்காயத்தை சேர்த்து இடிக்கவும்.
5. வெங்காயம், செத்தல் மிளகாய், கடுகு, பெருஞ்சீரகம், கறிவேப்பிலை ஆகியவற்றை தாளித்து சம்பல் மேல் கொட்டவும்.
6. சுவையான பொரித்து இடித்த சம்பல் தயார்.

### நண்டுக்கறி



**தேவையான பொருட்கள்**

சுத்தப்படுத்திய நண்டு - 500 கிராம்
வெங்காயம் - 100 கிராம்
பச்சைமிளகாய் - 25 கிராம்
கருவேப்பிலை - தேவையான அளவு
சிறிதாக வெட்டிய உள்ளி - தேவையான அளவு
வெந்தயம் - எண்ணெய் - தேவையான அளவு
தேங்காய்ப் பால் - உப்பு - தேவையான அளவு
பழப்புளி - சிறிதளவு
யாழ்ப்பாணத்து மிளகாய்த்தூள் - தேவையான அளவு

**செய்முறை**

1. தாச்சியை சூடாக்கி அதில் தேவையான அளவு எண்ணெய்விட்டு அதில் சிறிதாக வெட்டிய உள்ளி, வெங்காயம், பச்சைமிளகாய், கருவேப்பிலை, வெந்தயம் ஆகியவற்றை சேர்த்து தாளிக்க வேண்டும்.
2. தாளிதம் பொன்னிறமாக வரும்போது அதில் சுத்தப்படுத்திய நண்டை சேர்த்து வதங்க விடுங்கள்.
3. பின்னர்தேங்காய்ப் பால், பழப்புளி, யாழ்ப்பாணத்து மிளகாய்த்தூள், உப்பு ஆகியவற்றை சேர்த்து நன்றாகக் கொதிக்கவிடுங்கள்.
4. பதமான பதத்தில் இறக்கிப் பரிமாறுங்கள்.

**மங்கையரே உங்களின்**
**சமையல் கலை, அழகு குறிப்புகளை**
**எமக்கு எழுதி அனுப்புங்கள்**
**யாழ் ஓசை 117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியம் அன்றும் இன்றும்

இலக்கியம் என்றால் என்ன? எது இலக்கியம்? இலக்கியம் என்பது எப்படி இருக்க வேண்டும்? இலக்கிய வகையில் எந்தெந்த நூல்களைச் சேர்க்கலாம்? இலக்கிய வகையில் சேரத்தகாதவை என்று எந்தெந்த நூல்களை ஒதுக்க வேண்டும்? கருத்தும் கொள்கையும் உடையவைதான் இலக்கியமா? கருத்தோ கொள்கையோ இல்லாமல் வெறும் பொழுது போக்குக்காகப் பயன்படுவதுதான் இலக்கியமா?

இப்படிப் பல கேள்விகள் இலக்கியத்தைப் பற்றிப் புறப்பட்டிருக்கின்றன. இத்தகைய விவாதமும் கேள்விகளும் பழைய காலத்தில் இல்லை. இப்பொழுது சில ஆண்டுகளுக்கு முன் புதியனவாகத் தோன்றிய கேள்விகள்தான் இவை. குறிப்பாகத் தமிழ் இலக்கியங்களை மட்டும் படித்தவர்கள் இத்தகைய கேள்விகளை எழுப்பவில்லை. பல மொழிகளைப் பயின்றவர்களிடமிருந்து இத்தகைய கேள்விகள் பிறந்தன. இக்கேள்விகளையெல்லாம் எது இலக்கியம்? என்ற ஒரே கேள்வியுள் அடக்கி விடலாம்.

எது இலக்கியம் என்ற கேள்விக்கு விடையளிக்க முன் வருவோரில் சிலர் சில புதிய கருத்துக்களை வெளியிடுகின்றனர். நாம் இதுவரையிலும் இலக்கியம் என்று பாராட்டிப் படித்துவந்த சில நூல்கள் இலக்கியம் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று எண்ணிவந்த ஒரு பொதுவான கருத்துக்கு, மாறான கருத்துக்களையும் வெளியிடுகின்றன. இலக்கியத்தைப் பற்றி இத்தகை ஐயங்களும் கேள்விகளும் பிறந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இது இலக்கியம் வளருவதற்கு வழிகாட்டுவதாகும். தமிழ் இலக்கியம் இனித் தேங்கித் தடைப்பட்டு நின்று விடாது வளர்ந்து செல்லும் பிற நாட்டார் வணக்கம் செய்யும் வகையிலே போற்றும் வகையிலே வளர்ச்சியடையும் என்பதில் ஐயம் இல்லை.

கண்மூடித்தனமாக ஒன்றைப் பின்பற்றிச் செல்லும்போது சிந்தனைக்கு வழியில்லை உண்மையை நினைத்தும் பார்க்க இடமில்லை. எந்த இடத்தில் சந்தேகமும், கேள்விகளும் பிறக்கின்றனவோ அந்த இடத்தில்தான் அறிவும் ஆராய்ச்சியும் வளரும். இந்த உண்மையை வைத்து எண்ணும்போது, இலக்கியம் பற்றி இன்று புறப்பட்டிருக்கும் விவாதம் இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்யும் என்பது உறுதி.

ஒவ்வொருவருக்கும் தாம் எண்ணுவதைப் பற்றி வெளியிடும் கருத்துரிமை உண்டு. இத்தைய கருத்துரிமைக்கு மதிப்புக்கொடுத்து, அக்கருத்தை ஆராய வேண்டும். பிறருடைய கருத்தை மதிக்காதவர்கள் அலட்சியம் பண்ணுகிறவர்கள் அறிவிலே வளர்ச்சியடைய முடியாது' 'இவர் என்ன சொல்வது? நாம் என்ன கேட்பது' என்று நினைப்பது அகங்காரத்தின் உச்சநிலையாகும். இப்படி நினைப்பது தமிழர் பண்பாட்டுக்கே முரண்பட்டதாகும். 'எந்தப்பொருளைப் பற்றி யார் யார் என்ன சொன்னாலும் அவற்றைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும் சொல்லுவோர் யார் என்பதைப்பற்றி நினைக்கவே கூடாது' சொல்லும் பொருளைப்பற்றியே நினைக்க வேண்டும் அச்சொல்லில் உண்மையிருக்கிறதா என்று ஆராய வேண்டும். உண்மையிருந்தால் கொள்ள வேண்டும் உண்மையின்றேல் தள்ளி விடவேண்டும் இதுவே அறிவுடைமையின் செயலாகும் என்று வள்ளுவர் சொல்லியிருக்கின்றார்.

எப்பொருள் யார்யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்பதே அக்குறள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களிடம் இப்பண்பாடு குடிகொண்டிருந்தது. ஆதலால் இலக்கியம் பற்றிய கருத்துக்களை நாம் ஆராய்ந்து பார்ப்போம். தமிழ் இலக்கியம் வளருவதற்கு நம்மால் இயன்ற பணியைச் செய்வோம் என்று எழுத்தாளர்கள் முடிவெடுத்துக் கொள்ள வேண்டும்.

**இலக்கியம்**


இலக்கியம் என்ற சொல் பண்டைக் காலத்தில் ஒரு பொதுச்சொல்லாக வழங்கிற்று. பிழையில்லாமல், இலக்கண வழுவில்லாமல் எழுதப்படுவன எல்லாம் இலக்கியம் என்பது இலக்கண நூலார் கொள்கை.

பொதுவாக, எழுதப்பட்டிருப்பன அனைத்தும் இலக்கியங்கள்தான். 'லிக்' என்ற வடமொழியடியாகப் பிறந்த சொல்லே இலக்கியம் என்பது. எழுதப்பட்டிருப்பது என்பதே இதன் பொருள்.

எழுத்துருவிலே உள்ள அனைத்தும் இலக்கியம் என்பதே ஒரு பொதுவான கருத்து. அரசியல் இலக்கியம், சரித்திர இலக்கியம், விஞ்ஞான இலக்கியம், மத இலக்கியம், சமுதாய இலக்கியம், கணக்கு இலக்கியம், நாடக இலக்கியம், சங்கீத இலக்கியம், வைத்திய இலக்கியம் என்றுதான் பலவகையான நூல்களையும் இலக்கியம் என்ற பொதுச் சொல்லால் வழங்கி வந்தனர். வழங்கி வருகின்றனர். ஆங்கிலத்திலும் லிட்ரேச்சர் என்ற சொல்லுக்கு இப்படித்தான் பொருள் சொல்லப்படுகின்றது.

ஆனால் இன்று இலக்கியம் என்ற சொல்லை எல்லா நூல்களுக்கும் பொதுவாக வழங்குவதைச் சிலர் ஒப்புக் கொள்ளவில்லை. இலக்கியம் என்று சொல்லுக்கு எழுதப்பட்டது என்று பழம் பொருளைக் கொள்ளுவதில்லை. இலக்கு என்ற சொல்லிலிருந்தோ, அல்லது இலட்சியம் என்ற சொல்லிலிருந்தோதான் இலக்கியம் என்ற சொல் பிறந்ததாகக் கொள்கின்றனர். இலக்கியம் என்று பொதுச்சொல் இன்று இவ்வாறு சிறப்புச் சொல்லாக வழங்குகின்றது.

இவ்வாறு பழஞ் சொற்கள் புதுச்சொற்களாகப் பொருள் மாறி வழங்குவது இயல்புதான். ஒரு காலத்திலே நாற்றம் என்ற சொல் நறுமணம் என்ற பொருளிலே வழங்கிற்று. இன்று அச்சொல் துர்நாற்றத்தைக் குறிக்கின்றது. ஒரு காலத்திலே நாகரிகம் என்ற சொல் கண்ணோட்டம், இரக்கம் என்ற பொருளில் வழங்கிற்று. இன்று நகரரீதியாகப் பிறந்த பழக்க வழக்கம் என்ற பொருளில் நாகரிகம் என்ற சொல் வழங்குகின்றது. ஒரு காலத்தில் 'மன்றம்' என்ற சொல் ஊருக்குப் பொதுவான மரத்தின் நிழலைக் குறித்தது. இன்று இச்சொல் 'சபை' என்ற பொருளில் வழங்குகின்றது. ஒரு காலத்தில் 'கழகம்' என்ற சொல் சூதாடும் இடத்தைக் குறித்தது. இன்று இச்சொல் சரிதம், சபை, இயக்கம் என்ற பொருள்களில் வழங்குகின்றது.



இவ்வாறு சொற்கள் காலத்திற்கேற்ப பொருள் வேறுபட்டு வழங்குவது இயல்பு. இந்த இயல்பை ஒட்டியே இன்று இலக்கியம் என்ற சொல்லும் இன்று புதுப்பொருளில் வழங்குகின்றது.

இன்று எல்லா நூல்களையும் இலக்கியம் என்று கொள்ளுவதில்லை. உள்ளத்துக்கு இன்பம் பாய்ச்சும் கற்பனை நிறைந்த நூல்களை இலக்கியம் என்று கொள்ளுகின்றோம். படிக்கப் படிக்க நமது நெஞ்சத்தைக் கவரும் நடை- உள்ளத்திலே துன்பத்தையோ, மகிழ்ச்சியையோ உண்டாக்கும் கருத்து - நம்மை உணர்ச்சிவசமாக்கும் தன்மை - நம்மை சிந்திக்கத்தூண்டும் சிறந்த மொழிகள்- ஒரு முறை படித்தபின் வீசி எறிந்துவிடாமல் மீண்டும் படிக்க வேண்டும் என்னும் எண்ணத்தை எழுப்பும் இயல்பு- அவ்வாறே திரும்பவும் படிக்கச் செய்யும் செயல்- படித்தவை களில் உள்ள பல செய்திகள் அப்படியே நம் உள்ளத்தில் ஒட்டிக்கொள்ளும் இயல்பு- நமது வாழ்க்கையில் தவறு நேராமல் நல்ல முறையிலே நடந்து கொள்ள வேண்டும் என்னும் உறுதியை உண்டாக்கும் சக்தி- பல திறம்பட்ட அரிய செய்திகளை நாம் அறிந்து இன்புறச் செய்யும் பண்பு- இவைகள் எல்லாம் அமைந்த நூல்களே சிறந்த இலக்கியம் என்று நாம் எண்ணுகின்றோம்.

சிறப்பாக இலக்கியம் என்பது பொழுது போக்குக்குப் பயன்படுவதாகும். மக்களுடைய உள்ளத்தையும் பண்படுத்தப் பயன்படுவதாகும். இலக்கியங்களைப் பயின்றவர்கள் ரசிகர்களாக வாழலாம் பிறருக்கு நல்ல அறங்களை எடுத்துரைப்பவர்களாக இருக்கலாம்' இயற்கையின் இன்பங்களைச் சுவைப்பவர்களாகவும், சுவைக்கச் செய்பவர்களாகவும் இருக்கலாம். மொழியைப் போதனை செய்யும் ஆசிரியராகவும் இருக்கலாம். அவர்கள், வேறு தொழில் நிபுணர்களாக ஆகமுடியாது. இதுவும் இலக்கியத்தின் இயல்பாகும். தொழில் நிபுணர்கள் இலக்கிய ரசிகர்களாக இருக்கலாம். ஆனால் இலக்கியத்தை மட்டும் பயின்றவர்கள் தொழில் நிபுணர்களாக முடியாது.

இந்த இயல்புகளுடன் அமைந்திருக் கும் நூல்கள் எவையாயினும் அவைகள் இலக்கியங்கள் தான். அவைகள் செய்யுள் வடிவிலும் இருக்கலாம் உரைநடை அதாவது வசன நடை வடிவிலும் இருக்கலாம்.

செய்யுள் வடிவில் அமைந்திருப்பதால் மட்டும் எல்லா நூல்களும் நம் உள்ளத்தைக் கவர்வதில்லை. சில கவிஞர்களுடைய செய்யுள்கள் தாம் படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. பலருடைய செய்யுள்களைப் படிக்க வேண்டியநூல் என்பதற்காகவே படிக்கின்றோம். தமிழிலே உள்ள வைத்திய நூல்களும், சோதிட நூல்களும், செய்யுள் வடிவில்தான் எழுதப்பட்டிருக்கின்றன. அப் பாடல்களில் இலக்கியச்சுவை இருப்பதாக யாரும் நினைப்பதில்லை சொல்லுவதும் இல்லை. உண்மையில் அவைகளில் இலக்கியத்துக்குரிய பண்புகள் இல்லவே இல்லை. இதைப் பற்றிப் பின்னர் விளக்கமாகக் காண்போம்.

செய்யுளைப் போலவே நம் உள்ளத்தை இழுத்துக் கொண்டு செல்லும் உரைநடையும் உண்டு. சொல்லப்படும் செய்திகள் அருமையானவை் ஆராய்ந்து எடுக்கப்பட்டவை் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டியவை ஆதலால் எப்படியாவது படித்து முடிக்கவேண்டும் என்று நினைத்து கொண்டு படிக்கும் உரைநடையும் உண்டு.

செய்யுளானாலும் சரி, வசனமானாலும் சரி, படிப்பவர்களைத் தன்னோடு அணைத்துக் கொள்ளவேண்டும். அவர்களுடைய சிந்தையை அங்கே இங்கே அலையவிடாமல் தன்னுடன் இழுத்துக்கொண்டு போகவேண்டும். இத்கைய அழகு- எளிய - தெளிவான நடையில் இலக்கியங்கள் அமைந்திருக்க வேண்டும். ஒரு நல்ல இலக்கியத்துக்கு- மக்களைப் படிக்கத் தூண்டும் இலக்கியத்துக்கு- மக்களைப் பண்படுத்தும் நோக்கம் உள்ள இலக்கியத்துக்கு- இத்தகைய எழுத்துநடை முதற்படி என்பது நமது கருத்து.

நமது முன்னோர்கள் பெரும்பாலும் இலக்கியங்களைப் பாட்டுக்களாக எழுதிவந்ததற்கு மக்கள் மனதைக்கவரும் வாசகங்களிலே இலக்கியங்கள் அமையவேண்டும் என்பதும் ஒரு காரணமாகும். செய்யுளிலே இனிய ஓசை உண்டு. பண்ணொடு பாடலாம். செம்பாகமான செய்யுட்கள் படிக்கும் போதே - அல்லது பாடும்போதே- அல்லது பிறர் பாடுவதைக் கேட்கும்போதே நம் உள்ளத்தில் ஒட்டிக் கொள்ளும். முன்னோர்களின் உரைநடையில்கூடச் செய்யுள் வாடை வீசுவதைக் காணலாம். ஆதலால் இலக்கியத்திற்கு அதன் எழுத்து அமைப்பு-வசன அமைப்பு-இனியநடை இன்றியமையாதது என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.குடாநாட்டில் சேதமுற்ற வீதிகள் புனரமைப்புக்கான ஏற்பாடுகள் மும்முரம்

சிறுப்பிட்டி,

யாழ். குடாநாட்டில் அண்மையில் பெய்த கடும் மழையினால் சேதமுற்ற வீதிகளை புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மழையினால் குடாநாட்டில் பல்வேறு வீதிகள் குன்றும் குழியுமாக காணப்படுகின்றன.

இவ் வீதிகளை சீர்செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப் புனரமைப்புக்கான தார்க் கலவை கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமுதாய விழிப்புணர்வுக் கண்காட்சி

சாவகச்சேரி,

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் நடத்தப்படும் சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி நேற்றுக் காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் க.தயாளன் தலைமையில் நடைபெற்ற இக்கண்காட்சியில் சுகாதார சம்பந்தமான பல பயனுள்ள தகவல்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இளம் பருவத்தினரின் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்குமான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியவையாக இக் கண்காட்சி அமைந்ததாகத் தெரிவிக்கப் படு கிறது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலி தேவி சாந்த சீலன் மலேரியா தடை இயக்கப் பிராந்திய வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.த. சிவபாதமும் கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை, தென்மராட்சி கோட்டக் கல்வி அதிகாரி கு.சிவானந்தம் மற்றும் யாழ். பிராந்திய பொதுச் சுகாதார தாதியர் திருமதி ர. நவரத்தினம் ஆகியோரும் கலந்த சிறப்பித்தனர்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கு அரையாண்டுப் பரீட்சைகள்

(அலுவலக நிருபர்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளதாக யாழ். பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி கலைப்பீட இறுதி வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் 21ஆம் திகதியும் 1ஆம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் 9 .12.2010 அன்றும் 2 ஆம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் 3.1.2011 அன்றும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி வருடங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பாட அலகுககளை குறிப்பிட்டு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்களுக்கான பரீட்சைகளும் இம்மாத இறுதியில் ஆரம்பமாக வுள்ளன.

மேலதிக தகவல்களை கலைப்பீட விளம்பரப் பலகையில் பார்வையிட முடியும்.



யாழ்.சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை மாணவி ஒருவருக்கு சின்னம் சூட்டுவதையும் அருகில் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தனையும் படத்தில் காணலாம். (படம் சங்கானை நிருபர்)

# இம்மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகும் மூன்றாம் தவணைப்பரீட்சைகள்

(அலுவலக நிருபர்)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்டு வரும் தரம் 9 மற்றும் தரம் 11 ஆகியவற்றுக்கான 3 ஆம் தவணைப் பரீட்சைகள் இம்மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளரூடாக மாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளவை வருமாறு

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் தரம் 9 மற்றும் 11 மாணவர்களுக்கான 3 ஆம் தவணைப் பரீட்சையில் கணிதம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம்மற்றும் வரலாறு ஆகிய பிரதானமான 05 பாடங்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 18 ஆம்திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

ஏனைய பாடங்களுக்கான வினாத்தாள்களும் ஏனைய தரங்களுக்கான வினாத்தாள்களும் அந்தந்த வலயக் கல்வி அலுவலகங்களால் தயாரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கும்பாபிஷேக மலர் வெளியீடு

சாவகச்சேரி,

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில் 'மாவடியான் திரு' என்ற கும்பாபிஷேக மலர் வெளியீடு இன்று 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இவ் விழா யாழ். மாவட்ட மத்தியஸ்த சபை மேற்பார்வையாளர் பிரம்மஸ்ரீ பரமானந்த சனாதன சர்மா தலைமையில் நடைபெறும்.

மேற்படி நிகழ்வில் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள் ஆகியோர் ஆசியுரைகளையும் தென்மராட்சி உதவிப் பிரதேசச் செயலர் செல்வி ந.ரஞ்சனா வெளியீட்டுரையையும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன் ஆய்வுரையையும் நடத்தவுள்ளனர்.

சிறப்புரையை யாழ்.பல்கலைக்கழக தொல்லியற்துறை பேராசிரியர் செ.கிருஷ்ணராசா சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாய பிள்ளை சாவகச்சேரி கோட்டக் கல்வி அதிகாரி கு. சிவானந்தம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி முதற்பிரதியை வழங்க சி. சுந்தரலிங்கம் பெற்றுக் கொள்வார் என்றும் அதனைத் தொடர்ந்து 'இராகஷ்ருதி' இசைக் குழுவினரின் இன்னிசை விருந்தும் இடம்பெறவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

# மெய்கண்ட தேவர் குரு பூசை

வேலணை,

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையுடன் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் நடத்தும் மெய்கண்ட தேவர் குரு பூசை நாளை மாலை 4.00 மணிக்கு நீல்வேலி காமாட்சி அறநெறி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நீர்வேலி அதியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதனும் சிறப்பு விருந்தினராக தேசிய வங்கி அச்சுவேலிக்கிளையின் முகாமையாளர் சைவப்புலவர் சி.நந்தகுமாரும் கலந்து கொள்ளனர்.

இந் நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

# நாட்காட்டி வெளியீட்டு விழா

(வட்டுக்கோட்டை நிருபர்)

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயமும் பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபையும் இணைந்து நடத்தும் அடுத்த ஆண்டுக்கான நாட்காட்டி வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபைத் தலைவர் சி.க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தான அறங்காவலரும் பாராளுமன்ற உறுப்பினரமான டி.எம். சுவாமிநாதன் கலந்து கொள்வார்.

'சைவப் பெருவள்ளலும் மகளிர் கல்வியும்' என்னும் தலைப்பில் இராமநாதன் கல்லூரி அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரமும் 'சைவப் பெருவள்ளலும் மாணவர் கல்வியும்' என்னும் தலைப்பில் பரமஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க யாழ். கிளைத் தலைவர் சட்டத்தரணி கனகராமநாதனும் 'சைவப்பெருவள்ளலும் சமயப் பணிகளும்' என்னும் தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கமும் உரையாற்றவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் துறைத் தலைவர் நா. வேதநாதன் நாட்காட்டியை வெளியிட்டு வைக்க வுள்ளார்.

இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவிகளின் நாட்டியாஞ்சலியும் இடம்பெறுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள் குடியேறிய விவசாயிகளை பதிவு செய்யக் கோரிக்கை

மானிப்பாய்

வன்னியிலிருந்து வந்து மீளக்குடிய மர்ந்த விவசாயக் குடும்பங்கள் பதிவுக ளை உரிய நேரத்தில் மேற்கொள்ளாத தால் அவர்களுக்கு எதுவித விவசாய உத விகளையும் செய்து கொடுக்க முடியாமல் உள்ளதாக உடுவில் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி தெரிவிக்கின்றார்.

மீளக்குடியேறிய விவசாயிகளை வருகைதந்து உடனடியாக பதிவு களை மேற்கொள்ளுமாறு வேண்டு கோள் விடுத்திருந்த போதிலும் அதிக மான விவசாயிகள் பதிவுகளை மேற் கொள்ள வில்லை.

இதுவரை மீளக்குடியமர்ந்த 4 விவ சாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் தெளிகருவிகள் வழங்கப்படவுள்ளதா கவும் தெரிவித்த அவர் இதுவரை பதி வுகளை மேற்கொள்ளாத மீளக்குடிய மர்ந்த விவசாயிகள் உடனடியாகத் தன்னிடம் பதிவுகளை மேற்கொள்ள லாமெனத் தெரிவித்துள்ளார்.

## உடுவில் பகுதியில் பெண்களுக்கு எதிரான 36 வன்முறைச் சம்பவங்கள்

மானிப்பாய்

இவ் வருடத்தில் இதுவரை உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிக ளில் பெண்களுக்கு எதிரான 36 வன்மு றைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக உடுவில் பிரதேச செயலக மகளிர் அபிவி ருத்தி உத்தியோகத்தரால் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பெண்களக்கு எதிரான இவ் வன்மு றைச் சம்பவங்கள் பற்றி கிராமப் புற பகு திகளிலல் இருந்தே அதிகமான முறைப் பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என வும் இவ் வன்முறைச் சம்பங்களினால் பா திக்கப்பட்ட பெண்களுக்குத் தேவை யான ஆலோசனைகளையும் வழிகாட்ட லையும் தாம் வழங்கி வருவதுடன் கிரா மங்கள் ரீதியாக பால் நிலை வன்முறை தொடர்பான நிகழ்வுகளை தாமும் ரி . ஆர். ஆர்.ஓ. நிறுவனத்தினரும் நடத்தி வருவதாகவும் தெரிவித்ததுடன் 'ரீ.ஆர். ஆர்.ஓ.' நிறுவனத்தினரால் 3 பால் நிலை வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண் களுக்கு சுய தொழில் உதவிகள் வழங்கப் பட்டுள்ளன எனவும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தரால் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கால்நடைகளைக் கொண்டு செல்ல புதிய நடைமுறை அறிமுகம்

மானிப்பாய்

கால் நடைகளை ஓரிடத்திலிருந்து இன் னோர் இடத்திற்குக் கொண்டு செல்வதற் கான பழைய நடைமுறை நீக்கப்பட்டு புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாக கால் நடை வைத்திய அதி காரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கால் நடைகளைக் கொண்டு செல்ல விரும்புபவர்கள் கிராம அலுவலரின் உறு திப்படுத்தலைப் பெற்றுக் கொண்டு பின் னர் கால்நடை வைத்திய அதிகாரியினால் உரிமை மாற்றம் செய்யப்படல் வேண் டும். எந்தப் பகுதிக்குக் கால்நடைகளைக் கொண்டு செல்ல இருக்கின்றார்களோ அந்தப் பகுதி கிராம அலுவலரினாலும் அது உறுதிப்படுத்தப்படவேண்டும். அப் பிரதேச செயலரின் அனுமதியினையும் பொலிஸ் பிரிவினின் போக்குவரத்து அனுமதியினையும் பெற்றுக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வேலைத்திட்டங்கள் தீவுப் பகுதியில் இல்லை

ஏழாலை,

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தின் வேலைத்திட்டம் எதுவும் தீவுப் பகு தியில் இடம்பெறுவதில்லை எனத் தெரி விக்கப்படுகின்றது. தேசிய இளைஞர் சேவைகள் மன்ற செயற்பாடுகள் வேலை த்திட்டங்கள் எதுவும் கடந்த 5 வருடங் களாகத் தீவுப் பகுதி பிரதேசங்களிலுள்ள இளைஞர் யுவதிகளுக்குக் கிடைக்கவில் லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய இளைஞர் வேலைத்திட்டம் கலாசார மற்றும் இளைஞர் பயிற்சிகள், இளைஞர் விளையாட்டுப் போட்டி, தலை மைத்துவப் பயிற்சிகள் , மொழிப் பயிற்சி போன்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் யாழ். மாவட்டத்தில் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால், தீவுப் பகுதியி லுள்ள நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற் றுறை, காரைநகர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இளைஞர் வேலைத்திட்டம் எதுவும் நடைபெறுவதில்லை எனத் தெரி விக்கப்படுகின்றது.தீவுப் பகுதியிலுள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் கடந்த 5 வருடங்களுக்கு முன் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்ட 30 க்கும் மேற்பட்ட இளைஞர் கழகங்கள் இயங்கி வந்ததாகவும் தற்போது அவை எதவும் குறிப்பிட்ட பகுதியில் இயங்கி வந்தன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரதேச செயலர் பிரிவில் கடந்த 2003ஆம் ஆண்டு வரையும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நிய மிக்கப்பட்ட இளைஞர் சேவை உத்தியோ கத்தர்களே கடமையாற்றி வந்தார்கள்.

பின்னர் அவர்கள் வேறு வேலைக்கு மாற்றலாகிச் சென்றதன் காரணமாக ஏற் பட்ட வெற்றிடம் நிரப்பப்படாமை யினாலேயே இளைஞர் சேவை மன்றத் தின் செயற்பாடுகள் இப்பகுதி இளைஞர் யுவதிகளுக்குச் சென்றடைவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தின் வேலைத்திட்டங்கள் தீவுப் பகுதி இளைஞர், யுவதிகளுக்குக் கிடைக்காமை யினால் இப்பகுதி இளைஞர்களின் திற மைகள் வெளிக் கொண்டுவர முடியாத நிலை காணப்படுகிறது.

அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத் திற்கு வழியமைக்க இளைஞர் சேவைகள் மன்ற வேலைத்திட்டங்களை நடைமு றைப்படுத்தவேண்டுமெனக் கேட்கப் பட்டுள்ளது.

## சமுர்த்தி மகா சங்கம் வழங்கும் ஏழை மாணவர்களுக்கான புலமைப் பரிசில்

(ஏழாலை, மானிப்பாய் நிருபர்கள்)

யாழ். பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்க சமூக அபிவிருத்தி மன்றத்தினால் வசதி குறைந்த சிறுவர்களின் கல்விக்காக புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

இப்புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பாரம்ப ரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொ ழில் அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினரா கவும் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கௌரவ விருந்தினரா கவும் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோ கஸ்வரி பற்குணராசா, யாழ். கல்வி வலய வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக் கப்படுகின்றது.






யாழ்.கல்வி வலயத்தில் உள்ள விசேட கல்வி பிரிவினரால் நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டி நேற்று யாழ்ப்பாணம் முத்துதம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது விருந்தினர்கள் பான்ட் வாத்திய சகிதம் அழைத்துவரப்படுவதையும் யாழ்.போதனா வைத்தியசாலை தொழில்வழி சிகிச்சையாளர் பிரம்மகுமார் இ.கணேசலிங்கம் மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாடாக நடப்பதினாலோ அல்லது ஆக்ரோஷமாகப் பேசுவதினாலோ எதையும் எவரிடமிருந்தும் பெறமுடியாது

## யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்

யாழ்ப்பாணம்,

முரண்பாடாக நடப்பதினாலோ அல்லது ஆக்ரோஷமாகப் பேசுவதினாலோ எதையும் எவரிடமிருந்தும் பெறமுடியாது. மக்களுக்காக இணைந்து செயற்படுவதன் மூலம் மட்டும் தான் எதையும் சாதிக்க முடியும். மக்களின் தேவைகளையும் நிறைவேற்ற முடியும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினரால் நடத்தப்பட்ட சர்வதேச முதியோர், மாற்றாற்றல் உடையோர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்த கொண்டு பேசும்போது கூறினார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் வலி. தென் மேற்குப் பிரதேசசெயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.முரளி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது-

இடம்பெயர்ந்த மக்களை விரைவாகச் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்த வேண்டுமென்ற ஒரே நோக்குடன் இரவு பகலாக செயற்பட்டு வரும் நான் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திப் பல தடவைகள் பேச்சு வார்த்தை நடத்தி வந்துள்ளேன். எனது முயற்சி வீண் போகாது. பச்சை விளக்குக் காட்டப்பட்டுள்ள து.

மிக விரைவில் வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படுவார்கள். முப்பது வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற கொடிய யுத்தத்தினால் பல ஆயிரக்கணக்கான உயிர்கள் பறிக்கப்பட்டன.

கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. பல இலட்சக் கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். மக்கள் சொல்லொணாத்துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலிருந்து அவர்களை மீட்க வேண்டும். அவர்களை நிம்மதியாக வாழவைக்க வேண்டும்.

போர் இடம்பெற்ற போது தான் உயர் பாதுகாப்பு வலயம் என்ற இடம் இருந்தது. தற்பொழுது போர் முடிந்து விட்டது. நாட்டில் சமாதானம் அமைதி நிலவுகிறது.

அபிவிருத்தி வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இந்த அமைதிச் சூழ்நிலையில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேச்சுக்கே அர்த்தமில்லை.

இடம்பெயர்ந்த மக்கள் அந்தந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படவேண்டும். ஆயிரக்கணக்கான கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருப்பதினால் மக்களை மீள்குடியமர்த்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கண்ணி வெடிகள் முழுமையாக அகற்றப்பட்டு அதற்கான சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட வர்களிடமிருந்து கிடைக்கப் பெற்றதும் வடமராட்சி கிழக்கில் குடியமர்த்தப்பட்டது போல் வலி. வடக்கிலும் குடியமர்த்தப்படுவார்கள்.

கண்ணிவெடி அகற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதே கால தாமதத்திற்குக் காரணமாகும் என்றார்.

# தென்மராட்சியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 4 பேருக்கு அபராதம்

கொடிகாமம்,

தென்மராட்சிப் பிரதேசத்தில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 4 பேருக்கு எதிரான வழக்கில் சாவகச்சேரி நீதிவான் 68 ஆயிரத்து 700 ரூபாவை அபராதமாகவும் இழப்பீட்டுத் தொகையாகவும் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது-

கொழும்பிலிருந்து வந்த இலங்கை மின்சார சபை விசேட பிரிவினரும் கொடிகாமம் பொலிஸாரும் இணைந்து கடந்த செவ்வாய்க்கிழமை மட்டுவில் தெற்கு, மீசாலை மேற்கு, கொடிகாமம், வரணி, இயற்றாலை ஆகிய இடங்களில் திடீர் சோதனைகளை நடத்தினர்.

அதில் அகப்பட்ட 4 பேருக்கும் எதிராக கொடிகாமம் பொலிஸாரால் கடந்த புதன் கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கை விசாரித்த சாவகச்சேரி மேலதிக நீதிவான் நா. கணேசராசா 04 பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்ததுடன் இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டத்திற்கு 28 ஆயிரத்து 700 ரூபாவை இழப்பீட்டுத் தொகையாகச் செலுத்துமாறு பணித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை மின்சார சபையின் விசேட குழு யாழ். குடாநாட்டின் பல்வேறு இடங்களில் மேற்கொண்ட திடீர் சோதனைகளின் போது 55 பேர் அகப்பட்டனர்.

# தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் இணைவது பற்றி நன்கு ஆலோசித்தே செயற்படவேண்டும்

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு பா.உ. அ.விநாயகமூர்த்தி

யாழ்ப்பாணம்,

பல வருடங்களாக அரசியல் தலைவர்களால் ஏமாற்றப்பட்டு வரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் கட்சிகளின் அரங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக்கட்சிகளும் உறுப்பினர்களும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் அனுதாபிகள்.

இந்த நிலையில் இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பது சம்பந்தமாக தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துடன் இணைந்து செயற்படுவது பற்றி அவசரப்பட்டு தீர்மானிக்க முடியாது. இது குறித்து தற்பொழுது ஆலோசித்து வருகின்றோம்.

இவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துடன் இணைந்து செயற்படுவது பற்றி கருத்துக் கூறும் போது தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது-

கடந்த 50 வருடங்களுக்கு மேலாகத் தீர்வு காணப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டிய தேவையும் அவசரமும் ஏற்பட்டுள்ளது.

இதற்காகவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு செயற்பட்டு வருவதுடன் இந்தியத் தலைவர்களின் உதவியையும் நாடியுள்ளது. அவர்களும் எங்களுடன் ஆலோசனை நடத்தி வருகின்றார்கள்.

இந்த நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தமிழ்க் கட்சிகளின் அரங்கம் உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

இந்த அமைப்பிலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஜனாதிபதிக்கு ஆதரவானவை. இவர்களுடன் இணைந்து செயற்படுவது பற்றி அவசரப்பட்டு முடிவெடுக்கும் முடியாது. அலசி ஆராய்ந்து தான் முடிவெடுக்கவேண்டும் என்றார்.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த மாதம் வரை மீள்குடியேற்றப்பட்டோர் விபரம்

யாழ்ப்பாணம்,

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து யுத்தம் காரணமாக வெளியேறிய 28, 473 குடும்பங்களைச் சேர்ந்த 112, 056 பேரில் இம் மாதம் 18 ஆம் திகதி வரை 20, 200 குடும்பங்களைச் சேர்ந்த 59 695 பேர் அரசாங்கத்தால் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

மீள்குடியேற்றப்படவிருக்கும் 9118 குடும்பங்களைச் சேர்ந்த 53 361 பேரில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் 6443 குடும்பங்களைச் சேர்ந்த 25 960 பேர் (82 வீதமான மக்கள்) மீள்குடியமர்த்தப்படவுள்ளார்கள்.

வன்னிப் பெரு நிலப்பரப்பான ஐந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது உயிரை மட்டும் காப்பாற்றும் நோக்குடன் உடமைகள் அனைத்தையும் விட்டு விட்டு வெறும் கையுடன் வெளியேறிய பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வவுனியா அகதி முகாம்களில் எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி தஞ்சம் புகுந்திருந்தனர்.

சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக பல மாதங்களுக்குப் பின் முல்லைத் தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களைப் பற்றியும் மீள்குடியமர்த்தப்பட வேண்டிய மக்கள் பற்றியும் புள்ளி விபரங்களை அறிவதற்காக முல்லைத்தீவிற்குச் சென்ற தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அரசாங்க அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது இப்புள்ளி விபரங்கள் தெரியவந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய ஐந்து உதவி அரசாங்கப் பிரிவுகளையும் சேர்ந்த 110 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 624 கிராமங்களில் வசித்து வந்த 28, 473 குடும்பங்களைச் சேர்ந்த 112, 056 மக்கள் இடம்பெயர்ந்து வவுனியா அகதி முகாம்களில் வாழ்ந்து வந்தனர். இவர்களில் இம் மாதம் 18 ஆம் திகதிவரை 20, 200 குடும்பங்களைச் சேர்ந்த 58, 695 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மீள்குடியமர்த்தப்பட்ட மீள் குடியமர்த்தப்படவேண்டிய மக்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

# துறைமுகப் பாலம் புனரமைப்பு

(நெடுந்தீவு நிருபர்)

நயினாதீவு தெற்கு வங்களாவடி துறைமுகப் பாலம் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பாலப் புனரமைப்புப் பணிகளை நயினாதீவு பாதுகாப்புப் படை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சிறப்புச் சொற்பொழிவு

நீர்வேலி,

வல்வெட்டித்துறை தீருவில் வயலூர் முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி உற்சவம் நாளை 6 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து ஆறு நாட்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் ம.மனோகரக் குருக்கள் தலைமையில் யாழ்.உயர் கல்வி விரிவுரையாளரும் ஆன்மிக சொற்பொழிவாளருமான சைவப்புலவர் பொன்.சுகந்தன் ' கந்தன் கருணை ' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதத்தைப் பேணிக் காக்கும் பொறுப்பு இளையோரின் கைகளில் உள்ளது

**- பரதக் கலைஞர் ஆர்த்தி நிஷாந்தன்**



அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கை
யும் தோற்றுவித்து அவற்றை அடையும்
சாதனங்களாக அறுபத்துநான்கு கலைகளை
யும் உருவாக்கினான் இறைவன் .
அக்கலைகளுள் தலைசிறந்து
விளங்குவது பரதம்.
இத்தகைய பரதக்கலையின் தொன்மை
யையும் மேன்மையையும் விளக்குவதாக
அமைந்தது நடராசர் வடிவம்.
ஆடல் வல்லானே கலையின் வடிவமாகத்
திகழும் பெருமை கொண்ட
இப்பரதக்கலையை சிறப்புறக்கற்று
வளர்ந்து வரும் கலைஞர்களில்
ஒருவராக திகழும் திருமதி ஆர்த்தி நிஷாந்
தனை யாழ் ஓசை மூலமாக அறிமுகப்படுத்
தவுள்ளோம்.
வளர்ந்து வரும் கலைஞர்களை அறிமுகப்
படுத்தும் பணிகளில் இம்முறை திருமதி
நிஷாந்தனின் நேர்முகம் கேள்வி பதிலாக
இதோ வாசகர்களுக்கு.
வணக்கம் திருமதி நிஷாந்தன்

***வழமைபோல் வளர்ந்து வரும் கலைஞர்
கள் வரிசையில் உங்களைப்பற்றியும் எமது
வாசகர்களுடன் பகிர்ந்து
கொள்ள முடியுமா?**

கலைஞர்கள் தமது பணியை தொடர்வதற்கு
அறிமுகமும் ஒரு காரணம் என்று
சொல்வார்கள்.
அந்த வகையில் எனக்கும்
இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கி
எனது கலைச்சேவையை மென்மேலும்
தொடர்வதற்கு வழிசமைத்த யாழ் ஓசைக்கு
முதலில் நான் நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.
நான் யாழ்ப்பாணம் திருநெல்வேலியை
பிறப்பிடமாகக் கொண்டு யாழ் சென்
ஜோன்ஸ் போஸ்கோவில் ஆரம்பக் கல்வியையும்
யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில்
உயர்தரக்கல்வியையும் கற்று
பாடசாலைக்கல்வியை பூர்த்தி செய்து கொண்டேன்.
பரதம் என்றால் என்ன என்று புரியாத
வயதிலேயே இக்கலைக்குள் நான்
அறிமுகமானேன்.
3 வயதில் பரதநாட்டிய ஆரம்ப உரு
ப்படிகளை முறைப்படி திருமதி ஞானமணி
செல்லையாவிடம்கற்க ஆரம்பித்தேன்.
தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட அசாதாரண
சூழ்நிலையால் இவரிடம் தொடர முடியாது
போக திருமதி சாந்தினி சிவனேசனிடம் கற்
கத்தொடங்கினேன்.
பாடசாலைக்காலங்களி
லேயே வட இலங்கை சங்கீதசபைப்
பரீட்சை மற்றும் ஆசிரியர் தரப்பரீட்சைகளில்
சித்தி பெற்றேன்.
எனக்கு 10 ஆம் ஆண்டு
கற்கும் காலத்திலேயே இக்கலைமீது
இருந்த அதீத ஈடுபாட்டால் உயர்தர வகுப்
பில் இதனை ஒரு பாடமாகக் கற்று தேர்ச்சி
பெற்றேன்.
இதே காலகட்டத்தில் கர்நாடக
சங்கீத இசையை திருமதி வாசஸ்பதி
ரஜீந்திரன் அவர்களிடம் கற்று இசை
மற்றும் இராகத்தை பிரித்தறியும் திறனை
வளர்த்துக் கொண்டேன்.
உயர்கல்வியை பூர்த்தி செய்து
கொண்ட பின்னர் 2001 ஆம் ஆண்டு
இராமநாதன் நுண்கலைப்பீடத்திற்கு
பரதநாட்டிய நுண்கலைப்படிப்பிற்கு தெரிவாகி
2004 ஆம் ஆண்டு மேல் வகுப்பு திறமைச்
சித்தி பெற்று நுண்கலைமானிப் பட்டம்
பெற்று வெளியேறினேன்.
தொடர்ந்து
ஆசிரியர் தர பரீட்சையில் சித்திபெற்று பரத
இசை வித்தகர் பட்டம் பெற்றேன்.
பல்கலைக்கழகத்தில் திருமதி கிருஷாந்தி ரவீந்தி
ரனிடம் கற்றதோடு மேலும் பல
விரிவுரையாளர்களிடம்
கற்று பரதத்திலுள்ள நுணுக்கங்களையும்
திறனையும் வளர்த்துக் கொண்டேன்.
தற்போது தேசிய கல்வி நிறுவகத்தில் டிப்
ளோமா கல்வியை மேற்கொண்டு வருகி
றேன்.
எனது கலைப்பிரவேசம் என்று பார்த்தால்
படிக்கும் காலத்தில் பாடசாலை மட்ட
நிகழ்வுகளிலும் மற்றும் தமிழ் இலக்கிய
விழா 2004 ஆம் ஆண்டு இந்து மகளிர் கல்
லூரி ஏரம்பு சுப்பையா அரங்கில் நடைபெற்றது.
அதைவிட பல்கலைக்கழகத்தில்
கற்கும் காலத்தில் அங்கு நடைபெறும் நிகழ்வு
களிலும் பங்கு கொண்டுள்ளேன்.
இதைவிட நல்லூர் பிரதேச
செயலகம் நடத்திய
கலாசார விழா மற்றும் தனியார்
தொலைக்காட்சி
யில் நடைபெற்று வரும் திமிதகதா
நிகழ்வில் நடுவராக செயற்பட்டுள்ளேன்.
பட்டப் படிப்பை பூர்த்தி செய்த பின்
பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளகாக
கடமையாற்றினேன்.
இதே காலகட்டத்தில்
நிரந்தர ஆசிரியர் நியமனம் கிடைத்தது.
கொழும்பு முகத்துவாரம் இந்துக்கல்லூரி
யில் 2 1/2 வருடங்கள் ஆசிரியராக
கடமையாற்றினேன்.
அதனைத் தொடர்ந்து
இன்றுவரை திருநெல்வேலி முத்துத்தம்பி
மகாவித்தியாலயத்தில் கற்பித்து
வருகிறேன்.
என்னை இவ்வளவு தூரம் கலைக்குள்
உள்ளீர்த்தவர்கள் எனது பெற்றோரும் எனது
ஆசான் திருமதி சாந்தினி சிவனேசனும்
தான்.
நான் இவ்வளவு தூரம் வளர்ந்து எனது
பணிகளை ஆரம்பிக்க துணையாக
இருந்தவர்கள் என்றும் சொல்லலாம்.
இவர்களைப்
போலவே தற்போது எனது கணவர் சகல
ஒத்துழைப்புக்களையும் தந்து எனது
சேவையை தொடர ஒத்துழைப்புக்களை
வழங்கி வருகிறார்.
இவர்களைப் போலவே
எமது பாடசாலை அதிபர் பாடசாலை மட்ட
சகல நிகழ்வுகளுக்கும் எனக்கு களம்
அமைத்துத் தந்து எனது முன்னேற்றத்திற்கு
பக்கபலமாக உள்ளார்.
இவர்களின் ஒத்துழை
ப்போடும் எனது கலைப்பயணம் தொட
ரும் என்பதில் ஐயம் இல்லை.

***வளர்ந்து வரும் கலைஞர் என்ற வகை
யில் சமூகத்திற்கு என்ன சொல்ல
விரும்புகிறீர்கள்?**

உண்மையிலேயே எமது பரதம் ஒரு சமூ
கம் சார்ந்த பாரம்பரிய கலை. இன்று வேர்
விட்டு விருட்சமாக சில இடத்தில் வளர்கிறது.
பல இடத்தில் வளரமுடியாது உள்ளது.
இதற்கு உண்மையில் முக்கிய காரணம்
பரதத்தை ஒருவரும் தெய்வீகக் கலையாக
பார்ப்பதும் இல்லை.
பேணுவதும் இல்லை.
இவை இவ்வாறு போற்றப்படாதும் பேணப்
படாதும் காணப்பட முக்கிய காரணம்
ஒன்று நாகரிக வளர்ச்சி. நடனம் என்ற
தோற்றத்தில் பல பரிமாணங்களை உருவெடுத்து
வருகின்றன.
இது உண்மையில்
வேதனைக்குரிய விடயம்.
பரதம் பரதமாக
இருக்கவேண்டும்.
கதைக்கரு கதாபாத்திரத்து
டன் ஒத்துப்போகவேண்டும்
என நாடகத்திற்கு
பார்ப்பதுபோல் நடனத்தில் பார்க்கும்
போது பரதத்தின் புனிதத் தன்மை சற்று
விலகுகிறது. இவ்வாறான தவறுகள் தற்போது
பிழையாக தெரியாது இன்னும் ஒரு
இரண்டு தசாப்தம் கழிய இவ்வாறான தவறு
கலந்த பரதமே எமக்கு (சமூகத்திற்கு)
தெரியவருகிறது.

(15 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர்காணல்:-
## சிந்துஜா திருநாவுக்கரசு

(14 ம் பக்க தொடர்ச்சி)

எனவே இந்தக்கலையை மரபுரீதியாக பேணிப்பாதுகாக்கும் பொறுப்பு வளர்ந்து வரும் சமுதாயத்தின் கைகளிலேயே உள்ளது.

**✱பரதநாட்டியத்துறை வளர்ச்சியடைந்துள்ளபோதிலும் யாழ்ப்பாணத்தில் இக்கலை பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமானளவு குறைந்து காணப்படுவதாக கூறி வருகின்றனர். இதுபற்றி உங்கள் கருத்து?**

இது ஒரு பொதுவான கருத்தாக இருந்தாலும் நானும் ஒரு ஆசிரியர் என்ற வகையில் இதற்கு பதில் சொல்ல வேண்டிய கடப்பாடு எனக்கு உள்ளது.

தற்போது இலங்கையில் அதுவும் யாழ்ப்பாணத்தில் இக்கலை நன்கு வளர்ந்து வருகிறது. யாழ்ப்பாணத்தில் கலைகளுக்காக தனி பல்கலைக்கழகமே உள்ளது. இருந்தபோதிலும் மாணவர்களுக்கு ஆர்வம் குறைய முக்கிய காரணம் இங்கு நிகழ்ச்சிகள் நடப்பது மிக மிகக் குறைவு .

இதனால் மாணவர்களுக்கு இக்கலைமீதான நாட்டம் குறைவு. ஏனெனில் தற்போது மாணவர்கள் நினைப்பது மேடைகளில் பங்கு பற்றினால் தான் நடனம். மேடைநிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்களுக்கு சிறந்த கலைஞர்கள் என்ற அங்கீகாரம் இருக்கும் என நினைப்பதுண்டு. இது முற்றிலும் தவறான ஒரு கருத்து தற்போது நாட்டு நிலமை சீராக இருப்பதுபோல் கடந்த காலங்களில் இல்லை. இருந்தபோதும் ஒவ்வொரு வருடமும் எமதுபல்கலைக்கழகத்தில் இருந்து கணிசமானஅளவு கலைப்பட்டதாரிகள் வெளியேறுகின்றனர். இவர்களில் ஒரு சிலரைப்பார்த்தால் மேடை நிகழ்வுகளில் பங்கு பற்றியிருப்பது மிக மிகக் குறைவு. எனவே இவர்கள் சிறந்த அங்கீகரிக்கப்பட்ட கலைஞர்கள் இல்லையா?. இவை மட்டுமன்றி இன்றும் கூட யாழ்ப்பாணத்தில் எல்லா பிரதேசங்களிலும் போக்குவரத்து வசதி இடம்(மண்டபம்) மற்றும் மின்சார வசதிகள்இல்லை. எனவே இவை நிவர்த்தி செய்யப்பட்டால் பிரதேச வழக்கு கலைகளும் பாரம்பரிய கலைகளும் வளரக்காரணமாக இருக்கும்.

**✱மூத்த கலைஞர்களிடம் இருந்து நீங்கள்எதிர்பார்ப்பது?**

எங்களை வளர்த்து விட்டால் போதாது. வாழவும் வைக்க வேண்டும். இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால் மூத்த ஆசான்களின் ஆசீர்வாதத்துடனும் வழிகாட்டலுடனுமே நாங்கள் இவ்வாறு வளர்ந்து உள்ளோம். எனவே நீங்கள் எங்களுக்கு சந்தர்ப்பங்களை அமைத்து தந்து எம்மையும் வெளியுலகிற்கு அறிமுகப்படுத்த வேண்டும். அது மட்டுமன்றி வெளிமாவட்ட நிகழ்வுகளுக்கு சந்தர்ப்பங்களை பெற்றுத் தந்தால் நாமோ அல்லது நமது மாணவர்களோ அதை நல்ல முறையில் பயன்படுத்தி பயன்பெறுவோம்.

**✱ஆசிரியர் என்ற வகையில் மாணவர்களிடம் நீங்கள் எதிர்பார்ப்பது?**

குறிப்பாக மாணவர்கள் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். எந்த ஒரு கலையை கற்கும் மாணவனாக இருந்தாலும் முதலில் கலைமீது ஆர்வம் ஏற்பட வேண்டும். அதே போல் குரு மீதும் பக்தி ஏற்பட வேண்டும். இவை இரண்டும் இருந்தாலே கலையில் ஒரு பூரண வளர்ச்சி பெறலாம். இவற்றைப் போலவே நிகழ்வுகளில் பங்கு கொள்ளும் தன்மையை வளர்ப்பது போல் பரீட்சைகளிலும் பங்கு கொள்ளும் தன்மைகளை வளர்க்க வேண்டும். காரணம் செய்முறையில் ஆர்வமாக இருக்கும் பிள்ளைகள் அறிமுறையில் நாட்டம் கொள்வது இல்லை.

இது உங்களை மேடைநிகழ்வுகளில் அறிமுகப்படுத்துமே தவிர பரீட்சை அடிப்படையிலோ தொழில் அடிப்படையிலோ இது உதவப்போவது இல்லை. இதேபோல் சிலர் அறிமுறையை மனனம் செய்து எழுத்துப்பரீட்சைகளில் சித்தி பெறுவார்கள் ஆனால் செய்முறை பரீட்சைகளில் பின்நிற்கின்றர்.

எனவே இவ்வாறு மாணவர்கள் இல்லாது இரண்டிலும் திறமைச் சித்திகளை காண்பிக்கவேண்டும். அப்போதுதான் நீங்கள் இன்னும் பல மாணவர்களை வழிப்படுத்த முடியும்.

இவற்றைப்போலவே பரதநாட்டியம் படிக்கும் எந்த ஒரு மாணவனுக்கும் இசை ஞானம் மிக முக்கியம். அதே போல் தாளப்பிரமானமும் முக்கியம். எனவே ஆரம்ப இசை அறிவை கற்றுக்கொள்வது அவசியம். பாடசாலைகளில் கர்நாடக சங்கீத இசை பயிலும் மாணவர்கள் நடனத்தில் உள்ளஆர்வத்தினால் நடன நிகழ்வுகளில் பங்கு கொள்கின்றனர். காரணம்இவர்களுக்கு தாளக்கட்டுக்கோப்பும் பாவத்திற்கான இசைரசனையும் இருக்கிறது. ஆனால் பரதம் மட்டும் தெரிந்த பிள்ளையால் இசை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது மிகவும்கடினம். காரணம் இசைக்கு தாளம் முக்கியம். எனவே நீங்கள் துணைப்பாடமாகவோ அல்லது மானசீக குருவை பின்பற்றியோ இசையை பயில வேண்டும்.

கலைகளைப் பொறுத்தவரை அன்று பல்கலைக்கழகங்களில் டிப்ளோமாவாக இருந்த பாடம் இன்று பட்டப்படிப்பாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.



அதிலும் யாழ் மாவட்டத்தை பொறுத்தவரை மாண்வர்கள் சொந்த இடத்தில் படிக்கக்கூடிய வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளபோதிலும் இன்று புலம் பெயர்ந்து சென்று கல்வியை தொடர்கின்றனர். எனவே இதனை முடிந்தளவு தவிர்த்துக்கொள்ளலாம். இலங்கையில் இல்லாத ( கலைகளில் பட்டமேற்படிப்பு முனைவர்) படிப்புக்களை புலம் பெயர்ந்தோ தொலைக்கல்வி மூலமோ படிப்பதில் எந்த வித தவறும் இல்லை. அதை நான் வரவேற்பேன். ஏனெனில் இனிவரும் காலங்களில் இவர்கள் மூலமாக பல்கலைக்கழகங்களில் மேற்படிப்பை உருவாக்கலாம். இதனால் சகல கலைஞர்களும் பயன்பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலகிக் கொண்ட விக்ரம் விளக்கம் சொன்ன சசி



சசிகுமார் இயக்கத்தில் சமுத்திரகனி, சமுத்திரகனி இயக்கத்தில் சசிகுமார் என கோடம்பாக்கத்தில் மாரத்தான் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் இருவரும். சசி இயக்கிய சுப்ரமணியபுரம் படத்தில் வில்லங்க சித்தப்பாவாக நடித்தார் சமுத்திரகனி. சமுத்திரகனி இயக்கிய நாடோடிகளில் காதல் போராளியாக நடித்தார் சசி. இப்போது மீண்டும் சசி இயக்கும் ஈசன் படத்தில் சமுத்திரகனிக்கு முக்கிய வேடம் தந்திருக்கிறார் சசி. பத்து மாதங்களுக்கு முன்பே படத்தின் வேலைகள் தொடங்கிவிட்டாலும் மொத்த படப்பிடிப்பும் முடிவடையும் தருவாயில்தான் படத்தின் தலைப்பை வெளியிட்டுள்ளார் சசிகுமார். 'ஈசன்' அது யாரு? என்றபோது பேச ஆரம்பித்தார் சசி. 'அது படத்தை பார்த்தாதான் புரியும். இன்றைய இளைஞர்கள், அவர்களது பிரச்சனைகள் எல்லாவற்றுக்கும் தெளிவான ஒரு முடிவை இந்த கதையில் பார்க்கலாம். சென்னை நகரத்தின் மறு பக்கத்தை இதுவரை எந்த சினிமாவிலும் காட்டாத நகரத்தின் இன்னொரு முகத்தை பதிவு செய்திருக்கிறேன். ஒரு படத்தை பார்த்தோம் போனோம் என்ற வழக்கமான உணர்வை தாண்டி ஈசன் பாதிப்பை ஏற்படுத்துவான் என்று நிச்சயமாக சொல்ல முடியும். அனுபவ், அபர்ணா,அபிநயாவுடன் நிறைய புது முகங்களை நடிக்க வைத்திருக்கேன். சுப்ரமணியபுரத்தில் சமுத்திரகனியை கெட்டவனாக காட்டியிருந்தேன். இதில் ரொம்ப ரொம்ப ரொம்ப நல்லவராக காட்டியிருக்கேன்.

நேர்மையான போலீஸ் அதிகாரியா நடித்திருக்கிறார். ஆரம்பத்தில் இந்த படத்தை விக்ரம்தான் தயாரித்தார். அப்புறம் பட்ஜெட் அதிகமாகுதுன்னு அவர் பீல் பண்ணினார். அதனால இப்போ நானே நண்பர்கள் உதவியுடன் தயாரிக்கிறேன்' என்றார். இன்னொரு தகவல், அடுத்து சமுத்திரகனி இயக்கும் 'போராளி' படத்தில் சசிகுமார்தான் ஹீரோவாம்.

# ரீமேக் படங்களின் நாயகி - ஜெனிலியா



சச்சின், 'சந்தோஷ் சுப்பிரமணியம்' போன்ற பல ஹிட் படங்களின் நாயகி ஜெனிலியாவை தற்போது அதிகமாக ரீமேக் படங்களில் அதிகமாக நடிப்பதனால் ரீமேக் நாயகி என்ற பட்டத்தோடு வலம் வருகிறார். அவர் நடித்த படங்கள் மட்டுமல்லாது தற்போது நடித்துக் கொண்டிருக்கிற பெரும்பாலான படங்கள் அனைத்துமே ரீமேக் படங்கள்தானாம்.

தமிழில் அதிக ரீமேக் படங்களில் நடித்த ஹீரோக்களில் முன்னணி வகிப்பவர்கள் ஜெயம் ரவியும், விஜய்யும் என்ற பட்டத்தைக்கூட அவர்களது ரசிகர்கள் கொடுத்துவிட்டனர். அதேபோன்று அதி ரீமேக் படங்களின் நாயகி ஜெனிலயாவே. தற்போது அவர் தனுஷுடன் இணைந்து நடித்துள்ள 'உத்தமபுத்திரன்' தெலுங்கில் உருவான ரெடியின் ரீமேக்தான். அதேபோல இதன் இந்திப் பதிப்பிலும் ஜெனிலியாவே நடிக்கவுள்ளார்.

பொம்மரிலு படம் தமிழில் சந்தோஷ் சுப்ரமணியமாக உருவானபோது அதில் நயாகியாக நடித்தவர் ஜெனிலியாதான். இதே படம் இந்திக்குப் போனபோதும் அதிலும் ஜெனிலியா நாயகிதான்.

இப்படி தொடர்ந்து ரீமேக் படங்களாகவே நடித்து வருவதால் அவரை ரீமேக் ராணி என்றும் கோலிவுட்டில் செல்லமாக அழைக்க ஆரம்பித்துள்ளனராம்.

ஹிந்தி, மலையாளம், கன்னடம், தமிழ் அனைத்திலும் முன்னணி நாயகியாகிவிடவேண்டும் என்ற துடிப்பு மற்ற முன்னணி நாயகிகளின் பட வாய்ப்புகளைக் கூட தட்டிப் பறிப்பதில் குறியாக இருப்பது மட்டுமல்லாமல் பல ஹீரோக்களை தனது வலையில் சிக்க வைப்பதிலும் குறியாக இருப்பதாகவும் சில நாட்களுக்கு முன்னர் கிசுகிசுக்கப்பட்டவர் இந்த ஜெனிலியா. அது மட்டுமல்லாமல் தமிழ் ஹிந்தியில் முன்னணியில் நடித்துவரும் அசின் இவர்மீது கடும் கடுப்பாக உள்ளதாகவும் வதந்திகள் பல பரவியிருந்தது ஞாபகமிருக்கலாம். இவ்வாறு பல மொழிகளிலும் பல நாயகளின் வாய்ப்பை தட்டிப்பறிப்பதனால்தான் இவருக்கு ரீமேக் நாயகி என்ற பட்டம் வழங்கப்பட்டுள்ளதாம்.

# தீபாவளி



'உத்தமபுத்திரன்'

# முன்னணி நாயர்க

தமிழ் படங்களில் நடித்தால் முன்னணி ந
யாமணி. இதை ஒரு நோககமாக வைத்திருப்
ஏதும் வரவில்லை எனகிறார்கள். பிரியாமணி
எந்த வாய்ப்பும் இல்லாத நிலை. கவர்ச்சிக்கு
தேடி பட வாய்ப்புகள் ஏதும் தேடி வரவில்லை
கம் வாய்ப்புத் தேடுகின்றாராம். பட வாய்ப்பு
முன்னணி ஹீரோக்களுடன்தான் நடிப்பேன்
இதனால் தமிழ் சினிமாவில் தற்போது பிசியா
கியுள்ளனராம். தமிழ் சினிமாவிலும் பிரியா
மும் அவ்வளவாக இல்லை என்பதால் பிரியா
கைக்குப் போய்ச்சேராத நிலை தொடருகிறதா

யாழ் ஓசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டில் நான்கு தமிழ் படங்கள்


'வா குவார்ட்டர் கட்டிங்'

தீபாவளிப் படங்கள் ஒரு வழியாக இறுதி செய்யப்பட்டுவிட்டன. இன்றைய நிலவரப்படி, 'வல்லக்கோட்டை', 'மைனா', 'வ குவார்ட்டர் கட்டிங்' மற்றும் 'உத்தமபுத்திரன்' ஆகிய நான்கு ஒரிஜினல் தமிழ்ப் படங்களும், ஸ்ட்ரீட் டான்ஸர் ன்ற 3 டி டப்பிங் படமும் வெள்ளிக்கிழமை தீபாவளி? விருந்தாக வெளியா கின்றன. எந்திரன் வெளியாகி ஒரு மாதமாகிவிட்டது. தமிழகத்தின் பெரும்பாலான திரையரங்குகளில் எந்திரனே இன்னும் ஓடிக் கொண்டுள்ளது. கிராமப்புற திரையரங்குகளில் 65 சதவீத கூட்டமும், நகர்ப்புற திரையரங்குகளில் 80 சதவீத கூட்டமும் இருப்பதாக கூறப்படுகிறது. இந்த மாதத்தில் 10க்கும் மேற்பட்ட புதிய படங்கள் வெளியாகி புஸ்வ ணமாகிவிட்டன. தொட்டுப்பார் மற்றும் ஒச்சாயி படங்கள் சுமாராக ஓடிக் கொண்டுள்ளன. எந்திரன் தவிர்த்துப் பார்த்தால் இந்த இரு வாரங்களாக, புதிய படங்களால் 1 சதவீத வருவாய் கூட இல்லை என பாக்ஸ் ஆபீஸ் வட்டாரங்கள் புலம்புகின்றன.

இந்த சூழலில் நான்கு புதிய படங்கள் தீபாவளிக்கு வெளியாகின்றன. ஸ்ட்ரீட் டான்ஸர் ஆங்கிலத்திலிருந்து டப் செய்யப்பட்ட படம். முற்றிலும் 3டி செய்யப்பட்டது. தீபாவளிக்கு வரவுள்ள படங்களில் மைனா பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் பாடல்கள் ஏற்கனவே ஹிட் ஆகியுள்ளன. வித்தியாசமான கதைய ம்சத்துடன் உருவாகியுள்ளதாக திரையுலகில் ஏற்கனவே புகழ ஆரம்பித்துள்ளனர்.


'மைனா'

## ...களுடன் மட்டுமே நடிப்பேன்

ஹீரோக்களுடன் மட்டுமே நடிப்பாராம் பிரி ...ப்பதால்தான் அவரைத் தேடி பட வாய்ப்பு ...னிக்கு தமிழில் துடைத்து எடுத்தது போல ...க்கு அவர் தாவியதிலிருந்தே அவரைத் ...ல. இதனால் தற்போது தெலுங்குப் பக் ...புகள் இல்லாத நிலையிலும் தமிழில் ...ன் என்று பிடிவாதமாக உள்ளாராம். ...பாக இருக்கும் பிற நடிகர்கள் கடுப்பா ...யா மணியை நடிக்க வைக்கும் ஆர்வ ...யா மணிக்கு தொடர்ந்து தமிழ்ப் படம் ...தாம்.


பிரியாமணி

சினிமா

## ஐஸுக்கு வயது 37

பொலிவுட் நடிகை ஐஸ்வர்யா ராய் தனது 37வது பிறந்த நாளை அண்மையில் தனது குடும்பத்தினருடன் எளிமையாக கொண்டாடினார்.

பிறந்த நாள் நள்ளிரவு முதல் ஐஸ்வர்யாவுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள் குவியத் தொடங்கி விட்டதாம். பிறந்தநாளன்று தனது மாமனார் அமிதாப் பச்சன், மாமியார் ஜெயா பச்சன், கணவர் அபிஷேக் பச்சன் ஆகியோர் புடை சூழ வீட்டிலேயே எழிமையாக 'கேக்' வெட்டி சந்தோஷமாகக் கொண்டாடினார் ஐஸ்வர்யா.

ஐஸ்வர்யா பிறந்த நாள் குறித்து அமிதாப் பச்சன் தனது பிளாக்கில், நாங்கள் வீட்டுக் குக் கிளம்பி விட்டோம். நள்ளிரவாகி விட் டது. எனது மருமகளுக்கு இனிய பிறந்த நாள் வாழ்த்துக்களை இப்போது தெரிவி த்துக் கொள் கிறேன். மருமகளே, இதுவரை நடந்த சாதனைகளை விட இன்னும் பல பெரிய சாதனைகளை புரிவாயாக என்று வாழ் த்துகிறேன் என்று கூறியிருந்தார் அமிதாப்.

பிறந்தநாளன்று நண்பகல் தனது கணவருடன் மதிய உணவு விருந்தில் கலந்து கொண்டார் ஐஸ்வர்யா. இந்தப் புகைப்படத்தையும் தனது ட்விட்டர் தளத்தில் வெளியிட்டுள்ளார். நீல நிற உடையில் கையில் மெஹந்தியுடன் படு ஜோராக காணப்படுகிறார் ஐஸ்வர்யா.



## கண்ணபிரானில் கைகோர்க்கும் விஜய் – அமீர்



தலையைகூட மாற்றி சீவ மாட்டாரா? ரசிகர்களிடமிருந்து இப்படி ஒரு விமர்சனத்தையும் ஆதங்கத்தையும் நீண்ட நாட்களாகவே சந்தித்துவருகிறார் விஜய். பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற தயக்கத்தில் விஜய்யை இயக்கும் பல இயக்குனர்கள் அவருக்கு வேறொரு பரிமாணம் கொடுக்காமல் தள்ளியே நிற்கிறார்கள்.

ஆனால் இளையதளபதிக்குள் இருக்கும் இன்னொரு திறமைசாலியை அடையாளம் காட்ட ரெடியாகிவிட்டார் அமீர். பருத்தி வீரன் படத்திற்கு முன்பிலிருந்தே தனது 'கண்ணபிரான்' கதை பற்றி பெருமையாக சொல்லிவருகிறார் அமீர். இந்த கதையை விஜய்க்கு சொல்லி ஓ.கேவும் வாங்கிவிட்டாராம். சமீபத்தில் முழு ஸ்கிரிப்டையும் கேட்ட விஜய், 'அண்ணா. நீங்க என்ன சொல்றீங்களோ அத செய்யுறேன். இந்த படத்திற்காக உங்க கிட்ட என்னை ஒப்படைத்து விடுகிறேன்' என் சம்மதத்துடன் சத்தியத்தையும் கலந்து கொடுத்துள்ளாராம் விஜய். பருத்தி வீரனில் ருசித்த மெகா வெற்றி, யோகியில் சந்தித்த படுதோல்வி என இரண்டு அனுபவங்களையும் பார்த்துவிட்ட அமீர், ஜெயம்ரவியை வைத்து ஆதிபகவானை பக்கா கமர்ஷியலாக இயக்கிவருகிறார்.

இந்த படம் முடிந்ததும் கண்ணபிரானுக்காக விஜய்யை களமிறக்க காத்திருக்கிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் மலர்

## மாகாண மட்டத்தில் முதலிடம்



ஆரம்பக்கல்வி மாணவர்களிடையே வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட வாய்ப்பாடு மனனப்போட்டியில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவன் சிவராசா ரேனுஜன் முதலிடம் பெற்றுள்ளார். இவர் கிளிநொச்சி மாவட்டத்தில் விரைவு கணிதம், வாய்ப்பாட்டு மனனம் ஆகிய போட்டிகளில் முதலாம் இடத்தையும், இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்158 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலிடம் பெற்று படசாலை சமூகத்தால் பாராட்டுப் பெற்றுள்ளார்.

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மருதங்கேணி கல்விக்கோட்டத்தில் முதல் தரத்தில் சித்திபெற்ற மாணவி



வடமராட்சி-மணற்காடு றோமன் கத்தோலிக்க வித்தியாலய மாணவி யோகதாசன் மேரிடியூகானி 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

இவர் பாடசாலை மட்டத்தில் முதலாமிடத்தையும் மருதங்கேணிக் கல்விக் கோட்டத்தில் மேற்படிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற முதல்தர மாணவியாகவும் விளங்குகின்றார். இவரை பாடசாலை அதிபர் பி. பொன்னம்பலமும் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளும் மணற்காடு பங்குத்தந்தை ஆகியோரும் பாராட்டியுள்ளனர்.

## மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிக்கு தேசிய விருது



மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி செல்வி தனஞ்சிகா சின்னராசா தரம் 9 - 11 மாணவர்களுக்கான சிறுகதைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

ஹற்றன் நெஷனல் வங்கி கல்வி அமைச்சுடன் இணைந்து நடத்திய இப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றமைக்காக கடந்த 02.10.2010 அன்று மகரகம இளைஞர் மாநாட்டு மண்டபத்தில் பிரதிக் கல்வியமைச்சர் ஏக்கநாயக்காவால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



இந்தியா, மியன்மார், சீனா, தாய்லாந்து போன்ற நாடுகளில் வசிக்கும் மான் இனங்களில் ஒன்று 'மண்டியாகஸ்' எனப்படும் குரைக்கும் மான். பரிமாணக் கோட்பாட்டின்படி இவை மிகவும் பழைமையான மான் இனம். இவை, புலி போன்ற எதிரிகளைப் பார்த்துவிட்டால் தங்கள் கூட்டத்தை எச்சரிக்க நாய் போல் குரைக்கும். இவற்றால் அரை மணி நேரம் இடைவிடாமல் குரைக்க முடியும்.



நேபாளத்தில் காத்மண்டு பள்ளத்தாக்கில் 'நேவார்' என்ற மக்கள் வசிக்கிறார்கள். சிறுவயதிலேயே திருமணம் செய்து கொண்டால் சீக்கிரத்தில் முதுமை வராது என்றொரு நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. அதனால், ஆறு வயதிலேயே அங்குள்ள ஆரஞ்சு மரத்துடன் திருமணம் செய்து வைப்பார்கள் பெரியவர்களானதும் வழக்கமான திருமணம் நடக்கும்.

## யுத்தம்



காலையில் ஆரம்பித்த போர், ஒரு முடிவுக்கு வராமல் தொடர்ந்துகொண்டிருந்தது.

ராஜராஜசோழனும் பாண்டிய ராஜனும் கடுமையாக மோதிக் கொண்டார்கள். இரண்டு பக்கமும் சமபலத்துடன் மோதல் நடந்தது. வீரர்களும், யானைகளும், குதிரைகளும் இரு பக்கமும் வெட்டிச் சாய்க்கப்பட்டன. இருவரும் சமபலத்துடன் மோதியதால் வெற்றி யாருக்கு... தோல்வி யாருக்கு என்றே தெரியவில்லை. ஒரு கட்டத்தில், பாண்டிய ராஜன் ராஜராஜசோழனை எச்சரித்தான், "உன் தோல்வியை ஒப்புக்கொள், இல்லையேல் அரசனென்றும் பார்க்காமல் வெட்டிவிடுவேன்" என்றான். இதற்கு ஒப்புக்கொள்ளாத ராஜராஜனோ... முன்பை விட ஆக்ரோஷத்துடன் தனது போராட்ட யுக்தியை மாற்றி, பாண்டியராஜனுக்கு சவால் விட்டான்.

நேரமோ கடந்துகொண்டிருந்தது. மீண்டும் இரண்டு பக்கமும் பலத்த சேதம். கடைசியில் மிஞ்சியது ராஜாக்கள் மட்டும்தான்.

இதற்கு மேலும் தொடர விதிகளில் இடம் இல்லாததால், ஆட்டம் அதோடு நிறுத்தப்பட்டது. இருவரும் 'செஸ்' போட்டில் தங்கள் விளையாட்டுக் காய்களை அடுக்கிவைத்து மீண்டும் புதிய ஆட்டத்துக்குத் தயாரானார்கள்!





1870இல் பிரான்ஸ் மீது ரஷ்யா போர் தொடுத்தது. பிரான்ஸ் தனது நேச நாடான பொலியாவிடம் உதவி கேட்டது. அந்நாட்டின் ஜனாதிபதி 'மரியானோ மல்கரோஜோ' அனுப்பிய படை 7,000 மைல்கள் நீளத்துக்கு இருந்தது.



ஒரு பாத்திரத்திலிருந்து நீர் ஆவியாகும் போது அந்த பாத்திரத்தை விட 1,600 மடங்கு விரிவடையும்.



சுமார் ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த டைனோசர் பறவை இனங்களில் ஒன்றுதான் ஈபியோர்னிஸ். பிறக்கும்போது கோழிக் குஞ்சு அளவே இருக்கும் இவை முழுதாக வளர்ந்த பின் இரண்டடுக்கு மாடிக் கட்டடம் உயரத்துக்கு இருக்குமாம்.



ம.ஜனனி பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம். தரம் 4B



சி.சுபநிதா பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம் தரம் 4B


சிறுவர்களே உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

யாழ் ஓசை 117, ஸ்டேசன் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கன் இலங்கை மிசனுடைய தாய்ச்சங்கத்தின் (ABCFM) 200வது ஆண்டு நிறைவு (1810 – 2010)



இன்று ஏறத்தாழ 30 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் நடைபெற்ற கொடிய யுத்தம் நிறைவு கண்டுள்ளது. ஆனாலும் இந்த யுத்தம் விட்டுச்சென்ற காயங்கள் எண்ணிலடங்காதவை. அவற்றில் தமிழ் மக்களுடைய புலப்பெயர்வும், சமூகச் சீரழிவுகளும் முக்கிய இடத்தைப் பெற்றுக்கொள்கின்றன. இவற்றின் மத்தியிலும் வடபகுதியில் காணப்படுகின்ற கல்வி வளர்ச்சிக்கும், மருத்துவ சாதனைகளுக்கும், சமூக மேம்பாட்டிற்கும், 1816 ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து வருகை தந்த மிசனரிமாரே அதிகம் பங்களிப்புச் செய்துள்ளனர் என்பது பெருமைக்குரிய விடயமாகும். இவ்வருடம் இவர்களை இங்கு அனுப்பிய இவர்களுடைய தாய்ச்சங்கமான 'பிறதேசத்திற்கு மிசனரிமாரை அனுப்பும் அமெரிக்க சங்கத்தின்' American Board of Commissi oners for Foreign Mission - ABCFM) 200வது ஆண்டு நிறைவு அமெரிக்காவில் நன்றியுடன் அனுசரிக்கப்பட்டது. அதன் பணிகளைத் தொடர்ந்து செய்துவரும் அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபையும் இந்த மிசன் தொண்டர்களின் தியாக வாழ்வை நினைந்து 200வது ஆண்டு நிறைவை இம் மாதத்தில் கொண்டாடுகின்றது. இதனையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

அமெரிக்க மிசனரிமார் இங்கு வந்தபொழுது வடபகுதியில் மூடப் பழக்கவழக்கங்கள் அநேகம் காணப்பட்டன. கல்வி கற்கின்ற ஆர்வம் எவருக்கும் இருக்கவில்லை. ஒருசில பண்டிதர்களுடைய திண்ணைப் பள்ளிக்கூடங்களைத் தவிர பாடசாலைகள் இருக்கவில்லை. படை வீரர்களுக்கான வைத்தியசாலை ஒன்றைத் தவிர பொதுமக்களிற்கான வைத்தியசாலைகள் எதுவும் இருக்கவில்லை. மக்கள் மற்றைய இடங்களில் வாழும் மக்களை விட தனிமைப்படுத்தப்பட்டவர்களாகவே வாழ்ந்து வந்தனர்.

**அமெரிக்கன் மிசனின் தோற்றம்**

17ம் நூற்றாண்டில் இங்கிலாந்து தேசத்தில் சமய சார்பான அறவாழ்வு, அரசியல் ஆள்கை முறைமை என்பவற்றை விரும்பாதவர்கள் இங்கிலாந்தை விட்டு வெளியேறி 1620இல் அமெரிக்காவில் வடகிழக்குக் கரையோரத்திலே குடியேறினர். இவர்கள் தாம் குடியேறிய இடத்தை நியூ இங்கிலாந்து' (New England) எனப்பெயரிட்டனர். இவர்களுடைய வாழ்வைக் கண்ட அப்பகுதி மக்கள் இவர்களை 'புனித பிதாக்கள்' (Pilgrim Fathers) என அழைத்தனர். அங்கு அவர்கள் மிக ஆர்வத்துடன் பாடசாலைகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், குருத்துவப் பள்ளிகள் என்பவற்றை ஆரம்பித்ததுடன் சமூகப் பணிகளையும் சிறப்பாகச் செய்து வந்தனர்.

இவர்கள் வாழ்ந்த 'மசாட்ஸ்சுசெட்ஸ்' (Machatchusats) மாநிலத்தில் 'வில்லியம்ஸ் கல்லூரி' (William College) மிகச் சிறப்பான ஒரு கிறிஸ்தவக்கல்லூரியாகத் திகழ்ந்தது. அங்கு சாமுவேல் மில்ஸ்



(Samuel Mills) என்ற வாலிபன் தன்னுடைய 23வது வயதில் 1806ஆம் வருடம் இக்கல்லூரியில் சேர்ந்து பயின்று வந்தான். அவனும் அவனுடைய நண்பர்கள் நான்குபேரும் வாரத்தில் இருமுறை கல்லூரி வளாகத்தில் உள்ள ஒரு பூங்காவில் ஒழுங்காகக் கூடி செபித்து வந்தனர். ஒருநாள் இவர்கள் செபிப்பதற்காக பூங்காவிற்குள் சென்றபோது பலத்த புயல், இடியுடன் கூடிய மழை பொழிந்தது. அவ்வேளையில் இவர்கள் செபிப்பதற்காக வைக்கோலில் செய்யப்பட்ட ஒரு குடிசைக்குள்ளே புகுந்து தொடர்ந்து ஒருமனப்பட்டு செபித்தனர். இதன் விளைவாக சாமுவேல் மில்ஸூம் அவருடைய நண்பர்களும் தம்மைத் தூர தேச மிசன் பணிக்காக ஒப்புக்கொடுத்தனர். இவர்களே அமெரிக்கன் மிசனின் முன்னோடிகள் ஆவர்.

இவர்களில் சாமுவேல் மில்ஸ் என்பவர் 1810ஆம் ஆண்டின் முற்பகுதியில் கிறிஸ்தவ இறையியலைக் கற்பதற்காக 'அன்டோவர் நியூட்டன் இறையியல் கல்லூரியில்' (Andover Newton Theological Seminary) இணைந்துகொண்டார். இக்கல்லூரியில் மில்ஸ் அவர்களும் அவருடைய நண்பர்களும் தம்மை பிறதேச மிசன் பணிக்கான அர்ப்பணித்தனர். இதன் விளைவாக 'பிறதேசத்திற்கு மிசன் தொண்டர்களை அனுப்பும் அமெரிக்க சங்கம்' (American Board of Commissioners for Foreign Mission -ABCFM) உருவானது.

**ABCFM இன் முதல் மிசனரிமார்**

அமெரிக்கன் மிசன் சங்கத்தின் முதல் மிசனரிமார் 1812ஆம் ஆண்டு இந்தியாவிற்கு இறை பணிக்காகப் புறப்பட்டனர். பிரித்தானிய ஆட்சியாளர்கள் இவர்களை அனுமதிக்காமையினால் அவர்களில் ஒருவரான சாமுவேல் நியுவெல் அவர்கள் மனைவி, குழந்தை ஆகியோரது இழப்புக்களோடும் யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்தார். இங்கு வந்த சாமுவேல் நியுவெல் அவர்கள் தெல்லிப்பளையிலிருந்த ஒல்லாந்தர் பாவித்த ஆலய வீட்டில் குடியேறி அமெரிக்கன் மிசனுடைய பணிகளை பல சவால்களுக்கு மத்தியிலும் ஆரம்பித்தார். இங்கிருந்து, யாழ்ப்பாணம் மிசன் பணிக்கு மிகவும் பொருத்தமான இடம் என்றும், இங்கு ஆளுகை புரியும் அரசினர் மிசனரிமாருக்கு அதிகம் உதவியாக உள்ளனர் என்றும் இலங்கையில் குடிசனம் மிகக் குறைவானது என்றும், இவர்களை மிசனரிமார் சந்திப்பது இலகுவானது என்றும், இலங்கையில் தமிழ், சிங்களம் எனும் இருபாஷைகள் மட்டும் பாவனையில் உள்ளன என்றும் மேலும் மிசனரிமாரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்புங்கள் என்றும் கடிதம் எழுதினார்.

இதன் விளைவாக 1816 இல் வந்த இரண்டாவது அணியிலே வண. ஜேம்ஸ் றிச்சட்ஸ், திருமதி. ஜேம்ஸ் றிச்சட்ஸ், வண. பி. சி. மெக்ஸ், திருமதி. மெக்ஸ், வண. டானியல் பூவர், திருமதி. டானியல் பூவர், வண. எச். பார்ட்வெல், திருமதி. பார்ட்வெல், வண. எட்வேர்ட் வொறன் ஆகியோர் அடங்கியிருந்தனர். இவர்கள் நற்செய்திப்பணியோடு கல்விப்பணியையும், வைத்தியப் பணியையும், சமூகப்பணியையும் மேற்கொண்டனர்.

**மிசனரிமாரின் வருகையினால் ஏற்பட்ட சமூக மாற்றங்கள்**

இவர்கள் யாழ்ப்பாணம் வந்தபொழுது மக்கள் கல்வியிலே மிகவும் பின்தங்கியிருந்தனர். பெண்கள் கல்வி கற்பது இழிவான செயல் என்று எண்ணினர். ஆனாலும் வண. மெக்ஸ் ஐயர் தமது நாட்குறிப்பில் தாம் அளவெட்டியில் ஒரு பெண்ணையும், உடுப்பிட்டியில் ஒரு பெண்ணையும் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக கண்டேன் எனக் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் யாழ்ப்பாணத்தில் காலடி எடுத்து வைத்து இரண்டு வருடத்திற்குள்ளேயே 400 பிள்ளைகளுடன் 12 பாடசாலைகளை ஸ்தாபித்து நடத்தினர். 1823ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் 'பற்றிக்கோட்டா செமினரி' என்னும் ஓர் உயர்கல்விக் கூடத்தை வண. டானியல் பூவர் அவர்கள் ஆரம்பித்தார்.

இங்கே வானசாஸ்திரம், மெய்யியல் போன்ற அனைத்துப் பாடங்களும் புகட்டப்பட்டன. இந்த உயர்கல்விக்கூடமே 1872ஆம் ஆண்டிற்குப் பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரி என்று அழைக்கப்படுகிறது.

1824இல் உடுவிலில் திருமதி. ஹரியற் வின்சிலோவால் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் பாடசாலையே தென்னாசியாவில் முதல் முதல் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் விடுதிப் பாடசாலையெனப் பெயர் பெற்றது.

கல்வி கற்கத் தம் பிள்ளைகளை அனுப்பத் தயங்கிய பெற்றோர் இங்கு கல்வி கற்ற பெண்பிள்ளைகளுடைய அதீத முன்னேற்றத்தைக் கண்டு காலப்போக்கில் தம்பிள்ளைகளையும் இக்



கல்லூரிக்கு அனுப்பிவைத்தனர். 1834 இல் மிசனரிமார் மானிப்பாயில் ஒரு மிசன் அச்சகத்தை ஆரம்பித்தனர்.

*(தொடரும்)*

ஆக்கம்
ஏயெஸ்ரி. ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களைப் போல் புத்தகங்களும் சாதனைகளைப் புரிகின்றன

## நல்ல புத்தகங்களை நேசிக்க வேண்டும் என்கிறார் ஹஸன்

நிந்தவூர்,

மனிதர்களைப் போல் புத்தகங்களும் சாதனைகளைப் புரிகின்றன. சில புத்தகங்கள் மனிதர்களை விடவும் கூடிய அளவில் சாதனைகள் புரிந்துள்ளன. அதனால் நல்ல புத்தகங்களை நேசிக்க வேண்டும்.

இவ்வாறு நிந்தவூர் கமு / அல் - மதீனா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நூலக வாரத்தின் இறுதி நிகழ்வில் சிறப்புரையாற்றிய தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கவுன்ஸில் உறுப்பினரும், நெசி அமைப்பின் உபதலைவரும், சமூக சேவையாளருமான பீ. ரீ. ஏ. ஹஸன் தெரிவித்தார்.

பாடசாலையின் நூலகக் குழுவின் தலைவர் பீ. ரீ. ஏ. றஹீம் தலைமையில் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

மாணவர்களாகிய நீங்கள் இப்பருவத்திலிருந்தே வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். வாசிப்பு நல்ல பிரஜைகளை உருவாக்கும்.

மேலும் வாசிப்பதன் மூலமாக ஆளுமை விருத்தியடைகின்றது. மன அழுத்தங்கள் குறைவடைகின்றன. சொல்வளத்தை அதிகரிக்கச் செய்யும். ஞாபக சக்தியை வளர்க்கும். எழுத்தாளர்களை உருவாக்கவும் முடிகின்றது.

பாடசாலைப் பருவத்திலிருந்தே வாசிப்பை ஒரு பழக்கமாக ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். வாசிப்பதனை சுவாரஸ்யமாக்கிக் கொள்ளல் வேண்டும். வாசிப்பதற்காக தினமும் நேரம் ஒதுக்கிக் கொள்ளல் வேண்டும் என்றார்.

இவ்வைபவத்தில் நூலக வாரம் மற்றும் வாசிப்பு மாதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சு, சிறுகதை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# மகளிர் விவகார அமைச்சினால் பல அபிவிருத்தித்திட்டங்கள் ஆரம்பம்

புதியகாத்தான்குடி,

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வினால் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான அபிவிருத்திப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

காத்தான்குடி பிரதேச செயலாளர் எஸ். எச்.முசம்மில் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தின்போது தையல் பயிற்சியை பூர்த்தி செய்த மாணவிகளுக்கு 25 தையல் இயந்திரங்கள், மரநடுகைக்கான மரக்கன்றுகள் விநியோகம், காணி உறுதி பத்திரம் வழங்கல் உள்ளிட்ட பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

இவ்வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஹிஸ்புல்லாஹ் ஜனாதிபதியின் மகிந்த சிந்தனை மூலம் இந்த நாடு துரித வளர்ச்சி கண்டு வருகின்றது.

வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடுவதன்மூலம் எமது மண்ணைக்கட்டியெழுப்பலாம் எனத் தெரிவித்தார். இந்நிகழ்வில் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபையின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# அம்பாறை உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்புடன் தேசிய மர நடுகை வேலைத் திட்டம்

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 65 ஆவது பிறந்த தினம், இரண்டாவது பதவியேற்பு வைபவம் என்பனவற்றையொட்டி சுற்றாடல் அமைச்சு ஏற்பாடு செய்துள்ள தேசிய மரநடுகை வேலைத் திட்டத்திற்கு அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவுள்ளன.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம். உதயகுமாரின் பணிப்புரைக்கமைவாக இதற்கான விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏ.ஜே.எம். இர்ஷாட் தெரிவித்தார். மாவட்டத்திலுள்ள பொது இடங்கள், வீதி ஓரங்கள் என்பனவற்றில் மரக்கன்றுகளை நடுவதற்கும் அவற்றை நீருற்றி சீராகப் பராமரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

தூய்மையான நாடு, அழகான நாடு திட்டத்தின் கீழ் நடைமுறைபடுத்தப்படும் இவ் வேலைத் திட்டத்தின் மூலம் நடப்படும் மரக்கன்றின் பெயர், நடப்பட்ட திகதி, பராமரிப்பிற்குப் பொறுப்பானவர் போன்ற விபரங்கள் அடங்கிய எழுத்து மூல பதிவேடு பேணப்படவுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் மரம் நடுவதற்குப் பொருத்தமான இடத்தினை அடையாளப்படுத்தி அது பற்றிய விபரத்தினை அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# பட்டிப்பளை கல்வி வலயத்தின் நிர்வாக செயற்பாடுகள் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பம்

(துறைநீலாவணை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேச மக்களினதும் மாணவர்களினதும் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கல்வி வலயமாகிய பட்டிப்பளை கல்வி வலயத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பட்டிப்பளை பிரதேச சபைக்கு உரித்தான குறிஞ்சாமுனையில் அமைந்துள்ள பொது நூலக கட்டிடத்தில் தற்காலிகமாக பட்டிப்பளை கல்வி வலயம் தொழிற்படவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் இக் கல்வி வலயத்திற்கான நிர்வாக கட்டமைப்பை உருவாக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதுடன் ஆளணி, பௌதீக வளம் என்பவற்றை ஏற்படுத்தும் பணிகளும் இடம்பெறவுள்ளது.

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பட்டிப்பளை கல்வி வலயத்திற்கான வலயக் கல்விப் பணிப்பாளராக இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் அனுபவமும் ஆற்றலும் மிக்க சிரேஷ்ட அதிகாரியான க. பாஸ்கரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பட்டிருப்பு கல்வி வலயத்தில் கடந்த மூன்று மாத காலமாக நிர்வாகத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளராகப் பணியாற்றி வந்த க. பாஸ்கரன், பட்டிப்பளை கல்வி வலயத்திற்கான வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டமை குறித்து கல்விப் புலத்தில் பணியாற்றுபவர்கள் மற்றும் பொது மக்கள், கிழக்கு மாகாண ஆளுனர், கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை- சந்திரகாந்தன், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. நிசாம் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கின்றனர்.

கடந்த கால போர்ச் சூழல் காரணமாக எண்ணிப் பார்க்க முடியாத பல இழப்புகளைச் சந்தித்த படுவான்கரைப் பிரதேசத்தின் கல்வி நிலை போர்ச் சூழலால் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்துள்ளது.

இவை தவிர சீரான போக்குவரத்து வசதி இன்மை, முறையான வீதி வடிகாலமைப்பு வசதி இன்மை, வறுமை போன்ற பல காரணங்களாலும் இப்பிரதேச மாணவர்களின் கல்வியில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தின.

இந் நிலையில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இக் கல்வி வலயத்தின் பணிகள் வினைத்திறன் மிக்கதாக அமைய வேண்டுமாயின் ஆசிரிய ஆளணி, அலுவலக ஆளணி, பௌதீக வளத் தேவை, போக்குவரத்து வசதி என்பவற்றை உரியவர்கள் முறையாக செய்து கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்படுகிறது.

பட்டிப்பளை கல்வி வலயத்தின் உருவாக்கத்திற்காக உழைத்தவர்கள் யாவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

## மாணவர்களை கௌரவிக்கும் விழா

மீரா நகர்,

அக்கரைப்பற்று முனவ்வறா கனிஷ்ட கல்லூரியில் இவ்வருடம் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 33 மாணவர்களை கௌரவிக்கும் விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

பெற்றோர்களின் ஏற்பாட்டில் அதிபர் ஏ.ஆர்.ஏ. ஜவாத் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம அதிதியாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா, கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெவ்வை மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர், கல்வி அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

# கல்லடி வெட்டுவான் பகுதியில் குடியேறிய மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்

## வித்தியாலய அதிபர் மன்சூர் தெரிவிப்பு

(திருகோணமலை மேலதிக நிருபர்)

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்லடி வெட்டுவான் பகுதியில் மக்களைக் குடியேற்றி அம்மக்களின் பிள்ளைகளுக்கு சீரான கல்வியை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கல்லடி வெட்டுவான் வித்தியாலய அதிபர் ஏ. மன்சூர் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

1972 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் அதிக மாணவர்கள் கல்வி கற்றார்கள். 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அங்கிருந்து வெளியேறிய மக்கள் தமது பிள்ளைகளை வெவ்வேறு பாடசாலைகளில் இணைத்துள்ளனர்.

இவ்வருடம் சுமார் 65 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளனர். ஆனால் மாணவர்கள் கல்வி கற்பதற்கான கட்டடங்களோ தளபாட வசதிகளோ எதுவும் தற்பொழுது அங்கு இல்லை. அத்துடன் மீளக் குடியேறிய மக்களுக்காக மூன்று கிணறுகளும் மூன்று மலசலகூடங்களும் மட்டுமே கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இது போதுமானதாக இல்லை. மக்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் போது அதிக மாணவர்கள் பாடசாலை செல்லும் வாய்ப்பு உள்ளது. தான் அங்கு சென்று பாடசாலையை நடத்தவுள்ளதோடு மாணவர்களின் கல்வியை மேம்படுத்த தயாராகவுள்ளதாகவும் அதற்கான ஏற்பாடுகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## பாராட்டு விழா

மண்டூர்,

பட்டிருப்பு வலயக்கல்வி வலயம் வருடாந்தம் நடாத்திவரும் சாதனையாளர் பாராட்டு விழா இம்மாதம் நடத்தப்படவுள்ளது.

இவ்விழாவில் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் நிசாம் பிரதம அதிதியாகவும் கலாநிதி கோ. கோணேசபிள்ளை சிறப்பு அதிதியாகவும் கலந்து சிறப்பிப்பர்.

பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். பவளகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பல துறைகளிலும் சாதனை படைத்த மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகள் பாராட்டப்படவுள்ளதுடன் புலமை சஞ்சிகையும் வழமைபோன்று வெளியிடப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்




யாழ்.மத்திய பேருந்து நிலையத்தை அண்டிய பகுதி அது. சன நடமாட்டம் அதிகமுள்ள இடம் மக்கள் தமது அன்றாடக் கடமைகளை, வேலைகளை முடித்து விட்டு தமது இல்லிடங்களிற்கு திரும்பும் அந்தி மாலை வேளை.

யாழ்.நகரப்பகுதி வழமை போலவே பரபரப்புடன் இயங்கிக்கொண்டிருந்தது.

அந் நேரத்தில் நடந்த சம்பவம் பார்த்தவர்களை கிறங்கடிக்க வைத்தது. நாகரிக உடையணிந்த கவர்ச்சி விருந்தளிக்கும் சுமார் 25 வயது மதிக்கத்தக்க பெண்ணொருத்தி செல்போனில் பேசியவாறு நிற்கிறாள். கட்டிளமைப்பருவ பெண்ணுக்கு இருக்கும் எடுப்பான தோற்றம் பார்ப்போரை சுண்டியிழுக்க வைக்கும் இறுக்கமான ஆடைகள் வித்தியாசமான சிகை அலங்காரம் அளவுக்குதிகமான முக ஒப்பனை என சாதாரணபெண்களிடமிருந்து வேறுபடுத்திக்காட்டும் அலங்கரிப்புடன் செல்போனில் யாரோ ஒருவருடன் உரையாடியபடி நிற்கிறாள். அக் கணநேரத்தில் திடீரென ஒரு ஆட்டோ அவளருகில் வந்து நிற்கிறது.

ஆட்டோ சாரதியுடன் ஏதோ கதைக்கிறாள் அந்த நவநாகரிக நங்கை. ஓரிரு நிமிடங்கள் வரை அவர்களது உரையாடல் தொடர்ந்திருக்கும் உடன் ஆட்டோவிற்குள் ஏறுகிறாள். கண்ணிமைக்கும் நேரத்தில் மின்னல் வேகத்தில் ஆட்டோ சென்று மறைகிறது. இதற்கு பின்னர் என்ன நடந்திருக்கும் என்பதை ஊகித்திருப்பீர்கள்.

இத்தகைய சினிமா பாணியிலான விபச்சாரங்கள் தினம் தினம் யாழ்.நகரப்பகுதியில் நடைபெற்று வருவதாக நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர். குடாநாட்டில் விபச்சாரத்தொழில் தற்போது கொடிகட்டிப்பறக்கிறது. இதற்கு தற்போதைய சூழல் வாய்ப்பாக அமைந்துள்ளது.

தினம் தினம் முளைக்கும் விபச்சார விடுதிகள் இத் தொழிலிக்கு தீனி போடுகின்றன. யாழ்.நகரை அண்டிய பிரதேசங்களிலும் நல்லூர் போன்ற பல புறநகர்ப்பகுதிகளிலும் கலாசார சீரழிவுகள் இரகசியமான முறையில் மிகவும் கச்சிதமாக இடம் பெற்று வருவதாக அறியவருகிறது.

குடாநாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து வரும் தமிழ்ப் பெண்களே தமது நாளாந்த வாழ்க்கைச் செலவுக்காக தமது உடலையே விற்றுப் பிழைக்கும் இழி செயல்களில் ஈடுபடுவதாகத் தெரியவருகிறது. அவர்களுக்கு குழந்தைகளும்கூட உண்டென்ற சோகம் நெஞ்சைப் பிழிகின்றது.

ஒரு காலத்தில் யாழ். குடாநாட்டின் கலாசாரம் உன்னத நிலையில் இருந்தது. பலர் கூட எமது கலாசாரப் பண்பாட்டினை வியந்து போற்றினர். ஒருவனுக்கு ஒருத்தி என்ற மகோன்னத வாழ்க்கையை நடத்தியவர்கள் எம்மவர்கள். திருமணமாகாத பெண்கள் ஆண்களுடன் நேரெதிரே நின்று பேசுவதற்கு நாணும் அளவுக்கு இறுக்கமான குடும்ப சூழலைப் பிரதிபலிக்கும் உயர் பண்பாடு தமிழரின் விழுமியத்தைப் பாதுகாப்பதாக ஒவ்வொரு செயற்பாடுகளிலும் கலாசார அடையாளங்கள் விகர்சித்திருந்த காலமது.

தற்போது கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களே சிதைந்து போயிருக்கும் பின்னணியில் குடாநாட்டுப் பெண்களின் செயற்பாடுகள் மோசமான கட்டத்தை எட்டியிருப்பது வேதனைக்குரிய விடயம்.

இன்றைய சூழலில் கல்வி கற்பதற்கென யாழ். நகரப் பகுதியை அண்டியுள்ள தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்வதாக பெற்றோருக்குத் தெரிவித்து விட்டுவரும் பதின்ம வயதையுடைய பெண்கள் பலர் தமது வயதை ஒத்த மாணவர் ஒருவருடனோ அல்லது முன்பின் அறியாத ஆடவன் ஒருவருடனோ நட்பாகப் பழகி சினிமா திரையரங்குகளுக்குச் சென்று தமது காதல் லீலைகளை அரங்கேற்றுவது போன்ற பல்வேறு சமூக விரோத செயல்கள் குடாநாட்டில் அதிகரித்து வருவது சமூக அக்கறை கொண்டவர்களின் மனதைத் துளைக்கின்றது.

நாகரிகம் என்ற பெயரில் கவர்ச்சி உடைகளை அரைகுறை ஆடைகளைப் பெண்கள் அணிவது அக்கவர்ச்சியால் உந்தப்பட்ட எதிர்பாலினரின் தப்பான பார்வைக்கும் தவறான நடவடிக்கைகளுக்கும் இட்டுச் செல்லும் செயற்பாடுகளுக்கு வழி வகுத்துவிடும்.

ஆக தமிழரின் கலாசாரம் இன்று நெறி பிறழந்து செல்வது பற்றிச் சமூகப் பிரக்ஞை உடையவர்களிடமிருந்து பல்வேறு ஆதங்கமாக கருத்துக்கள் வெளிவருகின்றன.

'கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்' என்ற நிலைக்குள் எங்கள் சந்ததி தள்ளப்பட்டு விட்டது. யாரொடு நோவது யார்க்கெடுத்துரைப்பது என்ற நடுக்கொள்ளி எறும்பின் நிலையில் எம்மினம் இருக்கிறது.

எனவேதான் ஒரு இனத்தின் ஆணிவேராக அவ்வினத்தின் கலாசாரம் திகழ்கின்றது. கலாசாரம் பண்பாட்டில் அழிவுகள், சிதைவுகள் ஏற்படுமிடத்து அவ்வினத்தின் அழிவென்பது தவிர்க்க முடியாததாகிவிடும். எனவே எம்மினத்தின் அழிவுக்கு நாமும் பாத்திரவாளிகளாகவும் கோடரிக் காம்புகளாகவும் இருக்கப் போகின்றோமா? சிந்திப்போம் செயற்படுவோம்.

உ.திஷ்டிரன்

# ஆலயக்கிரியை முறைகள்

### விநாயகருக்கு வழிபாடு

உலகங்கள் யாவற்றிற்கும் முதற் காரணமாகிய பொருள் பிரணவம் எனப்படும். அதற்குத் தலைமையாயிருக்கும் சிவசக்திக்கு விநாயகர் என்று பெயர். (வி =இல்லாத நாயகர்=தலைவர் அதாவது தமக்கு மேல் ஒரு தலைவரில்லாதவர். மேலான தலைவர் எனப் பொருள்படும்) எனவே முதற் செய்யப்படும் கிரியை விநாயக வணக்கம்.இது கிரியை இனிது நடந்து முடிவுற முதல்வனை வணங்குதல் ஆகும். குல சமயக் கிரியைகளுக்கெல்லாம் தலைவராதலாலும் அவரி லே சிவபெருமானுடைய திருவருள் சிறந்து நிற்றலாலும் குருவையும் வழிபடுவர்.(கு=மலம் ,ரு =நீக்குபவர் )சந்தனம், மஞ்சள் அல்லது கோமயம் (பசுச்சாணம் )இவற்றில் ஒன்றில் பிள்ளையாரை உருவாக்கி அறுகம்புல்லை அவருக்கு வைத்து வணங்குவது வழக்கம்.

### பவித்திரமணிதல்

பவித்திரமணிதல் மோதிரம் போலத் தர்ப்பையினால் செய்யப்பட்டு அணிவிரலில் அணியப்படுவது.இதன் நோக்கம் கிரியை செய்யும் போது மனம் வாக்குக் காயங்களினால் வரத்தக்க பாவங்களினின்றும் காத்தல்.

(பவித்திரம் -பதனாத் த்ராயதே பாவத்திலே விழுதலினின்றும் காப்பது-காமிகாகமம் )

### சங்கற்பம்

சங்கற்பமாவது செய்யப்போகும் கிரியையிலே மனத்தைப் பதித்து அதிலே நிறுத்துவது.இன்ன காலத்திலே , இன்ன இடத்திலே ,இன்ன நோக்கமாக இது செய்யப்போகிறேன் என்பது சங்கற்ப வாக்கியத்தின் சுருக்கமான கருத்து.நிகழும் படைப்புத் தொடக்கத்திலிருந்து அன்று வரையும் உள்ள காலம் இதில் குறிக்கப்படுவதால் காலத்தின்பெருமையும் தற்கால வாழ்வின் சிறுமையும் ஆன்ம ஈடேற்றத்தின் மகிமையும் உணரத்தக்கன.

### சங்கற்பம் முறை

வலது கையில் தருப்பை, பூ ,மஞ்சள், அரிசி (அட்சதை )முதலியவற்றை வைத்துக்கொண்டு வலது கையை மேலாகவும் ,இடது கையைக் கீழாகவும் வைத்து இடது பெருவிரலை வலது பெருவிரலால் அமர்த்தி வலது முழந்தாளில் வைக்கவேண்டும்.

### சங்கற்ப வாக்கியத்தின் கருத்து

சிவபெருமானது சங்கற்பத்தாலே தொழிற்படும் ஆதிப்பிரம்மாவின் இரண்டாவது பரார்த்தத்திலே சுவேத வராக கற்பகத்தில் வைவஸ்வதமந்வன் தரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்திற் கலியுகத்தின் முற்பகுதியில் சம்பூத்துவீபத்தில் பாரத வருஷத்தில் பரத கண்டத்தில் மேருவுக்குத் தெற்கே (இடத்தின் பெயர்) பிரபவ முதலான அறுபது வருஷங்களுள் (இன்ன)வருடத்தில் (இன்ன) பட்சத்தில் -(இன்ன )நன்மையான கரணமுள்ளதாய் விசேட குணத்தோடு சேர்ந்த இந்த புண்ணிய தினத்தில் மம (என்னுடைய )-(இன்ன) நோக்கமாக (இன்ன) கிரியை செய்யப்போகிறேன். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களை கலங்க வைக்கும் சூலகக் கட்டிகள்



### சூலகங்கள் என்றால் என்ன?


பெண்களில் இரண்டு சூலகங்கள் கர்ப்பப்பையின் இரு புறங்களிலும் அடிவயிற்றில் அமைந்துள்ளன. சூலகங்கள் சிறியதும் உருண்டையுமான ஒரு மாபிளின் பரும னைக் கொண்டது. சூலகங்கள் சூல் முட்டை கள் உருவாக்கும். இனப்பெருக்க வயதை உடைய பெண்களில் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு சூல் முட்டை ஏதோ ஒரு சூலகத்தில் இருந்து வெளிவரும். இந்த சூல் முட்டை பலோப்பியன் குழாய் வழியாக கர்ப்பப்பையை அடையும் போது விந்துடன் கருக்கட்டலில் ஈடுபடும். சூல

Dr. குருசாமி சுஜாகரன்
MBBS, MD (O&G) MSLCOG
MRCOG (UK), MRCP (Irel), DFSRH
(London)
மகப்பேற்று பெண் நோயியல்
சத்திர சிகிச்சை நிபுணர் (கொழும்பு)

கங்கள் பெண்மைக்குரிய ஹோர்மோன்கள் (Hormones) உருவாக்கும். (Osetrogen and progesterone) இந்த ஹோர்மோன்கள் (Hormones) இரத்த ஓட்டத்தில் கலந்து உடம்பில் பல தாக்கங்களை உருவாக்கும். அதில் ஒன்றுதான் ஒழுங்கான மாதவிடாய் சக்கரம்.

### ஓவரியன் சிஸ்ற் (Ovarian cyst) என்றால் என்ன?

ஒரு சிஸ்ற் (cyst) என்பது திரவம் நிறைந்த அறை. சிஸ்ற் உடம்பில் பல பகுதிகளில் உருவாகும். எந்த வகையான சிஸ்ட் என்பதனை பொறுத்து அதற்குள் இருக்கும் திரவ வகை வேறுபடும். சில வகையான சிஸ்றகள் தடித்த உறையை வெளிப்புறத்திலும் திரவங்கள் உட்புறத்திலும் கொண்டு இருக்கும். சூலகங்களில் ஏற்படும் கட்டிகள் (cyst) ஒரு பொதுவான




பிரச்சினை. கூடுதலான சூலகக் கட்டிகள் ஆபத்தற்ற புற்றுநோய் அற்ற கட்டிகள். சில சூலகக் கட்டிகளே ஆபத்தான புற்றுநோய்க் கட்டிகள் அல்லது காலப்போக்கில் புற்றுநோயாக மாறக்கூடிய கட்டிகள். சூலகக்கட்டிகளின் பருமன் ஒரு சிறிய மாபிள் சைசில் இருந்து ஒரு பெரிய கால்பந்து ஒன்றின் அளவுக்கு வேறுபடும். இந்தக் கட்டிகள் பலவகைப்படும். அவையாவன. தொழிற்பாட்டுச் சூலகக்கட்டிகள் (Funtionalovarian cyst) இவையே மிகப் பொதுவான சூலகக்கட்டி வகை, இவை

## ஓவரியன் சிஸ்ற் [Ovarin cycts]

இனப்பெருக்க வயதை உடைய பெண்களில் சூல் முட்டை உருவாகுதலில் ஏற்படும் குறைகளால் கட்டிகளாக உருவெடுக்கும். இவை மிகக் கூடுதலாகக் காணப்படுகின்றது. இவை 6 cm பருமன் வரைக்கும் வளரக்கூடியவை. இவற்றுக்கு எந்தச் சிகிச்சையும் தேவையில்லை. ஏனெனில் இவை தாமாகவே சில மாதங்களில் மறைந்து விடுகின்றன. டேர்மொயிட் சிஸ்ற் (Dermoid cyst) இந்த வகை இளம் பெண்களில் ஏற்படும். இது மிகப் பெரிதாக 15 cm விட்டமுடைய கட்டிகளாக வளரக்கூடியது. இந்தக் கட்டி பல அசாதாரண பொருட்களை உள்ளே கொண்டிருக்கும். அதாவது இதன் உள்ளே மயிர்கள், பற்துண்டுகள் மற்றும் கொழுப்புகள் காணப்படும். இந்த வகையான கட்டி உள்ளவர்களில் பத்து வீதமான பெண்களின் இது இரண்டு சூலகங்களிலும் காணப்படும். மிகச்சிறிய இவ்வகையான கட்டிகளில் கூடுதலானவை தானாகவே சில மாதங்களில் மறைந்து விடும். இவை பரம்பரையாக கடத்தப்படும்.

### சிஸ்ற் அடினோமா (Cyst adenoma )

இந்த வகை சூலகத்தின் வெளிப்பக்க கவசத்தின் கலங்களில் இருந்து உருவாகும். இவற்றில் பல வகைகள் உள்ளன. உதாரணமாக சீரஸ் சிஸ்ற் அடினோமா (Seroys cyst adenoma) மெல்லிய திரவத்தைக் கொண்ட சிஸ்ற் ஆகவும் மியூசினஸ் சிஸ்ற் அடினோமா (Mucions cyst adenoma) தடித்த சீதத்தன்மையான திரவத்தை கொண்டதாகவும் இருக்கும். இவற்றிலும் சில மிகப் பெரிதாக வளரும். இந்தவகை, புற்றுநோய் அல்ல ஆனாலும் சிலவேளைகளில் இந்த வகை புற்று நோயாக மாறலாம்.


### என்டோமெற்றியோமா (Endomentriomas )

என்டோமெற்றியோசிஸ் Endome ntriosis) உள்ள பல பெண்களில் ஒன்றோ அல்லது பல சிஸ்ற் கட்டிகளோ சூலகங்களில் தோன்றும். என்டோமெற்றியோசிஸ் என்பது கர்ப்பப்பையின் உட்புறத்தில் காணப்படும் என்டோமெற்றியம் (Endomentrium) என்ற இழையம் கர்ப்பப்பையின் வெளியேயும் காணப்படும் ஒரு வியாதி. இது சிலவேளைகளில் குருதி நிரம்பிய சிஸ்ற் கட்டிகளை தோற்றுவிக்கும். நாள் பட்ட குருதி சேர்ந்திருந்து இந்தக் கட்டிகள் தோன்றுவதால் இவை சொக்கிலேட் நிறத்தில் (Chocolate) தோற்றமளிக்கும். இதனால் இவை சொக்கிலட் சிஸ்ற் (Chocolate cyst) என அழைக்கப்படும். இவை புற்றுநோய் அல்ல.

### பொலிசிஸ்ரிக் ஓவரி ( Polaystic Overy)

பொலிசிஸ்ரிக் என்பது பல குடாக்கள் அல்லது பல சிஸ்றகள் ஒரு சூலகத்தில் காணப்படுதல். பொலிசிஸ்ரிக் ஓவரி (Polaystic Overy) இருப்பவர்களில் பல மிகச் சிறிய சிஸ்ற் குடாக்கள் ஒரு சூலகத்தில் தோன்றியிருக்கும். இது ஹோர்மோன்களின் சமநிலை அற்ற தன்மையால் சூல் முட்டை வெளியேறுதல் தொடர்பான சிக்கல்கள் ஏற்பட்டு வருகின்றன. இது ஒரு வியாதியாக உருவெடுக்கின்ற போது ஒழுங்கற்ற மாதவிடாயும், கருத்தரித்தலில் தாமதம், முகத்தில் உரோமம் வளருதல், உடல் பருமன் அதிகரித்தல் மற்றும் முகத்தில் பருக்கள் (Pimples) ஏற்படுதல் என்பன தோன்றும்.

### என்ன வகையான நோய் அறிகுறிகள் சூலகக்கட்டிகளை தோற்றுவிக்கும்?



பெரும்பாலான சூலகக்கட்டிகள் சிறியவை, புற்றுநோய் அல்லாதவை. அத்துடன் எந்தவகையான நோய் அறிகுறிகளையும் தோற்றுவிக்காதவை, சில சூலகக் கட்டிகளே நோய் அறிகுறிகளை தோற்றுவிக்கும் அவையாவன.

*** அடிவயிற்று வலி - வயிற்று வலி தொடர்ச்சியாகவோ அல்லது இடையிடையே ஏற்படும் வலியாகவோ தோன்றக் கூடும். சிலரில் தாம்பத்திய உறவின் போது மட்டும் வயிற்று வலி ஏற்படும்.**

*** மாதவிடாயும் சிலவேளைகளில் ஒழுங்கற்றதாகவும் அல்லது அதிகப்படியாகவும் இருக்கலாம்.**

*** சிலவேளைகளில் இந்தக் கட்டிகள் வெடிப்பதனால் அல்லது முறுக்கப்படுவதனால் (Twisted ) ஒருவிதமான சடுதியான கடுமையான அடிவயிற்று வலியை தோற்றுவிக்கும்.**

*** சிலவேளைகளில் இந்தக் கட்டிகளுக்குள்ளேயே குருதிக் கசிவுகள் ஏற்பட்டும் சடுதியான கடுமையான வயிற்று வலியை தோற்றுவிக்கும்.**

*** பெரிய சூலகக்கட்டிகள் வயிற்றில் வீக்கத்தை உண்டு பண்ணும். அத்துடன் அவை அருகில் உள்ள உறுப்புகளை அமுக்குவதனால் சிறுநீர் கழிப்பதில், மலம் கழிப்பதில் சிக்கல்கள் உருவாகும்.**

*** பெரும்பாலான சூலகக்கட்டிகள் புற்றுநோய் அல்லாதவையாக இருந்தாலும் ஒரு சில புற்றுநோயாக மாறும்.**

### சூலகக்கட்டிகள் எவ்வாறு கண்டு பிடிக்கப்படுகின்றன?

சூலகக் கட்டிகளில் பெரும்பாலானவை எந்த நோய் அறிகுறிகளையும் கொடுப்பதில்லை. அத்துடன் இவை தற்செயலாகவே கண்டுபிடிக்கப்படு கின்றன. உதாரணமாக ஒரு ஸ்கான் (Scan) பரிசோதனையை வேறொரு சேவைக்காக செய்யும் போது இவை கண்டுபிடிக்கப்படுகின்றன. உங்களுக்கு சூலகக் கட்டிகள் இருக்கும் போது தோன்றக்கூடிய நோய் அறிகுறிகள் இருந்தால் உங்களது வைத்திய நிபுணர் உங்களது வயிற்றை பரிசோதித்து பார்ப்பார். இதன் போது அவர் ஒரு அசாதாரண வீக்கத்தை உணர்வார். இதுவே சூலகக்கட்டியாக இருக்க முடியும். ஒரு ஸ்கான் (Ultrasound Scan) பரிசோதனை மூலம் இதனை உறுதிப்படுத்த முடியும். இந்த ஸ்கான் பரிசோதனையினால் உங்களுக்கு எந்த வலியோ அல்லது பாதிப்போ ஏற்படாது. தேவை ஏற்படின் சிலவேளைகளில் யோனிவாசல் வழியாக செலுத்தி செய்யப்படும் ஸ்கான் (Vaginal Scan) இதற்கு உபயோகிக்கப்படும் அத்துடன் ஒருவிதமான இரத்தப் பரிசோதனையும் மேற்கொள்வார்கள்.

### என்ன விதமான சிகிச்சைகள் இதற்கு மேற்கொள்ளப்படும்?

சிகிச்சை முறைகள் பல்வேறு காரணிகளில் தங்கி உள்ளன. அவையாவன. உங்களது வயது, நீங்கள் மெனோர்போஸ் (Menopause) பருவத்தை அடைந்தவர்கள், ஸ்கானில் இருந்து பெறப்பட்ட சூலகக்கட்டியின் குணாதிசயங்களும் பருமனும் மற்றும் உங்களுக்கு ஏற்படும் நோய் அறிகுறிகள் என்பன இக்காரணிகளை வைத்தே சிகிச்சை முறைகள் தீர்மானிக்கப்படும். பெரும்பாலான சிறிய சூலகக் கட்டிகள் சில மாதங்களில் தானாகவே மறைந்துவிடும். உங்களுக்கு மீண்டும் ஒரு ஸ்கான் பரிசோதனை சில மாதங்களில் மேற்கொண்டு இதனை உறுதி செய்யலாம்.

### சத்திர சிகிச்சைகள்

சூலகக் கட்டிகளின் பருமன் பெரிதாக இருந்தால் அல்லது நோய் அறிகுறிகளைத் தோற்றுவித்தால் சத்திர சிகிச்சைகள் அவசியம். சிலவேளைகளில் இந்தக் கட்டிகளை அகற்றி அவற்றை பரிசோதனைக்கு அனுப்புவதன் மூலம் இவை எந்த வகையான கட்டிகள் எனக் கண்டுபிடிக்கப்பட்டு புற்று நோய்க்குரிய அதன் ஆதாரங்கள் இருக்கிறதா என உறுதிப்படுத்தப்படும். சிறிய சூலகக்கட்டிகள் லப்ரஸ்கோபி (Laparscopy) மூலம் அகற்றப்படும். சில கட்டிகள் பாரபேரியமாக வெட்டி திறந்து செய்யப்படும்.

சத்திர சிகிச்சையின் மூலம் அகற்றப்படும் (Laparatony) எந்த வகையான சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்பது சூலகக்கட்டியின் வகை, உங்களது வயது, மற்றும் புற்றுநோய்க்குரிய தன்மைகள் உள்ளனவா என்பதைப் பொறுத்து தீர்மானிக்கப்படும். சிலவேளைகளில் கட்டிகள் மட்டும் அகற்றப்படும். ஆனால் சூலகங்கள் தங்கவிடப்படும். சிலவேளைகளில் சூலகமும் சேர்த்து கட்டியுடன் அகற்றப்படும். வேறு சில சந்தர்ப்பங்களில் அருகில் உள்ள உறுப்புகளான கர்ப்பப்பை மற்றைய சூலகம் என்பனவும் அகற்றப்படும். எனினும் இவை யாவும் உங்களில் கலந்துஆலோசித்து தீர்மானிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைந்து போவது எப்படி?

**ஒத்துப்போதல் / இசைந்துபோதல்**
Conformity

'மனிதன் ஓர் சமூகப்பிராணி' மனிதன் ஒருபோதும் தனித்துவாழ முடியாது. சமூகச்சூழலுடன் இசைந்துவாழ வேண்டிய தேவை ஏற்படுகின்றது. சூழ்நிலையை பௌதீகச் சூழ்நிலை, சமூகச்சூழ்நிலை என இரண்டாகப் பிரிக்கலாம். சூழ்நிலைக்கு இசைந்து போகாதபோது உயிர்கள் துன்பத்திற்கு ஆளாகின்றன. மனித வாழ்க்கையைப் பொறுத்தவரை சூழலுடன் மட்டுமன்றி பல்வேறு அம்சங்களிலும் ஏதோ ஒரு வகையில் இசைந்து பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இசைந்துபோதல் அல்லது ஒத்துப் போதல் என்பது வாழ்க்கையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகக் காணப்படுவதை யதார்த்தத்தில் காணலாம்.

மனிதனின் இன்றியமையாத ஒரு தேவையும் நடத்தையுமான இசைந்து போதல் பற்றியும் ஆராய்ந்துகொள்ள உளவியல் தவறவில்லை.

எந்தவொரு சூழலிலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மனிதன் ஒருவன் தன்னோடும், ஏனையவர்களோடும் வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகளோடும் இசைந்து, இணைந்து நடத்தலே இசைந்துபோதல் அல்லது ஒத்துப்போதல் என வரையறை செய்யலாம்.



உறவுகளால் உருவாவதே மனித வாழ்வு. இதில் ஒருவர் இன்னொருவர் மீது காட் டும் செயலாக்கமான அக்கறை நாம் ஒவ் வொருவரும் எம் வாழ்க்கையில் அரும்பாடுபட்டுத் தேடும் 'அன்பு' என உளவியலாளர் எரிக் புறொம் (Eric Fromm) கூறுகிறார். இந்த அன்பை அர்த்தமுள்ளதாக உருவாக்க நம்பிக்கை, ஆதரவு, பகிர்வு, விட்டுக்கொடுத்தல், புரிந்துணர்வு, அக்கறை என்பவற்றுடன் மெருகூட்ட இசைந்துபோதல் தேவைப்படுகிறது.

ஒத்துப்போகாமையினால் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. முரண்பாடுகளை நீக்க இசைந்துபோதல் அவசியமாகிறது. இசைந்துபோதல் என்பது ஒரு விடயம் அல்ல முரண்பாட்டில் கலந்துரையாடப் புரிந்துணர்வு கொண்டுபேசி முடிவெடுத்து ஒத்துப்போதல் ஆகும். கணவன் மனைவியரிடத்தே ஒத்துப்போதல் என்பது முக்கியமானது. குடும்பத்தில் ஏற்படும் பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், முடிவுகளை எடுப்பதற்கும் ஒத்துப்போதல் அவசியமானது. இதனால் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் பிள்ளைகளின் நல்வாழ்வுக்கும் வழிசமைக்க முடியும்.

மனிதனின் தேவைகள், உடல்சார்ந்த தேவைகள், உளம் சார்ந்த தேவைகள் என இரண்டாக வகைப்படுத்தலாம். தேவைகள் அவன் வாழும் சூழ்நிலையோடு ஒத்துப்போகின்றபோதுதான் அவை நிறைவு செய்யப்படும். சமூகத்தின் விருப்பு வெறுப்புகளிற்கு ஒத்துப்போகாதவிடத்து அத் தேவைகள் நிறைவு செய்யப்படாத நிலையையே நாம் காணுகின்றோம். தேவைகள் நிறைவு செய்யப்படாத பட்சத்தில் அது ஏதோ ஒரு வகையில் மனிதனின் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும்.

**ஸ்ரீ.கஜேந்திரன்**
**ஆற்றுப்படுத்துநர்**
"Diploma in Counselling of Psychology"

புரிந்துகொள்ளாமல் அல்லது புரிந்து கொள்ளப்படாமல் தொடர்ந்தும் ஏதோ வொரு கட்டாயத்தின் பேரில் நடைபெறும் உடன்படலானது

(24ஆம் பக்கம் பார்க்க)

# உங்கள் நோய்களுக்கு உங்கள் வீட்டிலேயே சித்தர் மருத்துகள்



♦**முடி வளர**

கறிவேப்பிலையையும் மருதோண்டி இலையையும் சமனாகச் சேர்த்து அரைத்து ஒரு மண்சட்டியில் அரை போத்தல் தேங்காய் எண்ணெய் விட்டுக் காய்ச்சிப் பதமாக எடுத்து பூசி வரவும். இதற்கு இளநரையைத் தடுக்கும் தன்மையுண்டு.

♦**முடி உதிர்வதைத் தடுக்க**

முடி உதிர்ந்த இடங்களில் வெங்காயத்தை அரிந்து தேய்க்கவும். இருபது நாட்களுக்கு தினமும் தேத்து தந்தால் முடியுதிர்வது நின்றுவிடும்.

♦**ஈர் பேன் சாக**

படிகாரத்தை பொடி செய்து ஜலத்தில் கரைத்து இரண்டு மணித்தியாலத்தின் பின் தலையில் தேய்த்துக் குளிக்க ஈர் பேன் அற்றுப்போகும்.

♦**தலை வலிக்கு**

மஞ்சள், உள்ளி இவை இரண்டையும் சமமாக எடுத்து அரைத்துப் பற்றுப் போடவும்.

♦**காது வலிக்கு**

எருக்கின் பழுப்பு இலையை அனலில்வாட்டி அதன் சாற்றைக் காதில் விடக் குணமாகும். சீழ் வடிதலும் நிற்கும்.

♦**தடிமனுக்கு**

மிளகு 1/2 தேக்கரண்டி, நெய்யில் வறுத்து கரும்பு வெல்லம் அல்லது கற்கண்டு 10 கிராம் சேர்த்து அரைத்து சுண்டைக் காயளவு உருண்டை செய்து 3 மணித்தியாலத்துக்கு ஒரு முறை ஓர் உருண்டை வீதம் சாப்பிட சளி இருமல் குணமடையும்.

♦**மூக்கடைப்புக்கு**

மஞ்சள் துண்டை நல்லெண்ணெய் விளக்கில் எரித்து அதன் புகையை மூக்கில் பிடிக்கவும்.

♦**வாய் அவியலுக்கு**

தான்றிக்காயை சுட்டு கரியை எடுத்து நெய்யில் குழைத்து உதட்டில் பூசி வரவும்.

♦**பல் வலிக்கு**

படிகாரம், காசுக்கட்டி, கடுக்காய், இலவங்கம், இலந்தப்பூ ஆகியவற்றில் ஒவ்வொருகளஞ்சு வீதம் எடுத்து தூள் செய்து காலை மாலை பல் துலக்கினால் பல் வலி தீரும்.

♦**பல் உறுதிப்பட**

ஆலம் பாலைப் பற்களில் தேய்த்து வரவும்.

♦**முகப்பருவுக்கு**

பச்சை கற்பூரத்தை வேப்பெண்ணெய் விட்டு அரைத்து முகத்தில் தடவ பழுத்து உடைந்து குணமாகும்.

♦**முகம் வடிவாக இருக்க**

தேங்காய் சிரட்டையில் உள்ள கரளைத் துருவி எடுத்து பால் ஆடையும் சிறிதளவு கடலை மாவும் சேர்த்துப் பிசைந்து முகத்தில் தேய்த்துக் கழுவி வர முகம் வசீகரமாகும்.

♦**தொண்டை அரிப்பு அடைப்புக்கு**

முருங்கைக் கொழுந்துச் சாறும் சிறிதளவு சுண்ணாம்பும் கலந்து பற்றுப் போடவும்.

♦**இருமலுக்கு**

கடுகை நன்றாக அரைத்து சிறிதளவு தேனில் கலந்து 2, 3 வேளை சாப்பிட குணமாகும்.

♦**சகல சுரத்தத்திற்கும்**

தும்பைப்பூ 1 பலம் எடுத்து 1 படி பசுப்பாலில் 1/4 படி நீர் சேர்த்துக் காய்ச்சி எடுத்து 3 வேளை கொடுக்க தீரும்.

♦**வாயில் நீர் ஊறுவதற்கு**

மிளகு திற்பலி நெற்பொரி சக்கரை கலந்து சாப்பிடவும்.

♦**பசி தீபனம் தலைச்சுற்றுதலுக்கு**

இன்தும்பு 50கிராம் தூளாக்கிய சீரகம் 100கிராம் எடுத்து இரண்டையும் ஓர் கோப்பையில் போட்டு இரண்டும் அடங்கு மட்டும் எலுமிச்சம் பழச்சாறு விட்டு வெய்யிலில் வைத்து உலர்ந்த பின் மீண்டும் வாயில் போட்டு சாப்பிடவும்.

♦**வாந்தி தீர**

சுக்கு மிளகு திற்பலி அதிமதுரம் வில்வ வேர் சக்கரை சமன் தூள் செய்து 1 தேக்கரண்டி வீதம் தேனில் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிடப்படாத வீதியமைப்பினால் நெருக்கடிக்குள்ளாகும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் போக்குவரத்து

## விளக்குகிறார் யாழ். வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர்

ஒரு நாட்டினுடைய பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் பொருளாதாரக் கீழ்க்கட்டுமான வசதிகள் காத்திரமான பங்களிப்பை வழங்குகின்றன. பொருளாதாரம் மேம்பாடடைய வேண்டுமெனில் பொருளாதாரக் கீழ்க்கட்டுமான வசதிகள் நவீன மயப்படுத்தப்பட வேண்டும் என்ற வாதத்தை பொருளியல் வல்லுநர்கள் வலியுறுத்திவரும் பின்னணியில் பொருளாதார கீழ்க் கட்டுமான வசதிகளில் போக்குவரத்து வழிகளை வளப்படுத்தல் என்ற எல்லைக்கரு பிரதானத்துவம் பெறுகின்றது.

இன்றைய சூழலில் யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரையில் குடாநாட்டின் அபிவிருத்தியில் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றகரமான மாறுதல்கள் அவதானிக்கப்பட்டு வரும் இவ்வேளையில் குடாநாட்டு மக்களின் போக்குவரத்தில் பாரியநெருக்கடிகள் சிரமங்கள் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரை வீதிபோக்குவரத்தென்பது ஆபத்துநிறைந்ததொன்றாக மாறியுள் ளமை துரதிஷ்டவசமானது. யுத்தம் நிறைவுற்று ஓராண்டு கடந்துவிட்ட நிலையில் தென்னிலங்கையிலிருந்து படையெடுக்கும் வாகனங்களால் குடாநாட்டின் ஒடுங்கிய வீதிகளில் சீரான போக்குவரத்தில் தடங்கல் நிலை ஏற்படுகின்றது. அத்துடன் வீதிவிபத்துக்களும் அடிக்கடி இடம்பெற வாய்ப்பாகிறது.

இந்நிலை இவ்வாறிருக்க வீதிகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் முறைகள் அதன் தரங்கள் தொடர்பான விடயங்களை யாழ்.மாவட்ட வீதி அபிவிருந்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவரிடமிருந்து பல ஆக்கபூர்வமான தகவல்களைப் பெறக்கூடியதாக இருந்தது.

அவரது கருத்தின்படி குடாநாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் வீதிகள் அனைத்தும் பழைய பாணியில் ஒடுக்கமானதாக அக்கால மக்களின் வசதி நிலைக்கேற்ப சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் அமைக்கப்பட்டவை. இவ்வீதிகள் தென்னிலங்கையிலுள்ள வீதியமைப்பை ஒத்தவாறு நவீன முறையில் திருத்தியமைக்கப்பட வேண்டுமாயின் பல பில்லியன் ரூபா வரை செலவாகும். அதற்கு அரசாங்கத்தால் யாழ். குடாநாட்டின் வீதி அபிவிருத்திக்கு போதியளவு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை. இருந்தும் போக்குவரத்து நெருக்கடிகளை கருத்திற்கொண்டு ஒருசில வீதிகள் நவீன முறையில் AS Pho (Carpet) இட்டு நிர்மாணிக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இதனால் குறித்தளவு தூரம் வீதியின் இருமருங்கும் அகலமாக்கும் தேவை காணப்படுகின்றது. இதனால் பொது மக்களின் காணிகளைச் சுவீகரிக்கும் தேவையும் எழுந்துள்ளது. அத்துடன் குறித்த எல்லையிலுள்ள கட்டிடங்கள் மரங்கள் என்பவற்றை அழிக்க வேண்டிய தேவை எழுவது தவிர்க்க முடியாது. இதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு பெரிதும் வேண்டப்படுகிறது. தற்போது பருத்தித்துறை வீதி அகலமாக்கப்பட்டு வருகின்றது. பருத்தித்துறை மக்கள் பூரண ஒத்துழைப்பை நல்கிவருகின்றனர் ஆனால் யாழ். நகரப்பகுதியை ஊடறுத்துச் செல்லும் பருத்தித்துறை வீதியை அகலித்துப் புனரமைப்புச் செய்வதற்குப் பல பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருவதால் பல்வேறு சிக்கல்கள் தோன்ற வழிவகுக்கின்றது.

எனவே சீரான போக்குவரத்தை மேற்கொள்ள வசதியாக வீதியை அகலமாக்கும் செயற்பாட்டிற்கு பொதுமக்கள், புத்திஜீவிகள் என அனைவரும் ஒன்றிணைந்து பயனுள்ள முடிவை எடுக்கவேண்டும்.

தற்போது மழைகாலம் நெருங்குவதால் பல வீதிகள் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. அக்குழிகளுக்கு தார்க்கலவையிட்டு நிரப்பினாலும் சில மாதங்களின் பின்னர் அத்தார்க்கலவைகள் பிடிமானம் இழப்பதால் மீண்டும் பழைய நிலைக்கு விதிகள் திரும்புகின்றன. இந்நிலைமை திட்டமிடப்படாத செயற்பாடுகளால்தான் தோன்றுகிறது என்ற பொதுமக்கள் பலரின் ஆதங்கத்தை முன்வைத்தபோது அவர் அதை மறுத்துரைத்தார். தார்க்கலவைகளை வீதிகளிலுள்ள குழிகளுக்கு இட்டு நிரப்பும் செயற்பாடு ஒரு தற்காலிக ஏற்பாடே தவிர அது நிரந்தரமான தீர்வைத் தராது. மக்களின் போக்குவரத்தை தற்காலிகமாகச் சீர்செய்யும் ஏற்பாடே அது என்றார் இது குறித்து பொதுமக்கள் தவறாக விளங்கிக் கொண்டு வீதி அபிவிருத்திப்பணிகளில் தவறுகள் இடம் பெறுவதாக தப்பபிப்பிராயம் கொள்கின்றனர்.

அதுமட்டுமன்றி தற்போதைய வீதி அமைப்பு முறைகள் காலம், இடம், சூழல் தரைத்தோற்றம் அறிந்து அதற்கேற்ப புனரமைப்பு செய்யும் பட்சத்தில் பல நூறு வருடங்களுக்கு வீதிகள் பழுதடையாமல் தடையில்லாது போக்குவரத்து செய்ய வழிகோலும் அதற்கு மக்களின் பரிபூரண ஒத்துழைப்பு அவசியம் என்று குறிப்பிட்ட



அவர் மழைகாலங்களில் வீடுகளுக்கு முன்புறமுள்ள வீதிகளின் குறுக்காக வெட்டி நீர் வழிந்தோடுவதற்கு வழியேற்படுத்துகின்ற மூடத்தனமான செயல்களால் வீதிகளின் நிலை மோசமடைந்து செல்வதற்கு வழிவகுக்கிறது. அத்துடன் கழிவுப்பொருட்கள் குப்பை கூழங்களை வீதிகளில் கொட்டுவதாலும் போக்குவரத்தில் இடையூறுகள் ஏற்படுகின்றன எனக்கூறிய அவர் நாம் வீதியைப் பாதுகாத்தால் வீதி நம்மைப் பாதுகாக்கும் என்ற கருத்தையும் வலியுறுத்தினார். ஆக, யாழ்.குடாநாட்டிலுள்ள முக்கிய வீதிகள் நவீன தரத்தில் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும் என்பதற்கு மாற்றுக்கருத்திற்கு இடமில்லை. இருந்தும் மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து அவர்களது கருத்துக்களையும் உள்வாங்கி நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவெடுக்கப்படவேண்டும் என்பதே எல்லோரது எதிர்பார்ப்பாக உள்ளது. எனவே அவ் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்து தரமான வீதிகளை அமைத்து மக்களின் சீரான போக்குவரத்திற்க வழி சமைக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும்.

ஆக்கம்
S.நதிபரன்

---

23ஆம் பக்கத்தொடர்ச்சி...

உளப்போராட்டத்தை ஏற்படுத்தி உளமுறிவுக்கு (Fru-stration) காரணமாக அமையும். இதனால் எதிர்மறையான உள் எக்கிளர்ச்சிகள் (Emotions) தோன்றுகின்றன. இவற்றுள் சினம், அச்சம், கவலை என்பன பிரதானமாகும்.

இசைந்துபோதல் என்னும் இயற்கை நியதியை எப்போது மானிடம் மீறத் தொடங்கியதோ அன்றிலிருந்து 'மானிடம் என்பது கேள்விக்குறியாகிவிட்டது' ஒரு காகம் கரைந்து ஏனைய காகங்களை உணவுண்ண அழைக்கின்றது. இச் செயற்பாட்டை மனிதன் மிருகங்களிடையே கற்கவேண்டிய சூழ்நிலைக்கு வந்துள்ளான்.

முரண்பாட்டின் தொடச்சியாகவே இசைந்துபோதல் நடைபெறுகின்றது. இசைந்து போதலின் தொடர்ச்சியாக முரண்பாடு ஏற்படும். இசைந்து போதலில் குறைவு ஏற்படும்போது மீண்டும் முரண்பாடு ஏற்படுகிறது.

இசைந்து போகாமையினாலேயே இன்று குழுக்களுக்கு இடையே மோதல்கள், வன்முறைகள் உருவாகின்றன. இதனை தவிப்பதற்கு புரிந்துணர்வு மூலம் இசைந்துடன்படவேண்டும். புரிந்துணர்வு மூலம் இசைந்துபோவதால் அக் குழுக்களிடையே உறவுநிலை மேம்பாடடைகிறது.

சில சந்தர்ப்பங்களில் வேண்டாத எதிரான கருத்துக்கு இசைந்துபோகவேண்டிய நிலைமையும் உருவாகுவது உண்டு. இதனை நம் நாட்டில் காணமுடியும். எனினும் இவை அக்கணப்பொழுதிலேயே அன்றி, தொடர்ச்சியான கருத்துக்கு உடன்படுவதாக இல்லை. பல்வேறு இன, மத, நாட்டு மக்களிடையேயான போருக்கும், அழிவுக்கும் காரணம் புரிந்துணர்வின்மையும் இசைந்து போகாமையுமாகும்.

ஆழமும், அர்த்தமும் நிறைந்த மனித வாழ்க்கை அதன் தன்மையில் இருந்து சிதைந்து போகாமல் இருப்பதற்கு 'இசைந்து போதல்' என்பது புரிந்துகொள்ளலின் அடிப்படையில் நடைபெறுமாயின் அதன் பெறுமதி உயர்ந்ததாக இருக்கும்.

இசைந்துபோதல் பற்றி ஆங்கிலத்தில் உள்ள பழமொழி ஒன்று மிகவும் சிறப்பாக வர்ணிக்கிறது. "When in Rome do as Romans do" 'உரோமாபுரியில் வாழும் பொழுது உரோமானியர்கள் போல் வாழ்!' ஒருவர் எந்தநாட்டவர் என்றாலும் இன்னுமொரு நாட்டினில் வாழ முற்படும் போது முதலில் அந்நாட்டின் காலநிலைக்கு இசைந்து கொடுத்து மொழியைக் கற்று, கலாசாரம், விழுமியங்களை மதித்து வாழ வேண்டும்.

நாம் அவர்களுடைய நடைமுறை நியமங்களுக்கு ஏற்றாற்போல் இசைந்து கொடுத்து வாழ்தல் என்பது எம்முடைய குருதியில் இரண்டறக் கலந்துவிட்ட எமது இன, மொழி, கலாசார அடையாளத்தை (Our own Identity) இழப்பது அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபயோகம்

## 05.11.2010 விகிர்தி வருடம் ஐப்பசி மாதம் 19 ஆம் நாள் வெள்ளிக்கிழமை.

கிருண்பட்ச சதுர்த்தசி திதி பகல் 1.05 வரை. அதன் மேல் அமாவாஸ்யை திதி. சித்திரை நட்சத்திரம் பிற்பகல் 1.30 வரை. அதன்மேல் சுவாதி நட்சத்திரம். சிரார்த்த திதி அமாவாஸ்யை. சித்த யோகம். சம நோக்கு நாள். சந்திராஷ்டம நட்சத்திரங்கள் உத்திரட்டாதி ரேவதி. ஸர்வ அமாவாஸ்யை. தீபாவளிப் பண்டிகை. கேதார கௌரி விரதம். சுபநேரங்கள் பகல் 9.15 - 10.15, மாலை 4.45 - 5.45, ராகுகாலம் 10.30 - 12.00, எமகண்டம் 3.00 - 4.30, குளிகை காலம் 12.00 - 1.30, வாரசூலம் - மேற்கு (பரிகாரம் - வெல்லம்).

மேடம் - குழப்பம், சஞ்சலம்
இடபம் - நற்செயல், பாராட்டு
மிதுனம் - ஏமாற்றம், கவலை
கடகம் - தேர்ச்சி, புகழ்
சிம்மம் - உதவி, நட்பு
கன்னி - சினம், பகை
துலாம் - மறதி, கஷ்டம்
விருச்சிகம் - ஓய்வு, அசதி
தனுசு - சுகம், ஆரோக்கியம்
மகரம் - போட்டி, ஜெயம்
கும்பம் - சித்தி, அனுகூலம்
மீனம் - இன்பம், சுகம்

இன்று தீபாவளி அன்று லஷ்மி குபேர பூஜை, கேதார கௌரி பூஜை செய்தால் அடுத்த ஆண்டுவரை லக்ஷ்மி கடாட்சம் பெருகும்.
புதன் சூரியன் ஆதிக்கம் கொண்ட இன்று
அதிர்ஷ்ட எண்கள் - 1, 5
பொருந்தா எண்கள் - 6, 8, 9
அதிர்ஷ்ட வர்ணங்கள் - மஞ்சள், நீலம்

## 06.11.2010 விகிர்தி வருடம் ஐப்பசி மாதம் 20 ஆம் நாள் சனிக்கிழமை.

அமாவாஸ்யை திதி பகல் 11.21 வரை. அதன்மேல் சுக்கிலபட்ச பிரதமை திதி. சுவாதி நட்சத்திரம் பகல் 12.28 வரை. அதன் மேல் விசாகம் நட்சத்திரம் சிரார்த்த திதி வளர்பிறை பிரதமை. அமிர்த சித்த யோகம். கரிநாள் (சுபம் விலக்குக). சுபநோக்கு நாள். சந்திராஷ்டம நட்சத்திரங்கள் ரேவதி, அஸ்வினி. கந்த சஷ்டி விரதாரம்பம். மெய்கண்ட தேவர் குருபூஜை. சுபநேரங்கள் காலை 7.45 - 8.45, பகல் 10.45 - 11.45, மாலை 4.45 - 5.45, ராகுகாலம் 9.00 - 10.30, எமகண்டம் 1.30 - 3.00, குளிகை காலம் 6.00 - 7.30, வாரசூலம் - கிழக்கு (பரிகாரம் - தயிர்).
மேடம் - உயர்வு, மேன்மை
இடபம் - நலம், ஆரோக்கியம்
மிதுனம் - சினம், அவமானம்
கடகம் - வரவு, லாபம்
சிம்மம் - அன்பு, இரக்கம்
கன்னி - நோய், வருத்தம்
துலாம் - பகை, விரோதம்
விருச்சிகம் - லாபம், லஷ்மீகரம்
தனுசு - தொல்லை, கஷ்டம்
மகரம் - நோய், அசதி
கும்பம் - கீர்த்தி, புகழ்
மீனம் - புகழ், பெருமை

சகல ஆலயங்களிலும் கந்தசஷ்டி விரதாரம்பம். மெய்கண்டார் நாயனார் குரு பூஜை. பிறந்தது திருப் பெண்ணாகடம் பிள்ளைத் திருநாமம். சுவேதனப் பெருமாள் தீட்சை பெற்றது பரஞ்சோதி முனிவரிடம். முக்தியடைந்தது ஐப்பசி சுவாதி அருளிச் செய்தது சிவஞான போதம்.
சுக்கிரன் சந்திரன் ஆதிக்கம் கொண்ட இன்று
அதிர்ஷ்ட எண்கள் - 6, 7
பொருந்தா எண்கள் - 3, 8, 9
அதிர்ஷ்ட வர்ணம் - பச்சை




"என்ன சார் மளிகை சாமான்களை எல்லாம் நீங்களே தூக்கிட்டுப் போறீங்க வீட்டில வேலைக்காரி இல்லியா?"
"அவ வீட்டுக்குத்தான் தூக்கிட்டுப போறேன்!"




"தமிழ் வாத்தியாரை சர்வரா போட்டது தப்பா போச்சு!"
"ஏன்?"
"அஞ்சு இட்டிலி பார்சல்னு சொன்னா பயந்து பயந்து பார்சல் பண்ணி கொண்டு வர்றாரு!"




"என் பையன் பொலிஸ்கிட்டே மாட்டிக்கிட்டான்...!"
"அதை சிரிச்சுக்கிட்டே சொல்றீங்களே?"
"அவன் ஒரு பெண் பொலிஸைக் காதலிக்கிறான்!"




"உங்க மகளுக்கு எப்போது வளைகாப்பு செய்யப் போறீங்க?"
"என்ன உளர்றீங்க, என் மகளுக்கு இன்னும் கல்யாணமே ஆகலியே?"
"உங்க மகள் டீ.வி. பார்த்துக் கெட்டுப் போயிட்டதா நீங்கதானே சொன்னீங்க!"

## 07.11.2010 விகிர்தி வருடம் ஐப்பசி மாதம் 21ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை.

சுக்கிலபட்ச பிரதமை திதி காலை 9.56 வரை. அதன் மேல் துவிதியை திதி. விசாகம் நட்சத்திரம் பகல் 11.46 வரை. அதன் மேல் அனுஷம் நட்சத்திரம். சிரார்த்த திதி வளர்பிறை துவிதியை. மரண யோகம். கீழ் நோக்கு நாள். சந்திராஷ்டம நட்சத்திரங்கள் அஸ்வினி, பரணி. எமத்துவிதியை. சந்திர தரிசனம். சுபநேரங்கள் : காலை 6.15 - 7.15, பகல் 10.45 - 11.45, ராகுகாலம் 4.30 - 6.00, எமகண்டம் 12.00 - 1.30, குளிகை காலம் 3.00 - 4.30, வாரசூலம் - மேற்கு (பரிகாரம் - வெல்லம்)

மேடம்: ஊக்கம், உயர்வு
இடபம்: சிந்தனை, குழப்பம்
மிதுனம்: ஆர்வம், சித்தி
கடகம்: நிறைவு, மகிழ்ச்சி
சிம்மம்: மறதி, விரயம்
கன்னி: உயர்வு, மேன்மை
துலாம்: யோகம், அதிர்ஷ்டம்
விருச்சிகம்: கவனம், எச்சரிக்கை
தனுசு: ஆதாயம், லாபம்
மகரம்: களிப்பு, கொண்டாட்டம்
கும்பம்: தேர்ச்சி, புகழ்
மீனம்: பணம், பரிசு

இன்று பூசலார் நாயனார் குருபூஜை. தொண்டை நாட்டில் திருநின்றவூரில் அவதரித்தவர். பொருள் வளம் இல்லாதவர். மனதால் ஆலயம் அமைத்து இறைவனுக்கு கும்பாபிஷேகம் செய்தவர்.
கேது, குரு கிரகங்களின் ஆதிக்க நாள் இன்று
அதிர்ஷ்ட எண்கள்: 2, 3, 5, 1
பொருந்தா எண்கள்: 7, 8, 6
அதிர்ஷ்ட வர்ணங்கள்: மஞ்சள், நீலம்.

இராமரத்தினம் ஜோதி
(தெஹிவளை ஸ்ரீ விஷ்ணு கோயில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டமும் சமூகமும் 01





**தே**ச வழமைச் சட்டம் வட மாகாணத்தில் வாழும்தமிழ் மக்களது ஆள்சார்ந்த பிரச்சினைகளுக்கும்இடம்சார்ந்த பிரச்சினைகளுக்கும் விடை சொல்கிறது.

ஆகவே தேச வழமை யாருக்கு ஏற்புடையது. தேச வழமையின் ஏற்புடமை பற்றி காலஞ் சென்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஆட்ஸ் ஒ தர்மலிங்கம் செட் அருணாசலம் செட்டி என்ற வழக்கில் கொடுத்த தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"Thesawalamai apples to the Tamils with the Ceylon Domicile and Jaffna inhabitancy"

அதாவது இலங்கை பிரஜாவுரிமையும் யாழ்ப்பாண வாசமும் கொண்ட தமிழர்களுக்கு தேச வழமை ஏற்புடையது என்று கூறப்பட்டது. அதில் மன்னார் மற்றும் வன்னிப் பிராந்தியத்திற்கும் தேச வழமை ஏற்புடையது என்பது தீர்க்கப்பட்ட வழக்குகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

தேச வழமைச் சட்டம் இரண்டு பரிமாணங்களைக் கொண்டது. ஒன்று ஆள் சார் சட்டம் மற்றது இடம் சார் சட்டம். ஆள் சார் சட்டம் என்ற வகையில் அதன் ஏற்புடமை பின்வருமாறு -

ஆள்சார் சட்டம் என்ற முறையில் இலங்கைப்பிரஜாவுரிமையும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும்கொண்ட ஒருவர் தான் தேச வழமைச் சட்டத்தால் ஆளப்படுபவர் என்று கூறுபவருக்கும் தேச வழமையே ஏற்புடையதாகும்.

யாழ்ப்பாண வாசம் கொண்ட ஒவ்வொருவருக்கும் அவரது லௌகீக வாழ்வில் தேச வழமை தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக தேச வழமைச் சட்டத்தை தளமாகக் கொண்டு பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட நியதிச் சட்டமான யாழ்ப்பாணத்தவர் திருமண உரிமைகளும் மண வழியுரிமைகளும் கட்டளைச் சட்டம் (Jaffna matrimonial Rights and Inheritance Ordinance) தேச வழமைச் சட்டம் யார் யாருக்கு ஏற்புடையது என்பதைக் குறிப்பிடுகின்றது.

தேச வழமைச் சட்டத்தால் ஆளப்படும் ஒரு பெண் தேச வழமைச் சட்டத்தால் ஆளப்படாத ஒரு ஆடவனைத் திருமணம் செய்தால் அப்பெண் தனது திருமண காலத்தின்போது தேச வழமைச் சட்டத்தால் ஆளப்படமாட்டாள். அதேபோல தேச வழமைச் சட்டத்தால் ஆளப்படாத ஒரு பெண் தேச வழமைச் சட்டத்தால் ஆளப்படும் ஒரு ஆடவனைத் திருமணம் செய்தால் அவளும் தேச வழமைச் சட்டத்தால் ஆளப்படுவாள்.

இதேவேளையில் வட மாகாணத்திற்கு வெளியே உள்ள ஆதனம் தொடர்பில் ஏதாவது சிவில் வழக்கு நீதிமன்றத்தில் எடுக்கப்படும்போது அந்த வழக்கில் வருகின்ற எதிர்வாதி (Defendant) தான் தேச வழமைச் சட்டத்தால் ஆளப்படுகின்ற பிரசை என்று குறிப்பிடுகின்ற போது அந்த வழக்கின் வழக்காளி எந்த இனத்தவராக இருந்தாலும் அந்த வழக்கு தேச வழமைச் சட்டத்தின் படிதான் விளங்கப்பட வேண்டும். எதிராளிக்கு ஏற்புடைய சட்டம் அதுவே.

### ஆதனச் சட்டம்

தேச வழமைச் சட்டத்தின் இன்னொரு பரிமாணம் யாதெனில் வட மாகாணத்திலுள்ள அசைவற்ற ஆதனங்கள் அவற்றின் உரிமையாளர் யார் என்ற கேள்வியின்றி அவை தொடர்பான வழக்குகள் இலங்கை நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகளுக்கு வருகின்றபோது வழக்காளியோ எதிர்வாதியோ எந்த இனத்தவராக இருந்தாலும் அந்த வழக்கு கட்டாயமாக தேச வழமைச் சட்டத்தால்தான் விசாரிக்கப்பட வேண்டும் என்பதேயாகும்.

### தேடிய தேட்டம்

தேச வழமைச் சட்டத்தில் சீதனம், முதுசொம், தேடிய தேட்டம், முன்வாங்கும் உரிமை எனப் பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேடிய தேட்டம் என்பது ஒரு கணவன் மனைவி இருவரும் திருமணத்தின் பின்னர் உழைத்துச் சம்பாதித்த பணமாகும். இவர்களுக்குப் பிள்ளைகள் இருந்தால் அவை யாவும் பிள்ளைகளுக்கே சொந்தமாகும்.

வழக்கறிஞர்
பொன். நடேலாகசிங்கம்

பிள்ளைகள் இல்லாமல் கணவன் இறந்தால் அரைவாசி கணவனின் ஆட்களுக்கும் மிகுதி மனைவிக்கும் சென்றடையும். இதேபோல் முன்னர் வாழும் வாழ்க்கைத் துணைக்கு அரைப்பங்கு சென்றடையும் என இருந்தது. ஆனால் பிரதம நீதியரசர் சர்வானந்தா அளித்த ஒரு தீர்ப்பின் பிரகாரம் இதில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது.

தேச வழமைச் சட்டத்தின் வரலாற்றில் அது ஒரு திருப்பு முனையாக அமைந்தது. ஒரு மைல் கல் முன்னேற்றம் என்றே சொல்லலாம். அதாவது கணவன் அல்லது மனைவி இறந்தால் வாழும் வாழ்க்கைத் துணை (Living Spouse) தேடிய தேட்டத்தில் ¾ பங்கைப் பெறுவார். மிகுதி ¼ பங்கு இறந்தவருடைய பெற்றோருக்கோ அல்லது சகோதரர்களுக்கோ சென்றடையும்.

### ஆதனப் பரிமாற்றம்

ஒருவர் ஏராளமான சொத்துக்களை விட்டு இறந்தால் அதாவதுமரண சாதனமோ அல்லது வேறு ஆவணங்களோ இன்றி இறந்தால் அந்த ஆதனங்கள் யாவும் சரிசமமாகப் பிள்ளைகளுக்குச் சென்றடையும்.

பிள்ளைகளில் பெண் பிள்ளைகள் எவருக்காவது திருமணத்தின்போது சீதனம் கொடுக்கப்பட்டால் அவர்களுக்கு இறந்தவரது சொத்துக்களில் எந்த உரிமையும் கிடையாது. அதாவது தேச வழமைச் சட்டத்தின் கீழ் ஒரு பெண்ணின் திருமணம் என்பது ஆதனக் கை மாற்றத்துடனேயே இடம்பெறுகின்றது.

அவளுக்குப் பெற்றோர் கன்னிகாதானம் செய்யும்வேளை பூமி தானமும் செய்தே மணமகனிடம் ஒப்படைக்கிறார்கள் என்பதே தேசவழமைச் சட்டத்தின் சீதனம் பற்றிய தாற்பரியமாகும்.

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**117, ஸ்ரேசன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## அறிந்திருக்க வேண்டியவை

* பாவற்காய் அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் இருமல், இளைப்பு, நீரிழிவு, வயிற்றுப்புழு போன்ற பிரச்சனைக்கு நிவாரணம் கிடைக்கும்.

* காலையில் எழுந்தவுடன் 4 தம்ளர் தண்ணீர் தினமும் பருகி வந்தால் மலச்சிக்கல் நீங்கும்.

* வயிற்றுப்போக்கு உள்ளவர்கள் கடுமையான தேயிலைச் சாயம் அருந்தினால் வயிற்றுப்போக்கு கட்டுப்படும்.

* சருமநோய் உள்ளவர்கள் எலுமிச்சம்பழச் சாறு குடித்துவர இந்நோய் குணமாகும்.

* தசை பிடிப்பு உள்ளவர்கள் தேங்காய் எண்ணெயில் கற்பூரத்தை போட்டு சூடாக்கி தசைப்பிடிப்புள்ள இடத்தில் பூசிவர குணமாகும்.

* வல்லாரையில் 1/4 பங்கு எடுத்து இடித்துப் பிழிந்த சாறுடன் சம அளவு தேங்காய் எண்ணெய் கலந்து காச்சி வடிகட்டித் தினமும் இரண்டு தேக்கரண்டி தலையில் அழுத்தி தேய்த்துவர தலைமுடி செழிப்பாக வளரும்.

* சிறிய வெங்காயத்தை 1/4 கிலோகிராம் எடுத்த வெட்டி 1/2 போத்தல் நல்லெண்ணெய் இட்டு வெங்காயம் சருகாகும் வரை காய்ச்சி தலைக்கு அழுத்தி தேய்த்து வர முடி உதிர்வது கட்டுப்படும்.

* துளசிச் சாற்றில் சந்தனம் கலந்து நீராவியை முகத்தில் பிடித்தால் முகத்திலுள்ள அழுக்குகள் பருக்கள் நீங்கும்.

* தேசிப்பழத்தை தணலில் புதைத்து வைத்தெடுத்து இளஞ்சூட்டுடன் தலையில் தேய்த்து 1/4 மணி நேரம் முழுகி வர சொடுகு நீங்கும்.

* காலில் கண்ணாடித் துண்டு குற்றினால் ஓமத்தை வெல்லத்துடன் சேர்த்து பசுந்தையாக அரைத்துக் கட்டினால் எவ்வளவு சிறிய துண்டானாலும் வெளியே வந்து விடும்.

* அல்சர்நோய் உள்ளவர்கள் சாப்பிட முன் 2 கரண்டி தேனை காலையில் தொடர்ந்து குடித்து வந்தால் அல்சர் குணமாகும்.

* கறிமுருங்கைஇலை அதிகளவு இரும்புச்சத்துக் கொண்டது இரும்புச் சத்து குறைபாடுள்ளவர்கள் நாளாந்தம் உணவில் சேர்த்துக் கொண்டால் நல்லது கைகால் குத்துளைவுகள் போக்கும் திறன் உள்ளது.

* விரல்களில் நகச்சுத்து உள்ளவர்கள் மருதோண்டி இலையை கறி மஞ்சளுடன் சேர்த்து அரைத்து கட்டி விட்டால் நகச்சுத்து வீக்கம் சீழ்படிதல் என்பன குறையும்.

* செங்கீரையை சமையலாக செய்து உணவில் சேர்த்து உண்டால் இரத்த அழுத்தம் குறையும்.

* வல்லாரையை உணவில் சேர்த்து உண்டால் இரத்தோட்டம் அதிகரிக்கும்.

* வாயில் கடைப் பகுதியில் அவியல் ஏற்படுவதற்கு சின்ன வெங்காயத்தை சப்பினால் குறையும்.

* பிரண்டைத் தண்டை எடுத்துக் குறுணலாக அரிந்து உப்பும் தூளும் சேர்த்து நெய்யில் வதக்கி உணவுடன் உண்டால் மூல வருத்தம் குணமாகும்.

* கண்நோய் ஏற்படும் போது மாதுளங் குருத்தை கறி மஞ்சளுடன் சேர்த்து அவித்து அவித்தாறிய நீரினால் நாள் ஒன்றிற்கு 3 முறை நோயுள்ள கண்ணைக் கழுவி வர விரைவாக குணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன் [05.11.10 முதல் 12.11.10 வரை]

கலாநிதி துன்னையூர்
ராம் தேவலோகேஸ்வர குருக்கள்
(சாரதாபீட ஜோதிடம்)

## ⁕ மேஷம்



மேஷராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். குடும்ப நிலையில் மகிழ்ச்சியும் சுப நிகழ்வுகளும் ஏற்படும். பண வரவு சற்று இழுபறி தாமத நிலைகளில் அமையும் நிலை உண்டு.

கடன் நிலைகளில் சிறு சிறு இழுபறி நிலையிருக்கும். பெண்களுக்கு மனமகிழ்ச்சி உண்டு. மாணவர்களுக்கு வெற்றிகள் அமையும். எதிர்பார்ப்புகள் ஓரளவிற்கு வெற்றிகொடுக்கும்.

## ⁕ இடபம்



இடபராசி அன்பர்களுக்கு மத்திமமான மந்தமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் சிறு சிறு தடை தாமத நிலைகள் இருக்கும்.

தொழில் நிலைகளில் நிதானம் தேவை. குடும்ப நிலையில் உடல்நிலை சுகயீனம், மருத்துவ செலவு என்பன அமையும். எந்த விடயத்திலும் நிதானம் தேவை.

பெண்களுக்கு மனச்சஞ்சலம் இருக்கும். மாணவர்கள் முயற்சிகள் எடுக்க வேண்டும். முயற்சிகளின் மூலமாகவே வெற்றி இருக்கும்.

## ⁕ மிதுனம்



மிதுனராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றிகள் கிடைக்கும். தொழில் நிலையில் முன்னேற்றகரமான பலாபலன்கள் அமையும் நிலை உண்டு. தந்தை வழியில் நன்மைகள், வரவுகள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபகாரிய நிலைகளும் அமைகின்ற நிலையுண்டு.

பெண்களுக்கு மகிழ்வான விடயம் அமையும். மாணவர்களுக்கு சிறப்புப் பலன் உண்டு. எல்லா வகையிலும் சிறப்பு உண்டு.

## ⁕ கடகம்



கடகராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலன்கள் உண்டு. தொழில் நிலையில் அலைச்சல், இழுபறி நிலைகள் இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் சற்று இழுபறியோடு வெற்றி அமையும். குடும்பத்தில் குதூகலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. பண வரவு திருப்திகரமாக அமையும்.

கடன்நிலை அனுகூலம் தரும். பெண்களுக்கு அனுகூல பலன் உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு. அலைச்சல் இழுபறி நிலையோடு அனுகூலமான பலன் அமையும்.

## ⁕ சிம்மம்



சிம்மராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலா பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் நல்ல வெற்றிகள் கிட்டும். தொழில் நிலையில் முன்னேற்றகரமான பலன்கள் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும்.

குடும்பத்தில் நல்ல சிறப்புகளும் அனுகூலமான பலனும் ஏற்படும். பெண்களுக்கு அனுகூலமான பலனும் உண்டு. மாணவர்களுக்கு நல்ல வெற்றி கிடைக்கும். சிறப்புப் பலன்கள் பலவும் அமையும்.

## ⁕ கன்னி



கன்னிராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில்நிலைகளில் தேவையற்ற அலைச்சல் நிலை இருக்கும். எதிர்பாராத வகை செலவினங்கள் அதிகமாக அமைந்திருக்கும்.

குடும்ப நிலையில் எதிர்பாராத வகையில் செலவு ஏற்படும்.

பெண்களுக்கு மனச் சஞ்சலம் இருக்கும். மாணவர்கள் முயற்சிகள் எடுக்க வேண்டும். சற்று இழுபறியான பலன்களே அதிகமுண்டு.

## ⁕ துலாம்



துலாராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலாபலன்களே அமையும். தொழில் ரீதியில் சிறு சிறு அலைச்சல் இழுபறி நிலைகள் இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் சற்று இழுபறியின் பின்னர் நன்மையுண்டு.

குடும்பத்தில் ஓரளவிற்கு நன்மையான பலன்கள் அமையும். பண வரவில் ஓரளவிற்கு அனுகூலமான பலாபலன் ஏற்படும். பெண்களுக்கு மனச்சஞ்சலம் இருக்கும்.

மாணவர்களுக்கு வெற்றியுண்டு. சற்று பிரச்சினை இழுபறிகளோடு நன்மைகள் ஏற்படும்.

## ⁕ விருச்சிகம்



விருச்சிகராசி அன்பர்களுக்கு அனுகூலமான நற்பலா பலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் முன்னேற்றமுண்டு. பண வரவு திருப்திகரமான நிலையில் அமையும் பலன் உண்டு. குடும்பத்தில் அனுகூலமான பலாபலன்கள் ஏற்படும் நிலையுண்டு.

புதிய முயற்சிகளில் அனுகூலமான வெற்றிகள் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன் உண்டு. பெண்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். மாணவர்களுக்கு வெற்றி உண்டு. சிறப்புகள் உண்டு.

## ⁕ தனுசு



தனுசுராசி அன்பர்களுக்கு சிறப்பான பலாபலன்கள் அமையும். எதிர்பார்ப்புகளில் வெற்றிகள் ஏற்படும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் அனுகூலமான பலன்கள் அமையும். குடும்பத்தில் சிறு சிறு மந்தமான பலன் ஏற்பட்டு மறையும்.

கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் இருக்கும்.

பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு.

பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு நல்ல வெற்றியுண்டு.

## ⁕ மகரம்



மகரராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். தொழில் நிலைகளில் சிறப்பான நிலைகள் அமையும். குடும்ப நிலையில் மகிழ்ச்சியும் சுப நிகழ்வும் ஏற்படும். பண வரவு சற்று மத்திமமான நிலையிலேயே ஏற்படும்.

கடன்நிலைகளில் சற்று சுமாரான மத்திம பலனே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் சற்று நிதானம் வேண்டும். பெண்களுக்கு மனச்சஞ்சலம் இருக்கும். மாணவர்கட்கு முயற்சிகள் வேண்டும்.

## ⁕ கும்பம்



கும்பராசி அன்பர்களுக்கு மிகச் சிறப்பான பலன்கள் அமையும். தொழில் முன்னேற்றங்கள் அனுகூலமானதாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபகாரிய நிலையும் ஏற்படும்.

பண வரவு மிகவும் திருப்திகரமானதாக அமையும் நிலையுண்டு.

கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.

பெண்களுக்கு மன மகிழ்ச்சி உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

## ⁕ மீனம்



மீனராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலாபலன்களே அமையும். தொழில்நிலைகளில் சற்று இழுபறி நிலை இருக்கும்.

எடுக்கும் முயற்சிகளில் சிறு சிறு இழுபறி நிலை தொடரும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் ஏற்படும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் இழுபறி நிலைகள் தொடரும். பெண்களுக்கு ஓரளவிற்கு நன்மைகள் உண்டு. மாணவர்கள் முயற்சிசெய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானிடம் நாங்கள் மென்மையாக நடந்து கொள்வதாக கூறமுடியாது மும்பை தாக்குதல் குற்றவாளியை தண்டிக்க வேண்டும்: ஒபாமா வலியுறுத்தல்



புதுடில்லி

மும்பை தாக்குதல் குற்றவாளியை தண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

நாளை இந்தியாவுக்கு வருகை தரவுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, தனியார் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் பேட்டியளிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாகிஸ்தானிடம் நாங்கள் மென்மையாக நடந்து கொள்வதாக கூற முடியாது. மும்பை தாக்குதல் நடந்ததில் இருந்தே, அத்தாக்குதலில் ஈடுபட்டவர்களை நீதியின் முன்பு நிறுத்துவதில் பாகிஸ்தானுக்கு சர்வதேச பொறுப்பு உள்ளது இதை ஒளிவுமறைவின்றியும், முழுமையாகவும், விரைவாகவும் செய்து முடிக்க வேண்டும் என்று நாங்கள் பாகிஸ்தான் அரசிடம் வலியுறுத்தி வருகி றோம். இந்திய-அமெரிக்க நட்புறவு என்பது, ஒரே மாதிரியான பண்பாடுகள், நலன் கள் அடிப்படையில் அமைந்தது. இந்த காரணங்களுக்காக, இந் தியா, உலக வல்லரசாக உயர்வதை நான் வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன் என்றார்.

## இந்தியா வரும் ஒபாமாவின் பாதுகாப்பு கருதி மரத்திலிருந்த தேங்காய்கள் அகற்றம்

மும்பை,

பாதுகாப்புக் காரணங்களுக்காக ஒபாமா செல்லவுள்ள இடத்திலிருந்த தென்னை மரத்தின் முற்றிய தேங்காய்கள் அகற்றப்பட்டுள்ளன.

தேசத்தந்தை மகாத்மாகாந்தி மும்பை வரும் போது 'மணிபவன்' மாளிகையில் தங்குவது வழக்கம். எனவே இந்தியா வரவுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, மும்பை சுற்றுப்பயணத்தின் போது மணிபவனுக்கு சென்று பார் வையிடுகிறார். இதனால் அவர் செல்லும் இடங்களில் பாதுகாப்பு படையினர் தீவிர ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த நிலையில், மணிபவனில் உள்ள ஒரு தென்னை மரத்தில், முற்றிய தேங் காய்களுடன் உதிர்ந்து விழும் நிலையிலிருந்த பல ஓலைகளையும் பாதுகாப்புக் கருதி மாநாகராட்சி ஊழியர்கள் வெட்டி அகற்றினார்கள்.

## சிறுவனை கடத்தியவர்களை காட்டிக்கொடுத்த கைக்குட்டை

சென்னை

சிறுவன் கீர்த்தி வாசனை கடத்தியவர்களை கண்டுபிடிக்க ஒரு சாதாரண கைக் குட்டையே பொலிஸாருக்கு உதவியுள்ளது.


சிறுவனை கடத்தியவர்கள்

சென்னையில் சிறுவன் கீர்த்திவாசனை கடத்தியதாக விஜய், பிரபு என்ற பொறியியலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நண்பர்களான இருவரும் பெற்றோருக்கு ஒரே பிள்ளைகள் ஆவார்கள். இவர்கள் துறையூரை சேர்ந்தவர்களாக இருந்தாலும், பெற்றோருடன் சென்னையில் தான் வசித்து வந்தனர்.

விஜயின் தந்தை பெயர் ராமையா. இவர், ஓய்வு பெற்ற சுங்கத்துறை அதிகாரி ஆவார். சென்னை திருமங்கலம் பயோனியர் காலனியில் வசித்து வருகிறார்.

பிரபுவின் தந்தை பெயர் கேசவன். இவரும் ஓய்வு பெற்ற மத்திய அரசு ஊழியர் தான். பிரபு அண்ணாநகர் மேற்கு பஞ்சரத்னா அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருகிறார். சிறுவனை விடுவித்துவிட்டு அவனது தந்தை ரமேஷிடம் ரூ.1 கோடி பணத்தை வாங்கிக்கொண்டு இருவரும் நேராக பிரபு வீட்டுக்கு சென்றனர்.

பணத்தை பிரபு வீட்டில் பதுக்கி வைத்து விட்டு விஜய் அவரது வீட்டுக்கு போய்விட்டார். விஜயின் 'ஹீரோஹோண்டா' மோட்டார் சைக்கிளில் தான் இருவரும் தப்பிச் சென்றனர். அந்த மோட்டார் சைக்கிளின் இலக்கம் தெரியாமல் இருக்க ஆரம்பத்தில் கைக்குட்டையால் மறைத்து கட்டப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு மோட்டார் சைக்கிளில் வேகமாக தப்பி செல்லும் போது கைகுட்டை காற்றில் பறந்து சென்றுவிட்டது. இந்நிலையில் அவர்களை விரட்டிக் கொண்டு வந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை குறித்துவிட்டனர். இதை வைத்துத் தான் விஜயின் வீட்டு முகவரியை பொலிஸார் கண்டறிந்தனர்.

இதனைத்தொடர்ந்து விஜய் அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார். அப்போது அவர் மறுப்பு தெரிவிக்காமல் குற்றத்தை ஒப்புக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. அதன்பின்னர் விஜயை அழைத்துக் கொண்டு பிரபுவின் வீட்டுக்கு சென்ற பொலிஸார் அவரையும் பிடித்தனர். இதன் போது பிரபுவின் வீட்டில் பதுக்கி வைக்கப் பட்டிருந்த ரூ.1 கோடி பணமும் மீட்கப்பட்டது. அதன்பிறகு இருவரும் அண்ணாநகர் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

## ஆயிரங்கால் மண்டபம் அருகே பெருமாள் திருவடி கண்டுபிடிப்பு

திருச்சி :



ஸ்ரீரங்கம் கோவில் ஆயிரங்கால் மண்டபம் அருகே, மண்ணில் புதைந்திருந்த பெருமாள் திருவடி கண்டறியப்பட்டதை தொடர்ந்து, பக்தர்கள் கூட்டம் கூட்டமாக சென்று, வணங்கி வருகின்றனர்.

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில், கிழக்கு வெள்ளை கோபுரம் அருகே, தெற்கு பார்த்த நிலையில் ஆயிரங்கால் மண்டபம் அமைந்துள்ளது. கடந்த 500 ஆண்டுக்கு முன், விஜயநகர பேரரசு காலத்தில் கட்டப்பட்டதாக கூறப்படுகிறது.

'ஆயிரங்கால் மண்டப வாயிலில், 10 பெரிய படிக்கட்டு மற்றும் ஒரு சிறிய படிக்கட்டு என மொத்தம் 11 படிக்கட்டு மண்ணில் புதைத்திருப்பதை தோண்ட வேண்டும்' என பல ஆண்டாக பக்தர்கள், கோரிக்கை விடுத்தனர். அங்குள்ள மண்ணை தோண்டினால், மழைநீர் தேங்கும் என்பதால், கோவில் நிர்வாகம் தயங்கியது. கோவில் இணை ஆணையாளர் ஜெயராமன் உத்தரவின் படி, கடந்த 10 நாட்களுக்கு முன், மண்டபத்தின் முன்புறம் இருந்த மண் அகற்றும் பணி ஆரம்பமானது.

கடந்த 20 ஆம் திகதி , மண்டபத்தின் முகப்பு சுவரில் செதுக்கப்பட்டிருந்த, அழகிய, பழமை வாய்ந்த நாட்டியக்கலை சிற்பங்கள் வெளிப்பட்டன. கடந்த சில நாளாக, ஆயிரங்கால் மண்டபம் மேற்புற பகுதியான ஆழிநாடான் திருச்சுற்றில், தோண்டும் பணி நடந்தது. பொக்லைன் இயந்திரம் மூலம், அங்கு மண்ணை தோண்டிய போது, நான்கடி உயரம் கொண்ட நான்கு தூண்களும், அதற்கு நடுநாயகமாக பெருமாள் திருவடியும் கண்டறியப்பட்டது. அங்கு, கூட்டம் கூட்டமாக சென்று மக்கள், வழிபாடு நடத்துகின்றனர்.

ஆயிரங்கால் மண்டபம் முன், 800 அடி நீளம் மற்றும் 30 அடி அகலத்துக்கு நிரம்பியுள்ள மண்ணை மட்டும், தற்போது அகற்றி வருகின்றனர். முதற்கட்டமாக, அரிய சிற்பங்கள் கிடைத்த நிலையில், தற்போது பெருமாள் திருவடி கிடைத்துள்ளது. இன்னும் பல அரிய பொருள் காட்சிக்கு வர, முழுமையாக ஐந்தடி ஆழம் தோண்ட வேண்டும் என பக்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## இலங்கை அகதிகளிடம் பண மோசடி: 3 பேர் கைது

நாகப்பட்டினம்,

வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி, இலங்கை அகதிகளிடம் பணம் பெற்று மோசடி செய்ததாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாகப்பட்டினத்தில், அகதி முகாம்களில் இருந்து வெளியேறி வந்த இலங்கை அகதிகள் 14 பேர் பொலிஸாரால் நேற்று முன் தினம் பிடிபட்டதைத் தொடர்ந்து, அவர்களை அகதி முகாம்களில் இருந்து வெளியேற்றி அழைத்து வந்ததாகவும், வெளிநாடுகளில் கொண்டு போய் விட்டுவிடுவதாகவும் கூறி, அகதிகளிடம் இருந்து பண பெற்று மோசடி செய்த 3 பேரை பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

இந்நிலையில் மீட்கப்பட்ட இலங்கை அகதிகள் அனைவரும் பத்திரமாக மீண்டும் அகதி முகாம்களுக்கே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் புனித றோக் வித்தியாலய மாணவன் சாதனை



யாழ். மாநகர சபைப் பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்ற குருநகர் பகுதியில் கடற்கரையை அண்மித்த ஒரு பாடசாலையாக புனித றோக் வித்தியாலயம் விளங்குகிறது. சேமக்காலையையும் கடற்கரையையும் அண்மித்த பகுதியில் இருக்கும் இப் பாடசாலையில், மாநகரசபை நகர சுத்தித் தொழிலாளர்களின் பிள்ளைகளே கல்வி கற்கிறார்கள்.

இதன் காரணமாக இப்பாடசாலை ஏனையவரின் பார்வையில் சிறுமைப் பட்டு நிற்பதைக் காணமுடிகிறது. இந்த



ஜெராட் நிலக்சன்

வித்தியாலயம் 1953 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

தரம் 1 இலிருந்து தரம் 9 வரை வகுப்புக்கள் கொண்ட இப்பாடசாலை கல்வித் திணைக்களத்தில் மூன்றாம் தரப் பாடசாலையாக விளங்குகிறது.

### பாடசாலை அதிபரின் கருத்து

57 வருடங்களாக அடைவு மட்டத்தில் பின்தங்கிய இப்பாடசாலை இந்த வருட 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளியின் மூலம் மற்றவர்களின் பார்வையில் ஒரு கணிப்பைப் பெற்றிருக்கிறது என்று கூறலாம்.

இப்பாடசாலை தொடர்பாக வித்தியாலய அதிபர் அ. மரியதாசனிடம் உரையாடியபோது இதனை அவர் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில், எமதுபாடசாலைச் சூழலைப் பொறுத்தவரையில் சமூக நெருக்கத்தையும் அதிகமான நிறுவனங்களையும் கொண்டதாகும். ஆசிரியர்களின் உழைப்பினால் மெல்ல மெல்ல எழுந்து இன்று வளர்ச்சியில் இந் நிலைக்கு வந்திருக்கிறது.

இவ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் பெருமளவானோர் காலை உணவு உட்கொள் ளாமலேயே வருகிறார்கள். அவர்களின் வறுமை நிலையே இதற்கான காரணமாகும். இவர்களது வீடுகள் மிகச் சிறியனவாகவும் மின்சாரமோ தளபாட வசதிகளோ இல்லாதவையாகவும் காணப்படுகின்றன. மொத்தத்தில் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் அமைந்துள்ளன.

இவ்வாறான ஒரு சூழலில் இருந்து பாடசாலைக்கு வரும் மாணவர்களைக் கொண்ட நாம் மாணவர்களை இனங் கண்டே இந்த அடைவைப்பெற்றுள் ளோம்.

### மாணவனின் சாதனை

இந்த வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவனான ஜெராட் நிலக்ஷன் 2010 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப்பெற்று அனைவரது பார்வையையும் இப்பாடசாலையின் பக்கம் திருப்பியுள்ளான்.

இவ் அடைவின் பெருமையைக் குறித்து தரம் 5 இல் கற்பித்த ஆசிரியர்களோடு கலந்துரையாடியபோது மிக வறிய நிலையில் எந்த வசதியுமற்ற மாணவர்களைக் கொண்ட நாம் இந்த அடைவைப் பெற்றமை மிகப் பெரிய சாதனை என்று கருதுகிறோம் என்றனர்.

பெரும் போராட்டத்தின் மத்தியில் எமது முதலாவது சாதனையாக இதனை நிலைநாட்டியுள்ளோம். அதிபரின் சிறந்த தலைமைத்துவத்தைக் கொண்டு மாணவர்களின் அடி மட்டப் பிரச்சினைகள் தேவைகளை இனங்கண்டு எமது கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டமையே இந்நிலையை எட்டுவதற்குக் காரணமாக இருந்தது என்றும் ஒரு ஆசிரியரே தரம் 3, 4 ,5 ஆகிய வகுப்புக்களில் தொடர்ந்து கற்பிப்பது அம் மாணவர்களின் உயர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எனவும் தெரிவித்தனர்.

இவ் வித்தியாலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை 225 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். திருநகர், தொடர்மாடி, பெஸ்கி கிராமம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மாணவர்களே கல்வி கற்று வருகிறார்கள். இவ்வித்தியாலயத்தை க.பொ.த. சாதாரண தரம் வரை தரமுயர்த்த வேண்டிய தேவை இருக்கிறது. இங்கு கற்கின்ற மாணவர்கள் மேற்கொண்டு கற்பதற்கு நகரத்திலமைந்துள்ள பெரிய பாடசாலைகளுக்கோ அல்லது வெளிமாவட்டங்களுக்கோ செல்லவேண்டிய தேவை ஏற்படுகிறது. அவ்வாறு கல்வி கற்கச் செல்லும்போது இவர்களின் சமுதாய நிலை காரணமாகப் பல பின்னடைவுகளைச் சந்திக்கிறார்கள். இதன் காரணமாக மாணவர்கள் திறமையிருந்தும் மேற்கொண்டு கல்வி கற்காமல் தொழிலைத் தேடிச் செல்வதும் கல்வி கற்கும் காலத்தில் இடை விலகுவதும் இங்கு காணப்படுகின்றன.

இப் பாடசாலையில் பூங்கா இருந்தும் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் வசதி இல்லை. கணனி அறை இருந்தும் கணனி வசதிகள் போதியதாக இல்லை.

இவற்றோடு தண்ணீர்ப் பிரச்சினை மிக முக்கியமானதாக இருக்கிறது. தற்போது மாநகர சபையால் நீர்த் தாங்கி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தண்ணீர் பற்றாக்குறைப் பிரச்சினையை தீர்ப்பதற்கு யாழ். பிரதேச செயலகம் முதற் கொண்டு பல அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வேண்டுகோள் விடுத்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

இவ்வாறான நிலையில் இலங்கையில் பிரபல்யம் வாய்ந்த ஒரு மாநகர சபை எல்லைக்குள் பாடசாலை அமைந்திருப்பதும் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படாத நிலையில் இருப்பதும் இந்நூற்றாண்டின் நவீனத்துவத்திற்கு சாபக்கேடாக அமைந்திருக்கிறது என்றால் அது தவறல்ல.

## முதன்மை வீராங்கனையாக சண்டிலிப்பாய் இந்து மாணவி

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் நடத்திய மெய்வலுநர் போட்டிகளில் 13 வயதுப் பெண்கள் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி த.சங்கீதா முதன்மை வீராங்கனையாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளார். உயரம் பாய்தல், ஈட்டி எறிதல் ஆகிய நிகழ்ச்சிகளில் முதலாமிடத்தையும் நீளம் பாய்தல் நிகழ்ச்சியில் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளார்.

(படம் - யாழ்ப்பாணம் நிருபர்.)



யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மாணவியான செல்வி அபிராமி கேதீஸ்வரன் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் நல்லூர் வர்த்தகரான திருநாவுக்கரசு கேதீஸ்வரன்-தாரணி தம்பதிகளின் ஏகபுதல்வி ஆவார்.



உங்கள் பாடசாலையின் சாதனைகள் மற்றும் ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

யாழ் ஓசை

117, புகைபிரத வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனானவன் காமக் குரோத எண்ணங்களை விடுத்து நல்மனதுடன் நற்காரியங்களில் ஈடுபட வேண்டும்

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ச.க. சுதர்சன குரு

''உலகமெங்கும் பரந்து வாழும் இந்துப் பெருமக்களால் வருடந்தோறும் மகிழ்வுடன் கொண்டாடப்படுவது தீபாவளி பண்டிகையாகும். எந்த விதமான பாகுபாடுமின்றிக் கொண்டாடப்படும் பண்டிகை தீபாவளிதான் என்றால் அது மிகையாகாது.

ஐப்பசி மாதத்தில் அமாவாசையை ஒட்டிய தினத்தில் வரும் தீபாவளிப் பண்டிகையானது அகப்புற இருள் நீக்கி ஒளி தரும் தினமாகும்.

மனிதனானவன் நரகனைப் போலில்லாமல் தூய மனிதனாக வாழ வேண்டும். காமக் குரோத மதச்சார்யங்களை விடுத்து நற்பண்புகளை வளர்த்து நற் செயல்களைப் புரிவதோடு நற் காரியங்களில் ஈடுபட வேண்டும் என்ற தத்துவத்தை இந்தத் தீபாவளித் திருநாள் உணர்த்துகின்றது'' இவ்வாறு யாழ். வல்லிபுர ஆழ்வார் கோவில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ ச.க. சுதர்சனகுரு தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஸ்ரீராமபிரான் வனவாசம் முடித்து அயோத்திக்கு திரும்பி வந்து பட்டாபிஷேகம் செய்து கொண்ட நாளே தீபாவளித் திருநாளாக கொண்டாடப்படுவதாகவும் திருமாள் மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டு இரண்டு அடிகளால் மண்ணையும் விண்ணையும் அளந்து மூன்றாவது அடிக்காக சக்கரவர்த்தியின் தலை மேல் கால் வைத்து பாதாள உலகினையும் ஆள வைத்தார். மகாபலி ஆண்டுக்கொரு முறை பூமிக்கு வருவதற்கு அருள்புரியும் படியும் அன்றைய நாள் உலக மக்களனைவரும் மிகவும் மகிழ்ச்சிகரமான நாளாகக் கொண்டாடி மகிழ வேண்டும் என்றும் பணிந்து வேண்டியபடியால் பகவானும் மகாபலிக்கு வரம் அருளிய நாளே அந்நாள் என நூல்கள் கூறுகின்றன.

சதுர்த்தசி நாளானது சிவராத்திரி எனப்படும் சிவபெருமானுக்குரிய விசேட தினமாகும். தனக்கு உகந்த திருநாளாகிய சதுர்த்தசியில் சிவபெருமான் கங்காதேவியான கங்கையை பூமிக்கு அனுப்பி வைத்தார். இந்தக் கங்கைக்கும் சிவனுக்கும் நன்றி செலுத்தும் நாளாகவும் தீபாவளித் திருநாள் அமைந்துள்ளது. இந்த சதுர்த்தசியில் தலையில் எண்ணை தேய்த்து கங்கை நீரில் தீர்த்தமாடுவதும் இந்து மக்களின் ஒரு வழக்கமாகும்.

புதிதாக திருமணம் செய்து கொண்ட தம்பதியினருக்கு முதன் முதலாக வரும் தீபாவளி தலை தீபாவளியாகும். பெண் வீட்டினரால் தம்பதியினருக்கு புத்தாடைகள் அளித்து விருந்துபசாரம் செய்து மகிழ்விப்பது தலை தீபாவளி தினத்தில்தான்.

தீபங்கள் வரிசையாக அடுக்கி வைப்பது மாத்திரமல்லாமல் அஞ்ஞான இருளில் இருந்து மனித மனம் விலகும் தன்மைக்கும் தீபாவளி என்பது பொருத்தமாகிறது.

அறியாமை விட்டுக் கொடுக்கின்ற மனப்பான்மையில்லாமை, பெருந்தன்மையில்லாமை, கல்வி இல்லாமை, பகுத்தறிவின்மை இப்படியான தீய குணங்களை அகற்றும் திருநாளாகக் கொள்ளத்தக்கதே தீபாவளியாகும். வசதி படைத்தவர்கள் அன்றைய தினம் ஏழை எளியவர்களுக்கு புத்தாடைகளையும் இனிய உணவுப் பண்டங்களையும் வழங்கி அவர்களை மகிழ்விக்கும் வகையில் கொண்டாடப்படும் நாள் தீபாவளியாகும்.

திருமாலானவர் பத்து அவதாரங்களை எடுத்து பக்தர்களைக் காப்பாற்றினார். அவர் வராக அவதாரம் எடுத்த போது அவரது உஷ்ணத்தை உலகோரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பூமாதேவியானவர் வராக மூர்த்தியைச் சேர்ந்து அந்த வெப்பத்தைத் தணிய வைத்தார். அப்போது தோன்றியவன்தான் நரகன். மனித வடிவில் அசுர குணம் படைத்தவன் நரகாசுரன். அசுரர்கள் பிறந்த உடனேயே வளர்ந்து விடுவார்கள்.

இதனையுணர்ந்த திருமால் அப்போதே அவனை அழித்துவிடத் தீர்மானித்தார். ஆனால் பூமாதேவியானவர் திருமாலைத் தடுத்து ''இப்போது இவனைக் கொல்ல வேண்டாம், இவன் பூலோகமாந்தர்க்கு தீமை செய்ய முயன்றால் நானே இவனை அழித்து விடுகிறேன்'' என்று கூறினார்.

துவாபரயுகம் தொடங்கிய வேளையிலேயே ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவாக திருமால் அவதரித்தார்.

நரகாசுரனின் தொல்லைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து தேவர்களும் முனிவர்களும் மானுடர்களும் பெரும் துன்பமும் கஷ்டமும் அடைந்து கிருஷ்ண பரமாத்மாவிடம் சென்று முறையிட்டனர். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும் நரகனின் தொல்லையை நீக்குவதாக அவர்களுக்கு வாக்குறுதி அளித்து விட்டு சத்தியபாமாவையும் உடன் அழைத்துக் கொண்டு கருடன் மீதேறிச் சென்று புராக்சோதீசபுரம் என்னும் நரகாசுரனின் தலைநகரையடைந்து அவனைப் போருக்கழைத்தார். அப் போரில் நரகாசுரனது படைகளையும் படை தலைவர்களையும் அழித்தொழித்த மாயவனால் நரகாசுரனுடன் போர் புரிந்த போதிலும் அவரால் நரகனை அழிக்க முடியவில்லை. இதனை அவதானித்த சத்தியபாமாவாகிய பூமாதேவியானவர் தானே வில்லேந்தி ஒரே பாணத்தால் நரகாசுரனின் தலையை சீவிக் கொன்றார்.

உயிர் பிரியும் தறுவாயில் நரகாசுரனுக்கு நல்லறிவு உண்டாகியது. தன்னைக் கொல்ல வந்தவர்கள் திருமாலும் தனது தாயாராகிய பூமாதேவியும்தான் என்பதனை நரகன் உணர்ந்தான். உலகோர்க்கும் தேவர்களுக்கும் இழைத்த கொடுமைகளை நினைந்து வருந்தினான்.

அவனது உயிரானது ஒரு ஒளி வடிவமாகத் தோன்றி பகவானையும் தேவியையும் மூன்று முறை வலம் வந்து ஆகாய மார்க்கமாக மேலெழுந்து சென்று மறைந்தது.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவையும் தேவியையும் நரகாசுரனின் மகனான பகதத்தன் என்பவன் வந்து பணிந்து நின்று தந்தையின் தவறுகளை மன்னித்து அவரது ஆவியை ஆசீர்வதிக்கும்படி வேண்டினான்.

பகவானும் பகதத்தன் வேண்டியவாறு ஆசீர்வதித்து இன்று முதல் இந்நாள் பூலோக மாந்தர் அனைவரும் தீபாவளித் திருநாளாகக் கொண்டாடுங்கள் என்று அருள் புரிந்து பகதத்தனையும் பிராக்ஜோதிஷபுர மன்னனாக்கி பூமாதேவியுடன் கருடன் மீதேறி துவாரகை மீண்டார்.

நரகாசுரனது உயிர் பிரியும் வேளையில் ஒளி வடிவமாக அவனது ஆவி பகவானைச் சுற்றி மேலெழுந்து சென்றமையால் இத் தினத்தில் தீபங்கள் ஏற்றி பகவானை வழிபடுவது வழக்கமாகியது.

மனிதன் மனிதத் தன்மையுள்ள மனிதனாக பூமியில் வாழ வேண்டும். மனிதாபிமானம்தான் சமயங்கள் காட்டுகின்ற நல் வழியாகும். இந்த உணர்வுதான் மக்களின் பண்பாடுமாகும். எல்லோரும் வாழ வேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும். சுபீட்சம் நிறைந்த நல் வாழ்வு மலர வேண்டும். சாந்தியும் சமாதானமும் சகோதரத்துவமும் சமத்துவமும் நற்பண்புகளும் நாட்டிற்கும் மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென தீபாவளித் திருநாளில் பகவானைப் பிரார்த்தித்து வணங்கிப் பணிந்து கொள்வோம்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவிலில் ஆண்டுதோறும் தீபாவளித் திருநாளில் மாலையில் நரகாசுரன் போர் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் வேறெங்கும் இந்த நரகாசுரன் போர் விழா நடைபெறுவதில்லையென்பதும் முக்கிய அம்சமாகும். கண்ணன் கழலடி போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது இலங்கை



அவுஸ்திரேலியாவிற்கு எதிரான இருபது-20 போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்களினால் அபார வெற்றியீட்டியுள்ளது.

அவுஸ்திரேலியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி ஒரு இருபது - 20 போட்டியும் 3 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடுகின்றது.

இந்நிலையில் நேற்று அவுஸ்திரேலிய பார்த் மைதானத்தில் நடைபெற்ற இருபது-20 போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்பம் முதலே ஓட்டங்களைப் பெறுவதற்கு தடுமாறிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

அவுஸ்திரேலிய அணி சார்பாக அதிகபட்ச ஓட்டங்களாக 30 பந்துகளில் ஒரு சிக்சர் 3 பௌண்டரிகள் உட்பட 35 ஓட்டங்களை ஹெடின் பெற்றுக் கொண்டார். சிமித் 34 ஓட்டங்களையும் கிளார்க் 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக ரன்தீவ் 4 ஓவர்களுக்கு 25 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களைகைப்பற்றினார்.

பதிலுக்கு 134 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய இலங்கை அணி 16.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

அணித்தலைவர் சங்கக்கார ஆட்டமிழப்பின்றி 43 பந்துகளில் 44 ஓட்டங்களைப்பெற்றார். தவிர டில்சான் (41), ஜெஜவர்த்தன (24) ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக நநீஸ், சிடில், சிமித் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதன் மூலம் இருபது-20 போட்டியை வென்ற இலங்கை அணி அடுத்து 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

# கிண்ணத்தை வென்றார் மேக்னஸ் கார்ல்சன்

7 புள்ளிகள் பெற்ற மேக்னஸ் கார்ல்சன் முதலிடம் பிடித்து தொடர்ந்து இரண்டாவது முறையாக கிண்ணத்தினை வென்றார்.

உலகின் 6 முன்னணி வீரர்கள் பங்கேற்கும் 'பெர்ல் ஸ்பிரிங் செஸ்' தொடர் சீனாவின் நான்ஜிங் நகரில் நடந்தது. இதில் இறுதிப் போட்டியில் நோர்வேயின் மேக்னஸ் கார்ல்சன், அசர்பைஜான் வீரர் காஷிமோ ஆகியோர் மோதினர். விறுவிறுப்பாக நடந்த இப் போட்டியில் ஐந்து மணி நேர போராட்டத்துக்கு மேக்னஸ் கார்ல்சன், அசர்பைஜான் வீரர் காஷிமோவை சமன் செய்தார். இதன் மூம் 7 புள்ளிகளைப் பெற்ற மேக்னஸ் கார்ல்சன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டார்.

# அதிரடியில் வென்றது பாகிஸ்தான்



பாகிஸ்தான்- தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 2 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட்டினால் வெற்றி பெற்றுள்ளது.

பாகிஸ்தான்- தென்னாபிரிக்க அணிகள் மோதும் இரண்டு இருபது-20, 5 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் அபுதாபி மற்றும் டுபாயில் நடைபெறுகின்றது. இதில் இருபது-20 போட்டியில் வெற்றி பெற்று தொடரை 2-0 என்ற அடிப்படையில் தென்னாபிரிக்க அணி கைப்பற்றியது.

இந்நிலையில் 5 ஒரு நாள் போட்டிகளைக் கொண்ட தொடரின் 2 ஆவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பாக இங்கிரம் 100 ஓட்டங்களையும் அம்லா 65 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக அப்ரிடி, ரியாஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 287 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய பாகிஸ்தான் அணி அபார துடுப்பாட்டத்தினால் 49.5 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 289 ஓட்டங்களைப்பெற்று ஒரு விக்கெட்டினால் வெற்றியீட்டியது.

பாகிஸ்தான் அணி சார்பாக சிறப்பாக துடுப்பெடுத்தாடிய அப்துல் ரஸாக் ஆட்டமிழப்பின்றி 10 சிக்ஸர்கள் 7 பௌண்டரிகள் அடங்கலாக 109 ஓட்டங்களைப் பெற்றார். தவிர அப்ரிடி (49), அலாம்(48) ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக லங்வெல்ட் 3 விக்கெட்டுக்களை பெற்றார். இதன் மூலம் 5 ஒருநாள் போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் 1-1 என்ற நிலையில் சமநிலை வகிக்கின்றன.

# பயிற்சியளிக்க ஆர்வமாக உள்ளேன்



இங்கிலீஷ் பிரிமியர் லீக் கால்பந்து தொடரில், பங்கேற்கும் அணிகளுக்கு பயிற்சி அளிக்க ஆர்வமாக உள்ளதாக மரடோனா.

ஆர்ஜென்டீனா கால்பந்து ஜாம்பவான் மாரடோனா. இவரது தலைமையில் ஆர்ஜென்டீனா அணி 1986 ஆம் ஆண்டு உலக கோப்பை வென்றது. 1994 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற இவர் 2008 ஆம் ஆண்டு ஆர்ஜென்டீனா அணியின் பயிற்சியாளரானார்.

சமீபத்தில் தென் ஆபிரிக்காவில் நடந்த உலககோப்பை தொடரில் ஆர்ஜென்டீனா காலிறுதியுடன் வெளியேறியது. இதனையடுத்து பயிற்சியாளர் பதவியிலிருந்து மரடோனா நீக்கப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை தனது 50 ஆவது பிறந்தநாளை கொண்டாடிய மரடோனா. தனது எதிர்கால திட்டங்கள் குறித்து கூறுகையில் முறையான எந்தக் காரணமும் தெரிவிக்காமல், ஆர்ஜென்டீனா கால்பந்து கூட்டமைப்பு என்னை தூக்கி எறிந்து விட்டது. அவர்களிடம் நான் எதுவும் பேச விரும்பவில்லை. எனது அணியை இழந்து விட்டேன் என்பதற்காக மட்டும் வருந்துகிறேன்.

இங்கிலீஷ் பிரிமியர் லீக் கால்பந்து தொடரில் பங்கேற்கும் அணிகள் திறமை வாய்ந்தவையாக உள்ளன. ஆனால் சரியான பயிற்சியாளர்கள் இல்லை.

அந்த அணிகளுக்கு பயிற்சி அளிக்க ஆர்வமாக உள்ளேன் என்று தெரிவித்தார்.

# கோல்ப் தரவரிசையில்



முதல் தர கோல்ப் தரவரிசையில் இங்கிலாந்து வீரர் லீ வெஸ்வுட் முதலிடத்தை பிடித்துள்ளார். இதன் மூலம் தரவரிசையில் 281 வாரங்கள் தொடர்ந்து முதலிடத்திலிருந்த அமெரிக்க வீரர் டைகர் வூட் வெஸ்ட் புட் பின்தள்ளப்பட்டார்.

கோல்ப் தரவரிசைப்பட்டியலிவ் ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போது தான் ஐரோப்பியர் ஒருவர் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். இதற்று முன்னர் 1994 ஆம் ஆண்டு நிக் பல்டே முதலிடம் பிடித்தமை குறிப்பிடத்தக்கது. தரவரிசையில் 8.29 புள்ளிகளுடன் வெஸ்ட்வுட் முதலிடத்திலும், 8.13 புள்ளிகளைப் பெற்று டைகர் வூட்ஸ் 2 ஆம் இடத்திலும் 7.98 புள்ளிகளைப்பெற்று மார்டின் மைகர் 3 ஆம் இடத்திலும் உள்ளனர். கோல்ப் விளையாட்டில் முடி சூடா மன்னனாக திகழ்ந்த டைகர் வூட்ஸ் அண்மையில் பல் சர்ச்சைகளில் சிக்கியமையோடு தமனைவியை விவாகரத்து செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கிம் கிலிஸ்டஸ் சம்பியன்



டோஹாவில் நடைபெற்று வந்த உலகின் முதற்தர வீராங்கனைகள் 8 பேர் பங்குபற்றிய பெண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் கிம் கிலிஸ்டஸ் சம்பியன் பட்டத்தை வென்றார். அத்தோடு அவருக்கு 1,450,000 அமெரிக்க டொலர்கள் பரிசாக வழங்கப்பட்டது.

சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டி கத்தார் தலைநகர் டோஹாவில் நடைபெற்றது. இதில் உலக தர வரிசையில் முதல் 8 இடங்களை பிடித்த வீராங்கனைகள் பங்கேற்றனர். இதன் அரை இறுதிக்கு முதல்தர வீராங்கனை கரோலின் ஸ்வோனியாக்கி (டென்மார்க்), கிம்கிலிஸ்டர்ஸ் (பெல்ஜியம்), ஜூவானரேவா (ரஷ்யா), சமந்தா ஸ்டோசர் (அவுஸ்திரேலியா) ஆகியோர் தகுதி பெற்றனர்.

விக்டோரியா (பெலாரஸ்), பிரான்செஸ்கோ (இத்தாலி), ஜெலீனா ஜான்கோவிக் (செர்பியா), எலீனா டெமன்டிவா (ரஷ்யா)ஆகியோர் போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அரை இறுதி ஆட்டத்தில் கரோலின் வோஸ்னியாக்கி இரண்டாம் நிலை வீராங்கனையான ஸ்வோனரிவாவை எதிர்கொண்டார். இதில் வோஸ்னியாக்கி 7-5, 6-0 என்ற நேர்செட் கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றார்.

மற்றுமொரு அரை இறுதியில் 3-ம் நிலை வீராங்கனையான கிம்கிலிஸ்டர்ஸ்-5ம் நிலை வீராங்கனையான சமந்தா ஸ்டோசரை எதிர்கொண்டு 7-6, 6-1 என்ற நேர்செட் கணக்கில் வென்றார்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற விறுவிறுப்பான இறுதி ஆட்டத்தில் கிம் கிலிஸ்டர்ஸ், கரோலின் ஸ்வோனியாக்கியை 6-3, 5-7, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வென்று கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டார்.



Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday November 05, 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org